விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு
Valampurii

ஓங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 19 ஞாயிற்றுக்கிழமை (01.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 104

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 300 கோடி ரூபாய் வருமானம் திரட்ட

# வரியை திடீரென அதிகரித்தது அரசு!

## மோ. வாகனங்கள், சிகரெட், மதுபானம் என்பவற்றின் விலைகள் அதிகரிக்கும்

(கொழும்பு)

கார், வான், முச்சக்கர வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் உட்பட மோட்டார் வாகனங்கள் என்பவற்றின் வரிகளும் சிகரெட், பியர் மற்றும் மதுபானம் என்பவற்றின் வரிகளும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. சிகரெட் மற்றும் மதுபானவரி அதிகரிப்பதன் மூலம் மேலும் சுமார் 300 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என நிதி அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## வரி அதிகரிப்பு ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

வாகன, மதுபானம் மற்றும் புகையிலை என்பவற்றுக்கான உற்பத்தி வரிகளை அரசாங்கம் அதிகரித்தமைக்கான நோக்கம் சர்வதேச நிதி நிறுவனத்தினால் தற்சமயம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கடனை மீளப் பெறாதிருப்பதற்கே ஆகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹார்சா டி சில்வா இவ்வாறு குறிப்பிட்டார்.

(இது தொடர்பான விரிவான செய்தி 02ஆம் பக்கத்தில்) (எ-11)

## அரசுடன் கூட்டமைப்பு பேசுவதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை

### சுரேஸ் எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தை மூன்றாவது தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் இடம்பெற வேண்டும் என கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காணவேண்டும் எனற உண்மையான சரிசனையைக் கொண்டிருந்தால் அரசாங்கமும், சுதந்திரக் கட்சியும் இது குறித்து தீவிரமாக பரிசீலிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் நாம் ஒரு வருடத் (24ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுத் தலைவரை பழிவாங்குவதற்கு பொதுமக்கள் இடமளிக்க மாட்டார்கள்

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கண்டி)

லிபியாவின் தலைவர் கடாபியை போன்று பாதையில் இழுத்துச் சென்று நாட்டுத் தலைவரை பழிவாங்குவதற்கு இந்த நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் கூறினார்.

நேற்று மாலை கண்டி போகம்பரை மைதானத்தில் இடம்பெற்ற ஒன்றிணைந்த நாடு என்ற பொதுக்கூட்டத் தொடரின் முதலாவது கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, (24ஆம் பக்கம் பார்க்க)



## எதிர்த்து வாக்களித்த நாடுகளுக்கு ஆலோசனை

(கொழும்பு)

ஜெனிவா ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராகவும் பிரேரணைக்கு ஆதரவாகவும் வாக்களித்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவர்களை இலங்கைக்கு அழைத்து, அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில் சித்திரை புத்தாண்டு காலத்தில், இலங்கை வரவுள்ள இந்த தூதுவர்கள், தனித்தனியாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித் (24ஆம் பக்கம் பார்க்க)

### செட்டிக்குளத்தில் திடீர் சூறாவளி

## இடைத்தங்கல் முகாம்களில் இருந்த 2 ஆயிரம் பேர்வரை கடும் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளத்தில் நேற்று மாலை திடீரென வீசிய சூறாவளியினால், மனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் சுமார் 2 ஆயிரம் பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

மனிக்பாம் ஆனந்தகுமாரசாமி முகாமே மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இங்கு 200க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. கூரைத் தகடுகள் பறந்து சென்று தாக்கியதில் பலர் காயமடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இதுவரையில் 9 பேர் காயமடைந்து செட்டிக்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மீட்புப் பணிகள் தொடர்வதாகவும் நேற்றிரவு பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

கதிர்காமர் முகாமில் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வீடுகள் சேதமடைந்திருப்பதனாலும் மழை பெய்ததனாலும் மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளதுடன் தொலைபேசி சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

மாலை ஐந்தரை மணியளவில் திடீரென காற்றுடன் மழை பெய்ததுடன் ஐஸ் கட்டிகளும் வீழ்ந்ததாகவும், திடீரென மழை வெள்ளம் தற்காலிக வீடுகளுக்குள் புகுந்ததாகவும் அங்குள்ளவர்கள் கூறினர்.

திடீர் சூறாவளியினால் பல வீடுகள் பிடுங்கி எறியப்பட்டிருக்கின்றன. கூரைத் தகடுகள் பறந்து சென்று (24ஆம் பக்கம் பார்க்க)

உங்களது அனைத்து வகையான பாவனை (Bill, Reload) கட்டணங்களை ஒரே இடத்தில் செலுத்திக் கொள்ளுங்கள்!

Dialog | Sri Lanka Telecom | airtel | etisalat | Sri Lanka Telecom Mobitel We Care. Always. | (CEB) | WESTERN UNION MONEY TRANSFER | HSBC

வெளிநாடுகளில் இருந்து உங்கள் உறவுகளிடம் இருந்து வரும் பணத்தை WESTERN UNION பணப்பரிமாற்ற முறை மூலம் கணப்பொழுதில் பெற்றுக் கொள்ளலாம்.
இவ் அனைத்து சேவைகளையும் தாமதம் இன்றி இலகுவாக பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள் அருகில் உள்ள
சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சி அறைகளை


ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். | சுன்னாகம் | மானிப்பாய் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சங்கானை

SINGER EXPRESS PAY

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிலம் இல்லாத அரசியல் தீர்வு தமிழர்களுக்குப் பயன்படாது!

## மாவை எம்.பி முழக்கம்



தமிழர்களுக்கு உடனடித் தேவை அரசியல் தீர்வு என்றாலும் அதற்கு முன்பு வடக்கில் இராணுவம் நிலைகொண்டுள்ள இடங்களை மீட்க வேண்டும். நிலம் இல்லாத அரசியல் தீர்வு தமிழர்களுக்கு பயன்படாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஏற்பாட்டில் மூதறிஞர் தந்தை செல்வாவின் ஜனன தின நிகழ்வு நேற்று நாவலர் கலாசார மண் டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. நாம் தேசிய இனம். ஒவ்வொரு குடிமகனுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. அதையாரும் பறித்துவிட முடியாது.

தமிழினம் வரலாற்று பெருமை வாய்ந்த இனம். அதன் தனித் தன்மைகளை யாரும் மழுங்கடித்து விட முடியாது. ஏனைய இனங்களை விட தமிழினம் கலை, கலாசார, பண்பாட்டில் தனித் தன்மை வாய்ந்தது.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு உடனடித் தேவை. ஆனால் அதற்கு முன்பு வட பகுதி யில் பொது மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இராணுவ பிரசன்னம் நீக்கப்பட வேண்டும் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையில் உள்ளது.

இது தவிர ஐ.நா.மனித உரிமைக் கூட்டத் தொடரில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இலங்கையிலுள்ள தமிழர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுப்பதில் சர்வதேச நாடுகள் உன்னிப்பாக செயற்படுகின்றன.

ஐ.நா.மனித உரிமைக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாகவும் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகவும் வாக்களித்த நாடுகள் மட்டும் தான் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான நாடுகள் என்று கூறிவிட முடியாது. கூட்டத் தொடரில் பங்கேற்காத பல நாடுகள் இன்னும் உள்ளன.

அத்தோடு பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள் எல்லாம் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான நாடுகள் என்று கூறிவிட முடியாது. தமது நாடுகளில் உள்ள மக்களினால் கொடுக்கப்படும் அழுத்தத்தை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டும் இராஜதந்திர ரீதியாக இவ்வாறு ஆதரவு வழங்கியுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-6)

## கழுத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்

கழுத்தில் மர்மமான முறையில் வெட்டப்பட்ட நிலையில் படுகாயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்றிரவு 9 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

மூலவைச் சந்தி மடம் வீதியைச் சேர்ந்த விஜயன்(வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் வெட்டுக்காயத்துடன் சுயநினைவை இழந்த நிலையில் நேற்று காலை 8.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-4;11)



தாய் மண்ணிற்கு 21 பிள்ளைகளை வழங்கிய பலாங்கொடையைச் சேர்ந்த தாய் ஒருவரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அபிமன் மாதா விருது வழங்கி கௌரவித்தார்.

பலாங்கொடையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே, எச்.எம்.பொடிநோனா என்ற மேற்படி தாய்க்கு விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சர்களான ஜோன் சென விரத்ன, பவித்ரா வன்னியாராச்சி சப்ரகமுவ மாகாண ஆளுநர் வி.ஜெ.மு. லொகுபண்டார உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டுள்ளதைப் படங்களில் காணலாம். *(நன்றி: தமிழ் மிரர்)*

## இணுவில் பொதுநூலக 10-ம் ஆண்டு நிறைவு

இணுவில் பொது நூலகம் மற்றும் சனசமூக நிலையத்தின் புனருத்தாரண பத்தாம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கல் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் தலைவர் க.ஜனார்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் எம்.ஜெசு கலந்து கொள்ளவுள்ளார். (எ-1)

## ஐ.எம்.எப் இன் நிபந்தனையை நிறைவேற்றவே வரிகள் அதிகரிப்பு

### ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்.) நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காகவே நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் அறிவிக்கப்பட்ட வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொருளியலாளரும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷா டி சில்வா கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் சபைக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. இடை நிறுத்தப்பட்டுள்ள கடன் விவகாரம் அக் கூட்டத்தின்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இடை நிறுத்தப்பட்ட இந்த பணத்தைப் பெறுவதற்கு அரசாங்கம் கடுமையாக முயற்சிக்கின்றது.

இதற்காக பொருட்களின் விலைகளை அதிகரித்தல், வட்டி வீதங்களை அதிகரித்தல், நாணய மதிப்பிறக்கம் உட்பட பல விடயங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வரி அதிகரிப்பானது திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஐ.எம்.எவ் கூட்டத்திற்காக தயார்படுத்தப்பட்டதைப்போல் தென்படுகிறது என ஹர்ஷா டி சில்வா கூறியுள்ளார். (எ-11)

## சசிகலா மீதான சட்ட நடவடிக்கையை இரத்துச் செய்தார் ஜெயலலிதா

(சென்னை)

அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்டிருந்த தனது உடன்பிறவா சகோதரி சசிகலா மீதான கட்சி ரீதியான ஒழுங்கு நடவடிக்கைகளை இரத்துச்செய்துள்ளதாக அக் கட்சியின் பொதுச் செயலாளரும், தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

ஆயினும், நடராஜன் மற்றும் திவாகரன் உள்ளிட்ட சசிகலாவின் உறவினர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகளில் எந்தவித மாற்றமும் இல்லை என்றும் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா, அவரின் கணவர் நடராஜன் உள்ளிட்ட குடும்பத்தினர் அனைவரும் கடந்த டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி அ.தி.மு.க வில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர் நடராஜன், ராவணன் மற்றும் திவாகரன் உட்பட சசிகலாவின் உறவினர்கள் சிலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்நிலையில், சசிகலா கடந்த 28 ஆம் திகதி வெளியிட்டிருந்த அறிக்கையில், ஜெயலலிதாவுக்கு கனவிலும் தான் எவ்வித துரோகமும் நினைக்கவில்லை எனவும், அவருக்கு துரோகம் இழைத்தவர்களுடான உறவுகளைத் துண்டித்து விட்டேன் எனக் கூறியிருந்தார்.

இதனையடுத்து, சசிகலாவின் விளக்கத்தை ஏற்று அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை களை இரத்துச் செய்வதாக ஜெயலலிதா நேற்று அறிவித்தார்.

சசிகலா மீதான கட்சி ஒழுங்கு நடவடிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டதையடுத்து, அ.தி.மு.க. உறுப்பினராக அவர் தொடர்ந்து நீடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-11)

BARATHY
சித்தன்கேணி
O/L DAY CLASS
நாளை ஆரம்பம்
02.04.2012 திங்கள் 8.00 am
நீங்கள் நன்கு அறிந்த இப்பிரதேசத்தின் மிக பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம் தேவா | கணிதம் சிவரூபன் |
| தமிழ் பாலா குகபரன் | வரலாறு சுதன் பார்த்தீபன் |
| ஆங்கிலம் விஜயபாஸ்கர் மனோகரன் | சமயம் N.T. தரன் |
| வர்த்தகம் திருக்குமரன் | விவசாயம் விஸ்ணுதேவன் |
| சுகாதாரம் பார்த்தீபன் | நாடகம் கஜிதரன் |

புவியியல் : சர்வேஸ்வரன்
(C-6225)
Note: இம்முறை 80 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
♦ அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.

MOORTHY GUEST HOUSE
மூர்த்தி கெஸ்ற் கவுஸ்
62/20 Stanly Road Jaffna (2nd Floor)
A/C, Non A/C Rooms, Hall
T.P.- 021 221 9399
(C-6224)



O/L Day Classes
ஏப்ரல் 04இல் ஆரம்பமாகிறது
The Express Institute
Irupalai, Kopay.
(C-6220)

புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு
நல்லூர் செட்டித்தெருவில் அழகான புத்தம் புதிய மாடி வீடு தொழில்நுட்ப வல்லுனரால் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தியடைந்த நிலையில் விற்பனைக்குண்டு.
காணி சுயவிபரம், சுவர்களால் அமைந்த இடம், சகல வசதிகளையும் உடைய புதிய வீடு, முன்னுரிமை அடிப்படையில், விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு :-
0772470590
0778543106
(8054)

A/L கலை, வர்த்தக மாணவர்களுக்கு
பொருளியல் K. பிரதீபன்
(C-6226)

சேவை முகவர்
காணிகள், வீடு விற்பனைக்கு
யாழ். கச்சேரி A9 5பரப்பு, பலாலி வீதி 3 1/2, மணல்தறை லேன், நுணாவில் தென்னந்தோட்டம் 21 பரப்பு, யாழ்.நல்லூரில் விற்கவிரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்
V. சுந்தரம் 0774819801
(C-6164)

செல்லா சினிமா-யாழ்ப்பாணம்
30.03.2012 முதல்
தனுஷ். ஸ்ருதிஹாசன் பிரபு மற்றும் பலர் நடித்த




(C-6210)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711
(7379)

## சீர்காழி ஜி.சிவசிதம்பரத்தின் இசைக் கச்சேரி

(வற்றாப்பளை)

கண்ணகி அம்மன் ஆலய மஞ்சத் திருவிழாவை முன்னிட்டு தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு வருகை தரவுள்ள **பத்ம ஸ்ரீ - கலைமாமணி** டாக்டர் சீர்காழி ஜி.சிவ சிதம்பரத்தின் இன்னிசைக் கச்சேரி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 7.45 மணிக்கு ஆலயத்தில் நடைபெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

(அ-2)

## யோகர் சுவாமிகளின் 48 ஆவது குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

தவத்திரு யோகர் சுவாமிகளின் 48 ஆவது குருபூசைத்தின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிவதொண்டன் நிலையப் புராண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அன்றைய தினம் சுவாமிகளின் திருமேனிக்கு சிவதொண்டன் நிலைய புராண மண்டபத்திலும் திருவடிக்கு கொழும்புத்துறை ஆச்சிரமத்திலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

(அ)

# குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளின் கடற்படையில் பயிற்சி பெற்று இலங்கை இராணுவத்திற்கெதிராக தாக்குதல் நடத்தியவர் எனக்குற்றஞ் சாட்டப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் குறித்த நபரால் சுதந்திரமாக வழங்கப்படவில்லை எனக் கூறப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றால் நிராகரிக்கப் பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதியன்று கடற்புலிகளோடு தொடர்புடையவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினரால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டார்.

வடமராட்சி செம்பியன்பற்றினை நிரந்தர வசிப்பிடமாக கொண்ட வில்லியம் மங்களதாஸ் எனும் நபரே கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டவராவர்.

தற்போது மாதகலில் வசித்து வரும் குறித்த நபருக்கெதிராக 3 குற்றச்சாட்டு பத்திரம் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப் பட்டது.

போரின் இறுதிக்காலங்களில் குற்றத் தடுப்பு பொலிஸாரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டு 20 மாதங்கள் வரையில் பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கெதிராக விடுதலைப்புலிகளின் கடற்படையில் விசேட பயிற்சி பெற்றவர், புலனாய்வுத் தகவல்களினை திரட்டியவர், இராணுவ முகாம்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தினார் எனப்பல குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன.

இவ்வழக்கு நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி எம்.நெமீடீயஸ் குறித்த நபரினால் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்ற குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நம்பகத்தன்மையற்றது எனவும் இது அவரினால் சுயமாக வழங்கப்படவில்லை எனவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு முன்னால் வழங்கியதாக கூறப்படும் இவ் வாக்குமூலம் வேறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களினால் குறிப்பாக குறித்த நபரினை கட்டாயப்படுத்தியே இவ்வாக்குமூலத்தில் கையொப்பமிடப் பட்டுள்ளது எனவும் வாதாடினார்.

மன்றின் விசாரணைகளின் பின்னர் குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சட்டத்தின் தேவைப்பாடுகளிற்கிணங்க பதிவு செய்யப்படவில்லை என்றும் குறித்தவரினால் சுயேட்சையாக வழங்கப்படவில்லை எனவும் இதனை ஒரு சான்றாக மன்று ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் கூறி குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ்.மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபருக்கெதிராக வேறு ஏதேனும் சான்றுப் பொருட்கள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காகவும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காகவும் அடுத்த மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(அ-4)

## இராசி பலன்

01.04.2012

(பங்குனி 19, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு

நவமி முற்பகல் 9.46 மணிவரை

பூசம் பின்னிரவு 5.35 மணிவரை

இராகுகாலம் 4.41-6.11 மணிவரை

சுபநேரம் 9.11-10.41 மணிவரை

உலக கோமாளிகள் தினம்.

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமை சேரும் நாள், உறவினர் வருகையுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**இடபம்** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்** உன்னதமான வாழ்வமைய அடித்தளம் அமைக்கும் நாள், வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்வதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், உடல் நலம் சிராகி உற்சாகமடைவீர்கள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிங்கம்** பிறரது பொறுப்புக்களையும் ஏற்பதால் மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் காண வேண்டிய நாள்.

**கன்னி** வருங்கால நலன்கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், விருந்தினர் வருகையுண்டு, காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரும் நாள்,எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், ஆரோக்கியம் சீராகும்.

**விருச்சிகம்** புதிய பொருட்சேர்க்கையுண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வெற்றி வாய்ப்புக்கள் வந்து சேர விநாயகரை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு** கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம்.

**மகரம்** நினைத்த காரியம் நிறைவேறலாம், விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், எடுத்த கருமங்களில் வெற்றி கிடைக்கும், உறவு, பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், கடன் பிரச்சினைகளை சாதுரியமாக பேசி சமாளிப்பீர்கள்.

**மீனம்** சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பிள்ளைகளின் கல்வி நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், தொழில் வளர்ச்சி ஏற்படும், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் 13 அணிகள் பங்கு கொள்ளவுள்ளன. இப்போட்டியின் இறுதி நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண கைத்தொழில் திணைக்கள கணக்காளர் எஸ்.அகிலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

(அ)

## வாரம் ஒரு தகவல்

# கோபம் கொடியது

"அம்மா... தாயே...!"

"யார் இந்த இரவு நேரத்தில்?"

"பசிக்கிறது... சாப்பிடுவதற்கு ஏதாவது இருந்தால் கொடுங்கள்..."

"அம்மா வீட்டிலே இல்லை... நான்தான் இருக்கின்றேன்..."

"நீங்களென்றாலும் ஏதாவது கொடுங்கள்"

"கொடுப்பதற்கு எதுவுமில்லை... போய் வாருங்கள்"

"அப்படிச் சொல்ல வேண்டாம். அது மிகவும் பாவம்"

"என்ன எனக்கு நீ புத்தி சொல்கிறாயா?"

"நான் யார் தெரியுமா?"

"தெரியும். நான்கு கார்... இரண்டு பங்களாவிற்கு சொந்தக்காரர். அது தெரிந்துதான் வந்திருக்கிறேன்"

"அதற்காக இப்படி இந்த நேரத்திலே வந்து தொந்தரவு செய்வது? பிரேசில் நாட்டிலே நடப்பது மாதிரி நீங்களும் செய்தால் உங்களுக்கு இது தொந்தரவாக இருக்காது"

"அங்கே என்ன நடக்கின்றது?"

"ஒவ்வொரு வீட்டிலேயும் இரவுச் சாப்பாடு நிறைவுற்றதும் மிகுதி உணவுகளை ஒரு பொட்டலமாகக் கட்டி வாசற்படியிலே அதற்கென்று ஒதுக்கப்பட்ட பானையிலே வைத்து விடுவார்கள். எங்களைப் போன்றவர்கள் பேசாமல் வந்து அதை எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். பிச்சை போடுங்கள் என்று கேட்க வேண்டிய அவசியமில்லை"

"காலம் மிகவும் கெட்டுப்போய் விட்டது"

"என்ன சொல்கிறீர்கள்?"

"என்னை மாதிரி ஒரு பெரிய மனிதனுக்கு உன்னை மாதிரி ஒரு பிச்சைக்காரன் யோசனை சொல்கின்ற அளவிற்கு நிலைமை போய் விட்டது பார்த்தீர்களா?"

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்... அறிவுள்ளவர்கள் யாரும் ஆலோசனை சொல்லலாம்"

"அப்படியென்றால் எனக்கு அறிவில்லை என்று சொல்கின்றாயா? உனக்கு சோறும் கிடையாது... தண்ணீரும் கிடையாது போய் வா"

"பிச்சை போட முடியாது என்று சொன்னால்கூட பரவாயில்லை... ஆனால், அதற்காக இப்படி கோபப்பட வேண்டாம். அது மிகவும் கொடியது"

"அடே!"

"பார்த்தீர்களா? மறுபடியும் கோப்படுகிறீர்கள்! அது வேண்டாம் விட்டு விடுங்கள். எதற்காக சொல்கின்றேன் என்றால்... பக்கத்து நகரத்திலே உங்களை மாதிரி ஒரு பணக்காரர் இருந்தார். உங்களை மாதிரியே கோபப்பட்டார். என்ன ஆகிவிட்டது தெரியுமா?"


"என்ன ஆகிவிட்டது?"

"அதுதான் பார்க்கிறீர்களே... நான்தான் அந்த மனிதர்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 40 | 30 | 30 |
| தக்காளி | 15 | 30 | 20 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 |
| கோவா | 15 | 10 | 15 |
| கரட் | 40 | 30 | 30 |
| பூசணி | 30 | 20 | 20 |
| புடோல் | 25 | 40 | 45 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 40 | 60 | 40 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 80 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கரணைக்கிழங்கு | -- | 60 | -- |
| பயற்றங்காய் | 50 | 40 | 70 |
| லீக்ஸ் | 50 | 70 | 60 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 40 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 200-300 | 300 | 250-300 |
| போஞ்சி | 40 | 70 | 60 |
| கத்தரி தம்புள்ள | -- | 20 | 40 |
| கீரை - 1 பிடி | 8-15 | 30 | 20 |
| தேசிக்காய் | 40 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 25 | 30 |
| வெங்காயப்பூ | -- | -- | -- |



மூதறிஞர் தந்தை செல்வாவின் 114 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு நேற்று அவரது உருவச் சிலைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, தமிழரசுக் கட்சியின் உப செயலாளர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் மலர்மாலை அணிவிப்பதையும் தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தின் தலைவர் அருட்தந்தை ஜெபநேசன் உரையாற்றுவதையும் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலர்தூவி வணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)*

# அரசு ஜெனீவாவின் தீர்மானத்தை நகைச்சுவையாகக் கருதுகின்றது

### *ரவி கருணாநாயக்க எம்.பி. தெரிவிப்பு*

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசாங்கம் நகைச்சுவையாகக் கருதுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும் அரசாங்கம் தனது முரண்பாட்டுக் கொள்கைகளிலிருந்து சற்றும் மாறவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நகைச்சுவையாகவே கருதுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் ஒருவருக்கு ஒருவர் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, நிமால் சிறிபால டி சில்வா, ஜீ.எல்.பீரிஸ், விமல் வீரவன்ச மற்றும் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் ஆதரவுடன் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் ஒரு மேலதிக வாக்கினால் இலங்கை தோல்வியடைந்ததாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கணித தர்க்கத்தை ஏற்றுக்கொண்டால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களிலும் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 35 வீதமான வாக்குகளை மட்டுமே பெற்றுக்கொண்டார் என ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

காலநேரத்தை விரயமாக்கும் வகையிலான வாதப்பிரதி வாதங்களினால் ஒட்டு மொத்த நாடே பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# 2 ஆம் மாடியிலிருந்து வீழ்ந்த பணியாளர் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

கட்டடப்பணியில் இரண்டாம் மாடியில் மாபிள் வேலை செய்து கொண்டிருந்தவர் கீழே தவறி வீழ்ந்ததில் படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கண்டி கொழுங்காகவத்தவினைச் சேர்ந்த குடும்பஸ்தரான கே.டபிள்யூ ரஞ்சித் பெரேரா என்பவரே பரிதாபமாக உயிரிழந்தவராவார்.

குறித்த பகுதியில் உள்ள கட்டடத்தின் விளிம்புப் பகுதியில் மாபிள் பதித்துக் கொண்டு இருக்கும் போது கால் தவறி கீழே வீழ்ந்துள்ளார். இதனால் தலைப் பகுதி கீழேயுள்ள கல்லோடு பலமாக அடிபட்டதில் தலை சிதைவுற்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப் பட்டுள்ளது. (2-4)

# முல்லைத்தீவுக்கு வரும் தென்பகுதி மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டிலிருந்த முல்லைத்தீவுக்கு தெற்கிலிருந்து விஜயம் செய்யும் மக்களின் தொகை கடந்த சில மாதங்களில் பெருமளவு அதிகரித்துள்ளது என பாதுகாப்பு அமைச்சு நேற்றைய தினம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவுக்குச் செல்லும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அப்பகுதி மக்களின் கலாசார நியமங்களை மதித்து நடக்க வேண்டும் என பாதுகாப்பு அமைச்சு ஆலோசனை தெரிவித்துள்ளது.

கோவில்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் பிரதேசத்தின் கலாசார, சமய மரபுகளுடன் ஒத்துப்போகும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் வீதிகளின் தரத்தை அறிந்து அதற்கேற்ப வாகனங்களின் வேகங்களைக் கண்காணித்துக் கொள்ள வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக்குச் செல்லும் தென்பகுதி மக்கள் தமது பெயர், வாகன இலக்கம் பயணத் திகதி ஆகியவற்றை sfhqmltvisit@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பும்படி அமைச்சு கூறியுள்ளது.

இது முல்லைத்தீவு இராணுவத் தலைமையகத்தின் முகவரியாகும். முல்லைத்தீவு பிரதேச சோதனைச்சாவடிகளில் ஏற்படக்கூடிய வசதியீனங்களை தவிர்ப்பதற்கு இது உதவும் என கூறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக்குச் செல்வதற்கு பரந்தன்- முல்லைத்தீவு, மாங்குளம்- ஒட்டுசுட்டான்- புதுக்குடியிருப்பு, புளியங்குளம்- நெடுங்கேணி, முல்லைத்தீவு- வற்றாப்பளை- புதுக்குடியிருப்பு மற்றும் ஜனகரபுர- முல்லைத்தீவு வீதிகளைப்பயன்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சு சுற்றுலாப்பயணிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (அ-2)

# மின்தடை பற்றிய அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். இதற்கமைய நாளை திங்கட்கிழமையும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் புன்னாலைக்கட்டுவன் அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், மருதனார்மடம், இணுவில், தாவடி, கோண்டாவில் மேற்கு, சுதுமலை, கே.கே.எஸ் வீதியில் குளப்பிட்டி சந்தி வரையான கொக்குவிலின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை புன்னாலைக்கட்டுவன், அச்செழு , புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய இடங்களிலும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை 5 ஆம் திகதி வியாழக்கிழமை, 7 ஆம் திகதி சனிக்கிழமை கரந்தன் , நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீட பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்திவரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சி பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும். எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புன்னாலைக்கட்டுவன் அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம், பிரதம தபாலகப் பகுதி, ஸ்ரீலங்கா ரெலிகொம் பகுதி யாழ். பிரதான வீதியில் பண்ணையிலிருந்து புங்கன்குளம் வரையான பிரதேசம், கச்சேரிப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# வடக்கின் கலாசார விழுமியங்கள் மதிக்கப்பட வேண்டும்- பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

வடக்கின் உள்ளூர் கலாசார பாரம்பரிய விழுமியங்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. அண்மைக்காலமாக தெற்கிலிருந்து வடக்கிற்கு செல்வோரின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற யுத்த வலயங்களை பார்வையிடச் செல்லும் மக்கள், அப்பிரதேச கலாசார விழுமியங்களை மதித்து நடக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்து ஆலயங்களுக்கு செல்லும் போது, அணிந்து செல்ல வேண்டிய ஆடைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. நிலக்கண்ணிவெடி அகற்றப்படாத சில பகுதிகள் இன்னமும் பொதுமக்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (அ-2)

# தண்ணீரூற்று-முல்லைத்தீவு நகர் வீதி புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட தண்ணீரூற்று முதல் முல்லைத்தீவு நகரம் வரையிலான பிரதான பாதை நவீன காப்பெற் பாதையாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

யுத்த காலத்தின் போது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பல வீதிகள் அரசாங்கத்தினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தண்ணீரூற்று முதல் முல்லைத்தீவு வரையிலான 56 கிலோ மீற்றர் தூரமான இப்பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியொதுக்கீடு செய்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (அ-2)

# ஆதரவளித்த நாட்டு தூதுவர்களுக்கு ஆலோசனை வழங்க தீர்மானம்

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராகவும் யோசனைக்கு ஆதரவாகவும் வாக்களித்த 24 நாடுகளில் உள்ள இலங்கை தூதுவர்களை இலங்கைக்கு அழைத்து அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆலோசனை வழங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதனடிப்படையில் சித்திரை புத்தாண்டு காலத்தில் இலங்கை வரவுள்ள இந்த தூதுவர்கள் தனித்தனியாக ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, நோர்வே, ஸ்பெயின், இந்தியா, ஹங்கேரி,செக், போலந்து, மோல்டோவா, ருமேனியா, பெல்ஜியம், இத்தாலி,ஆஸ்திரியா, மொஸ்கோ, பெரு, உருகுவே, கொஸ்டரீகா; கௌதமாலா, சிலி, நைஜீரியா, பேனின், லிபியா, மொரீசியஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதுவர்களே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கை தூதரங்கள் இல்லாத நாடுகளிலும் தூதுவர்களாக பணியாற்றி வருகின்றனர்.

(அ-2)

# வன்னேரிக்குளத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

மீள்குடியேறிய முல்லைத்தீவு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் முகமாகவும் அம்மக்களுடைய உணவுத் தேவையையும் உணவுப்பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு மல்லாவி பகுதியில் உள்ள வன்னேரிக்குளத்தில் சுமார் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மீன்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன.

உலக உணவு விவசாய நிறுவனமும் இலங்கை தேசிய நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்கள்.

இந்நிகழ்வில் இலங்கை தேசிய நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி சலீவன்,இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான உலக உணவு விவசாய நிறுவன அதிகாரி பற்றிக் இவாஸ், றொபேட் வண்டன் பேக், வடபகுதி துரித மீள் எழுச்சி கருத்திட்டம் இணைப்பாளர் லலித் விஜயரட்ன,உலக உணவு விவசாய நிறுவனத்தின் இலங்கை மீன்பிடிப்பகுதியின் திட்ட முகாமையாளர்,குசால் தர்மரட்ன,மீன்பிடி அலகின் அபிவிருத்தி அதிகாரி கதிர்காமத்தம்பி வசந்தன்,கள உதவியாளர் ஆகியோருடன் இலங்கை தேசிய நன்னீர் மீன் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான அதிகாரி சலிவன் செல்வேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

(அ-2)

# ஸ்தாபகர் தினமும் பரிசில் தின நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் தினமும் பரிசில் தினமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி கற்பக விநாயகர் கலையரங்கில் கல்லூரி முதல்வர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, திருமதி செவ்வராசா , சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், திருமதி பாலசுப்பிரமணியம், யாழ். கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வி. மகேந்திரம், திருமதி மகேந்திரம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# நட்டஈடு வழங்க நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படைத் தளத்தின் விஸ்தரிப்பிற்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் ஒரு பகுதியினருக்கு நட்டஈட்டிற்கான ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளதாக காரைநகர் பிரதேச செயலர் திருமதி ரி.பாபு அறிவித்துள்ளார்.

இதற்கமைய 2 , 4, 8, 11, 17, 26, 67 1/2, 68, 90, 93, 125, 126, 131, 149, 151 ஆகிய காணித்துண்டு இலக்கங்களை உடைய காணி உரிமையாளர்கள் நட்டஈட்டுத் தொகையினை பெற்றுக் கொள்வதற்கும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் மேற்படி பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-2)

# வருடாந்த விளையாட்டு விழா

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செ.மயூரன் தலைமையில் பாலர் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிரேமச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக யா/ கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன், யாழ். செயலக புள்ளி விபர உத்தியோகத்தர் து.சிறிகரன், கைதடி கிராம உத்தியோகத்தர் எஸ்.இரவீந்திரன் கைதடி சமாதான நீதவான் டாக்டர் பி.சண்முகரத்தினம், சாவகச்சேரி பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி த.சுபத்திரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கைதடி பிரதேச சபை உப பணிமனை பொறுப்பதிகாரி சி.பத்மநாதன் ,கைதடி பொதுச்சுகாதார பரிசோதகர் து.கண்ணதாசன், கைதடி குடும்பநல உத்தியோகத்தர் ந.தேவகி, விநாயகர் விளையாட்டுக்கழக செயலாளர் வீ.தனுசன் ஆகியோர் கலந்து கொள்வர். (அ)

# கூட்டம்

கைதடி தென்கிழக்கு விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் சகல அங்கத்தவர்களுக்குமான மாதாந்த கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளதாக தலைவர் மு.கிருபானந்தன் அறிவித்துள்ளார். (அ)



உண்மை நிலை

# பணவீக்கம்



கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் பொருட்கள் மற்றும் பணிகளின் கூடை 373 பொருட்களை உள்ளடக்கியிருப்பதுடன் பணவீக்கத்தினை அளவிடுவதற்காக ஒவ்வொரு மாதமும் தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் இவ்வனைத்துப் பொருட்களையும் கணக்கிலெடுத்துவருகிறது. **எமது வரலாற்றில் முதல் தடவையாக பணவீக்கம் கடந்த 37 மாதங்களாக ஒற்றை இலக்க மட்டத்திலிருந்து வருகின்றது.** 2012 சனவரியில் 3.8% ஆகக் காணப்பட்ட பணவீக்கம். எரிபொருட்களில் செய்யப்பட்ட விலை அதிகரிப்புக்களுக்கிடையிலும் கூட 2012 பெப்புருவரியில் 2.7% இற்கு வீழ்ச்சியடைந்தது. உணவுப் பொருட்களின் வழங்கலில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றைய விடயங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை ஈடுசெய்திருக்கிறது. பொருத்தமான நாணயக் கொள்கையின் மூலம் கேள்வி அழுத்தங்கள் குறைக்கப்பட்டமையும் இதற்கு உதவியது. இவ்வழிமுறைகள் அனைத்தும் மக்கள் மீதான சுமைகளைக் குறைத்ததுடன் பணவீக்கத்தினை குறைந்த மட்டத்தில் பேணவும் உதவியிருக்கின்றன.

பணவீக்கம் 1978 இலிருந்து




(சி/6223)

# சின்னப்பண்டிவிரிச்சானுக்கு மருதபுரம் எனப்பெயர் மாற்றம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட மடுப் பிரதேசத்தில் உள்ள சின்னப்பண்டிவிரிச்சான் என்னும் கிராமத்தின் பெயரை மருதபுரம் எனப் பெயர் மாற்றம் செய்யவுள்ளதாகக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எம்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

ஆரம்பகாலம் முதல் பதிவு செய்யப்பட்ட பெயரான மருதபுரம் என்ற பெயரே காணப்பட்டது.

கூத்தாடி மருதமடு என்ற கிராமம் முன்பு இருந்ததாகவும் அக்கிராம மக்கள் நோய்த் தாக்கத்திற்குட்பட்டு பலர் இறந்த நிலையில் எஞ்சியோர் மா தோட்டத்திற்கு இடம்பெயர்ந்ததன் பின்னர் பந்திவிரிச்சான் என்ற பெயரில் ஒரு கிராமம் உருவாகியது.

இதன் பெயரும் காலப்போக்கில் பண்டிவிரிச்சான் என மருவியது. இதனையண்டியதாக உருவான சிறு கிராமம் சின்னப்பண்டிவிரிச்சான் என அழைக்கப்பட்டது. மக்களின் பாவனையிலும் இருந்து வருகிறது.

ஆனால், இப்பெயர் எந்த வகையிலும் பொருத்தம் இன்றிக் காணப்படுவதால் இதன் பண்டைய பெயரான மருதபுரம் என்ற பெயரையே மீண்டும் பயன்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# நான் தவறு எதுவும் செய்யவில்லை விசாரணைக்குத் தயாராகவுள்ளேன்

## மேர்வின் தெரிவிப்பு

(கொழும்பு)

தான் தவறு எதுவும் செய்யாத நிலையில் எந்த விசாரணைக்கும் முகம்கொடுக்கத் தயார் என அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

நான் தவறு எதுவும் செய்யவில்லை. அதனால் எந்த விசாரணைக்கும் முகம் கொடுக்க நான் தயார். அநீதியான எந்த தீர்மானத்தையும் ஜனாதிபதி மேற்கொள்ளமாட்டார் என நம்புகிறேன் என்பதையே நான் கூறினேன். அது உண்மை. அவர் அநீதியான எந்த தீர்மானத்தையும் மேற்கொள்ளமாட்டார். அவரை நான் நம்புகிறேன் என அமைச்சர் மேர்வின் சில்வா கூறினார்.

மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்திலிருக்கும் வரை தன்மீது யாரும் கை வைக்க முடியாது என அமைச்சர் மேர்வின் சில்வா கூறியமை தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மிதிவெடி அபாய விழிப்புணர்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மோட்டிவேஷன் மற்றும் யு.என்.டி.பி. ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் மிதிவெடி அபாயம் பற்றிய விழிப்புணர்வும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் சர்வதேச தின நிகழ்வும் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் ஜெய்ப்பூர் நிறுவன முன்றலில் நடைபெறவுள்ளது என மேற்படி நிறுவனப் பொருளாளர் டாக்டர் திருமதி எஸ்.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

அத்துடன் மிதிவெடியில் சிக்குண்டு அவயவங்களை இழந்து மாற்றுவலுவைப் பெற்றிருக்கும் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பயனாளிகள் அனைவரும் பங்குகொள்ளும் உள்ளக விளையாட்டுக்களும் நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மிதிவெடியின் பாதிப்பும் பின்னரான புனர்வாழ்வு பற்றிய படக்காட்சியும் இடம்பெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார். (அ-2)

# அமைச்சர் பௌசி, அப்துல்காதர் ஹஜ்குழுவின் இணைத்தலைவர்கள்

ஹஜ் குழுவின் 2012 ஆம் ஆண்டிற்கான இணைத்தலைவர்களாக பிரதி அமைச்சர் அப்துல் காதர் மற்றும் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிய ஹஜ் குழுவின் இணைத் தலைவர்கள் உட்பட ஏனைய உறுப்பினர்களுக்கான நியமனங்கள் கடந்த வாரம் பிரதமர் காரியாலயத்தினால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் காரியாலயத்தால் வழங்கப்பட்ட நியமனங்களின் பிரகாரம் இணைத்தலைவர்களாக அமைச்சர்களான அப்துல் காதர், ஏ.எச்.எம். பௌசி மற்றும் குழுத்தலைவராக பாரூக் ஹாஜியார் மற்றும் உறுப்பினர்களாக மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஹஜ் குழுவின் இணைத் தலைவர்களாக அமைச்சர் பௌசி மற்றும் ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் நியமிக்கபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பரிந்துரைகளை செயற்படுத்த இலங்கை அர்ப்பணிப்புடனுள்ளது

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த இலங்கை பூரண அர்ப்பணிப்புடன் இருப்பதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜப்பான் சென்றுள்ள பாதுகாப்பு செயலாளர் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சின் செயலாளரை சந்தித்து பேசும் போதே இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பான் இலங்கைக்கு வழங்கி வரும் தொடர் உதவிகளுக்காக அவர் அரசாங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்து நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதி மற்றும் அபிவிருத்திகளை பார்வையிடுமாறும் கோத்தபாய ஜப்பான் வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளார். (அ-2)

# வடக்கின் வசந்தம் மின்சாரத்திட்டத்தில் வைத்தியசாலைகளுக்கே முதலிடம்

(சிவநகர்)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கிளிநொச்சிக்கான மின் வழங்கலில் வைத்தியசாலைகளுக்கே முன்னுரிமை அளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார சபையினால் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மின் கம்பங்கள் நாட்டல், கம்பிகள் பொருத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுவதோடு ஏற்கனவே மின் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்த அம்பாள்புரம் போன்ற இடங்களில் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சபையின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கின் வசந்தம் மூலமான **இலவச இணைப்பு- வீட்டுப் பாவனை** போன்ற சாதாரண பாவனையாளருக்கு 150 மீற்றர் வரையிலான கட்டமைப்பு இணைப்பு வழங்கப்படுமெனவும் தொழிற்சாலைகள் போன்றவற்றின் பாவனையாளர்களுக்கு இந்த இலவச இணைப்பு வழங்கப்படாது **கட்டண அறவீடு** இடம்பெறுமெனவும் குறிப்பிட்டார். (அ-254)

# புகுமுக பயிற்சி வகுப்புக்கள்


அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக இன்று ஞாயிற்றுக்கிழமைக்கு பின்னர் புதிதாக நியமனம் பெற்ற பொது முகாமைத்துவ அலுவலர்களின் புகுமுகப் பயிற்சியை இதுவரை பெற்றுக்கொள்ளாத மற்றும் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள புதிய பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சி நெறிக்கு பதிவுகளை மேற்கொள்ளாத புதிதாக தெரிவு செய்யப்பட்ட பொது முகாமைத்துவ உதவியாளர்கள் அனைவரும் நாளை திங்கட்கிழமைக்கு முன்னதாக மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் தங்களது பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# மகளிர் தின விழா

(நல்லூர்)

இருபாலை தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் மகளிர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி த.சறோஷா தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஓய்வு பெற்ற சங்கீத விரிவுரையாளர் திருமதி எஸ்.இராமச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.நிர்மலன், கோப்பாய் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ். ஜெயகௌரி, கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர் எஸ்.ஜெயந்திரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.கிழக்கின் தலைவர் இ.மயில்வாகனம், ஓய்வுபெற்ற கிராமசேவையாளர் சி. இலட்சுமிகாந்தன், கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ம.நந்தீஸ்வரன், இருபாலை தெற்கு சமுர்த்தி உத்தியோகத்தர் அ.ஜெய சிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-2-134)





கட்டாயக்கல்வி, சிறுவர் உரிமைகள் தொடர்பான செயலமர்வு யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ஞா.அன்ரன் பிறேமதாஸ் உரையாற்றுவதையும் யாழ்.வலய செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, பங்குத்தந்தை என்.ஜே.ஞானகாருண்யன், மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# பூரணத்துவமும் குறைபாடுகளும்




## ஆன்மீகம் 22

பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

நீ குறைபாடுகளைத் தோடினால், இராமரிடமும் கிருஷ்ணரிடமும்கூட குறைகளைக் காணலாம்- எண்ணற்ற குறைகள் காணப்படலாம். இன்றைய காலகட்டத்தில் கிருஷ்ணர் இருந்தால் பொய் சொன்னதற்காகவும், திருடியதற்காகவும் அவர்மேல் நீதி மன்றங்களில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்படலாம். அவரின் குறும்புத்தனங்கள் குற்றவியல் சட்டத்தின் எல்லாப்பிரிவுகளிலும் நடவடிக்கை எடுப்பதற்குத் தகுந்ததாக இருக்கும்.

எந்த அளவுக்குப் பக்தன் பலவீனமாக இருக்கின்றானோ அந்த அளவுக்கு குரு துல்லியமாக இருக்க வேண்டியுள்ளது. அர்ச்சுணனால், கிருஷ்ணனிடம் எந்தக் குறையையும் காணமுடியவில்லை- அர்ச்சுணன் கிருஷ்ணனிடம் ஒருபோதும் எந்தக் குறைபாட்டையும் காணாததால் அவன் அஞுசூய என்று சொல்லப்படுகிறான். அதனால்தான் கிருஷ்ணர் அர்ச்சுணனுக்குத் தன் உண்மையான வடிவத்தைக் (விஸ்வரூப தரிசனம்) காட்டினார். ஹனுமான் இராமரிடம் ஒருபோதும் குறைகண்டதில்லை. அவர் மிகவும் மனஉறுதி மிக்கவர். புத்தரின் வாழ்க்கையில் நீ எந்தக் குறைபாட்டையும் காணமுடியாது.



புத்தர் தனக்காக வாழவில்லை; இந்த உலகத்திற்காகவும், பக்தர்களுக்காகவும் தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தார்.

யாராவது ஒருவர் புகைப்பிடித்தாலும், மது அருந்தினாலும் ஞான சித்தி அடைந்தவரின் மெய்யுணர்வைப் பாதிப்பதில்லை. அவர் எப்போதும் பேரானந்தத்தில் இருக்கிறார்.

ஏன் அப்படிப்பட்ட செயல்களில் ஒருவர் ஈடுபடுகிறார் என்று பார். சிறு சந்தோசத்திற்காகவா?

ஆனால், "நீயே அந்த ஆனந்தம்" என்று, புரிந்துகொள்ளும்போது நீ ஏன் அவற்றில் ஈடுபடுவாய்? அப்போது உனக்கு அவை தேவைப்படாது- நீ அவற்றையெல்லாம் தாண்டி மேலே சென்றுவிடுவாய். உன்னுடைய உடம்பு வெறும் உடம்பல்ல- அது வெளிச்சம்- ஒளி. அது ஒரு கனமான பொருளல்ல. அது எல்லாமே வெற்றிடம். உன்னில் பொறாமை, பேராசை, காமம், கோபம் போன்ற எதற்கும் அர்த்தமே இல்லை. வசப்படுத்திக்கொள்ளுதல், பேர், புகழ், செல்வம் எதுவும் ஒரு பொருட்டல்ல.

உனக்குள்ளிருந்து வெளியே வருபவை அனைத்தும் நல்ல விடயங்களாக- எல்லோருக்கும் நல்லது செய்வதாக- எல்லோரும் இந்தப் பூமியில் மகிழ்ச்சியுடன் வாழ ஆசீர்வதிப்பவையாக இருக்கும்.

இதைத்தான் கிருஷ்ணர் சொன்னார். "இந்த அறியாமையில் உள்ள மனிதர்கள், என்னை யாரோ ஒருவர் என்று நினைக்கிறார்கள். அவர்களால் ஒளியாகிய என்னைப் பார்க்க முடிவதில்லை."

நீயே ஐம்பொறிகளுக்கும் தலைவன், பஞ்ச பூதங்களுக்கும் தலைவன், நீர், நிலம், நெருப்பு, ஆகாயம், வாயு என்ற எல்லாவற்றிற்கும் நீயே அரசன். இந்த நம்முடைய மெய்யுணர்வு மனம் இவை எல்லாவற்றையும்விட மேலானது. நீ ஆனந்தமான ஓய்வில் இருக்கும்போது, மனம் முழுமையாக ஓய்விலிருக்கிறது, உடல் முழுமையான ஓய்வெடுக்கிறது; உடல், மனம் இரண்டுமே பேரானந்த நிலையில் இருக்கிறது.

நீ நிறைவு அடைவதற்கு, இந்தப் படைப்பு அனைத்திலுமுள்ள முழுமையைப்பார். படைப்பின் ஒவ்வொருபடியும் துல்லியமாய் இருக்கிறது. ஒவ்வொரு பொருளும் துல்லியமாய் இருக்கிறது. அதற்குத் தனித்தனி இடம், உள்ளது. ஒருவர் அதைப் பார்க்கும்போது, முணுமுணுக்கும் குறைசொல்லும் மனம்நின்று அமைதியாய் ஓய்வெடுக்கிறது. மனம் அமைதியாகும்போது, தெய்வீகத்தைத் தொடுகிறது. அதுதான் மையம்- எல்லாருடைய இருப்பின் முழுமை. இந்த முழுப்பிரபஞ்சமும் ஆகாயவெளி- நீ- ஆகாயம், வெளி.

கடந்தகாலம் கனவு போலிருக்கிறது (அது வந்தது, போய்விட்டது. எதிர்காலம் ஒரு கனவு, நிகழ்காலம் ஒருகனவு. நீ விழித்தெழும்போது, எல்லாமே கனவு பொலிருப்பதை உணர்வாய்.

குறைபாடுகளை அடையாளங் காணல், உன்னை முழுமையை நோக்கி அழைத்துச் செல்கிறது. இது மிகவும் நுட்பமானது. குறைபாடுகளைப் புரிந்துகொண்டதும் நீ அதையே நினைத்து வருத்தப்படலாம். "ஓ... என்னிடம் குறைகள் உள்ளன" அல்லது. அவற்றைத் தவிர்க்க விரும்பலாம். ஒன்று நீ குறைபாடுகளைக் காணலாம். அல்லது இந்த உலகம் சில குறைபாடுள்ள நிலையிலிருந்து முழுமையான துல்லிய நிலைக்குச் செல்கிறது எனச்சொல்லாம். நீ சிறிது அதிருப்தி அடைவது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதுதான் அது ஒருவரது உணவில் உப்புப்போல் இருக்கலாம்.

சிறு அதிருப்தி உன்னை முன்னோக்கித்தள்ளும். ஆனால், அளவுக்கு மிஞ்சிய அதிருப்தி உன் நம்பிக்கையை ஆட்டங்காணச்செய்யும்.

இந்த முழு உலகமும் அன்பால் ஆக்கப்பட்டிருக்கிறது. எல்லாரும் அன்பாலாக்கப்பட்டிருக்கிறார்கள். சர்வமும் கடவுளே, சர்வமும் அன்புமயம். நீ இதை முன்பே கேட்டிருக்கிறாய். ஆனால், எல்லாமே கடவுள் என்றால் வாழ்க்கை எதை நோக்கிப் போகிறது?

வாழ்க்கை பூரணத்துவத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறது.

நாம் முழுமையை விரும்புகிறோம். முன்று விதமான பூரணத்துவநிலைகள் உள்ளன. செயலில், வேலையில் முழுமை (க்ருதி, க்ரியா)

பேச்சில் வாய்மை (வசனம்), உணர்வுகளிலும், நோக்கங்களிலும் நேர்மை (பாவ்)

சிலரது செயல்களில் உயர்வு இருக்கும். ஆனால், உள்ளுக்குள் கோபமும் கடுமையும் இருக்கும். அவர்கள் என்னதான் அற்புதமான விடயங்களை வெளிப்படையாகச் செய்தாலும் அவை முழுமையாயிருக்காது. சிலர் வாக்கில் பொய்யிருக்கும். அதாவது, அவர்கள் பேச்சில் உண்மை இருக்காது. ஆனால், அவர்கள் தங்கள் வேலைகளைச் செய்வர். (தொடரும்)


# உங்கள் கைரேகை பலன்கள் 22

## ரேகைகளும் கிரகங்களும்

சக்தி

### செவ்வாய் மேட்டிலுள்ள இரேகைக் குறிகளின் பலாபலன்கள்

செவ்வாய்க்கிரகம் கையில் முன்றிடங்களில் அமைந்திருக்கிறது. ஒன்று புத்தி இரேகையின் முடிவில் அதற்குமேல் அமைந்திருக்கிறது. மற்றொன்று சுக்கிர மேட்டிற்குமேல் அமைந்திருக்கின்றன. முன்றாவது கையின் மத்தியில் அமைந்திருக்கிறது. அதாவது, கையின் மத்தியே மூன்றாம் செவ்வாயக்கிரகம். அது செவ்வாய்ச் சமவெளி அல்லது செவ்வாய் ஆதிக்கம் என்று சொல்லப்படுகிறது. இது மேற்குறிப்பிட்ட இரண்டு அமைப்புக்களுடனும் தொடர்ந்தே கையின் மத்தியில் அமைந்திருக்கிறது. ஒருவர் கையில் அவருடைய சுண்டு விரலுக்கு நேர்கீழே, இருதய இரேகைக்கு அடியிலும் புத்திஇரேகைக்கு மேலுமாக அமைந்துள்ள செவ்வாய் மேட்டில்,



1. செங்குத்தாக ஒருரேகை இருந்தால், அது அவர் மிகுந்த தைரியசாலி என்பதைக் குறிக்கும்.

2. பலஇரேகைகள் முன்னும் பின்னுமாய் அமைந்திருந்தால், அவர் முரட்டு சுபாவம் உடையவர் என்பதையும் காதல் சம்பந்தமான காரியங்களில் மூர்க்கத்தனமாய் நடப்பவர் என்பதையும் அவை குறிப்பதாகும். மற்றும் பொதுவாக அவர் முன்னேற்றம் அமைவதற்குத் தடைகள் ஏற்படும் என்பதையும் அவை குறிப்பதாகும். அவருக்குத் தொண்டையில் சலசலப்புடைய ஒருவித களைப்புநோய் உண்டாகும் என்பதையும் அவை குறிப்பதாகும்.

3. ஒரு குறுக்கிட்ட இரேகை இருந்தால், அது அவருக்கு விரோதிகள் இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பதாகும். அந்த மேட்டில் எத்தனை குறுக்கிட்ட இரேகைகள் இருக்கிறதோ அத்தனை விரோதிகள் இருக்கிறார்கள் என்று கணக்கிட வேண்டும். அந்த இரேகைகள் எவ்வளவு அழுத்தமாய் பதிந்தும் நீண்டும் இருக்கிறதோ அவ்வளவுக்கு அந்த விரோதிகள் பலமுள்ளவர்கள் என்பதையும் அவர்கள் அவ்வளவு காலம்வரை விரோதிகளாய் இருப்பார்கள் என்பதையும் அவை அளவிட்டுக் காட்டுவதாகும்.

4. மேலே குறிப்பிட்ட குறுக்கிட்ட இரேகை ஆரோக்கிய இரேகையைத் தொட்டுக்கொண்டிருந்தால், விரோதத்தால் அவர் ஆரோக்கியம் கெடும் என்பதை அது அறிவிப்பதாகும். அந்தக் குறுக்கிட்ட இரேகை சூரிய இரேகையைத் தொட்டுக் கொண்டிருந்தால் அவருடைய பொருள் சம்பந்தமான விவகாரங்கள் பாதிக்கப்படும் என்பதை அது காட்டுவதாகும். அது விதி இரேகையைத் தொட்டுக் கொண்டிருந்தால், அவருக்குப் பிரவிருத்தியில் ஆபத்துண்டாகும் என்பதை அது காட்டுவதாகும். அது ஆயுள் ரேகையைக் குறிக்கிட்டுச் சென்றால் அவருடைய பந்துக்கள் அல்லது அவருடைய நெருங்கிய நண்பர்கள் சங்கடத்துக்குட்படுவார்கள் என்பதை அது குறிப்பதாகும்.

5. ஒரு குறுக்கிட்ட இரேகை இரண்டு கிளைகளோடு பதிந்து அமைந்திருந்தால் அவருக்கு சுவாசாசயநோய் வரும் என்பதை அது குறிப்பதாகும்.

6. ஒரு புள்ளி இருந்தால் அவருக்கு சண்டையினால் காயம் ஏற்பட்டிருப்பதை அல்லது காயம் ஏற்படும் என்பதை அது குறிப்பதாகும்.

7. ஒரு கிராஸ் இருந்தால். அவர் பிடிவாதம் செய்வதால் அவுருக்கு சச்சரவுகள் உண்டாகும் என்பதை அது குறிப்பதாகும்.

8. ஒரு நட்சத்திரக்குறியிருந்தால் அவர் கோபமும் பொறாமையுங் கொண்டிருப்பார் என்பதை அவை காட்டுவதாகும்.

9. சதுரக்குறி இருந்தால் அவர் தனது வாக்கு வாதத்தால் தன்னைக் காத்துக்கொள்வார் என்பதை அது குறிப்பதாகும்.

10. வட்டவளையமான இரேகைக் குறி இருந்தால் அது துர்க்குறியேயாம்.சிலசந்தர்ப்பங்களில் அவருடைய கண்ணுக்கு அபாயம் உண்டாகும் என்பதையும் அது குறிப்பதாகும்.

11.முக்கோணக்குறி இருந்தால் அவர் இராணுவ சேவகத்தில் சமர்த்தராய் விளங்குவார் என்பதை அது குறிப்பதாகும்.

12. வலைக்குறி இருந்தால் அவர் கெடுதல் செய்யக்கூடியவர் என்பதை அது குறிப்பதாகும். (தொடரும்)

# கிழக்கு மாகாணம் பின்னடைவுகளை சந்திக்க அரசியல் தலைமைகளே காரணம்

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணமும் கிழக்கு மக்களும் இந்தளவிற்கு பல விதங்களிலும் பின்னடைவுகளை சந்தித்திருப்பதற்கு கடந்த கால அரசியல் தலைமைகளே காரணம் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு ஈரலைக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் புதிய கட்டடத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இன்று எமது கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறை உட்பட சகல துறைகளும் துரிதமாக வளர்ச்சிகண்டு வருகின்றன. அண்மையில் வெளிவந்த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகூட பாரிய மாற்றத்தையும் கல்வித் துறையின் துரித வளர்ச்சியையும் காட்டியிருக்கிறது .

இவ்வாறான வளர்ச்சியையே சகல துறைகளிலும் நானும் எமது கட்சியும் எதிர்பார்க்கின்றோம். அதற்கிணங்கவே நாமும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இவ்வாறான துரித வளர்ச்சி தொடர்ந்து இடம்பெற வேண்டுமானால் மக்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு இன்றியமையாதது.

கடந்த காலங்களில் நாம் உணர்ச்சி வார்த்தைகளை நம்பி ஏமாந்த சமூகமாக மாறியிருக்கின்றோம். கடந்த அறுபது வருடங்களுக்கு மேலாக நாம் ஏமாற்றப்பட்டு வந்திருக்கிறோம். அதை பெற்று தருவோம் இதை பெற்று பெற்று தருவோம் என்றெல்லாம் எத்தனையோ பிரகடனங்களை எல்லாம் செய்த தமிழ் தலைவர்கள் இதுவரை தமிழர்களுக்காக எதனை பெற்று தந்திருக்கின்றனர்.

உரிமை உரிமை என்று பேசிப்பேசியே உரிமையையும் பெறவில்லை எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவுமில்லை. எமது மக்கள் தெளிவாக இருக்கவேண்டும். இன்னும் நாம் அழிவுகளை சந்திக்க முடியாது. எமது பிரதேசங்கள் துரித அபிவிருத்தி அடைய வேண்டும்.

இன்று நாம் ஒரு பக்கத்தில் எமது உரிமைகளை பெறுவதில் பல விடயங்கள செயற்படுத்தி வருகின்றோம். மறு புறத்தில் பாரிய அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தி வருகிறோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கென ஐந்து ஆண்டுத் திட்டம் ஒன்றினை நாம் வகித்திருக்கின்றோம். இத்திட்டத்தினூடாக பாதை நீர்ப்பாசனம் மற்றும் போக்குவரத்து துறைகளை துரிதமாக விரிவுபடுத்தி ஏனைய பிரதேசங்களின் நிலைக்கு அப்பிரதேசங்களை கொண்டு வருவதற்கு திட்டமிட்டிருக்கின்றோம் என்றார். (அ-2)

# செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் அழகியற் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தமர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளம் ஆசிரியர் மத்தியவள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

அழகியற் பாடம் தொடர்பான பல ஆக்கபூர்வமான கருத்துக்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அழகியற்பாட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# இலங்கையின் நாணயப்பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைவு

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியடைவதை தடுக்க கடந்த வாரம் இலங்கை அரசாங்கம் முயற்சிகளை எடுத்திருந்த போதும் அது பெரியளவில் வெற்றி பெறவில்லை.

கடந்த மாதம் அமெரிக்க டொலர் ஒன்று 111 ரூபா என இருந்த இலங்கை நாணயத்தின் மதிப்பு இந்த மாதம் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. உச்ச அளவாக இது கடந்த 19 ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிராக 131.60 ரூபா என்ற நிலையை எட்டியது.

இந்த நிலையில் டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் மதிப்பை 125 ரூபாவாக நிலை நிறுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது.

இதையடுத்து கடந்த வாரத் தொடக்கத்தில் தளம்பலான நிலையே காணப்பட்டது. டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி கடந்த வியாழக்கிழமை 127.60 ரூபாவாக உயர்ந்தது. ஆனால் நேற்று முன்தினம் மாலை வர்த்தக முடிவின் போது இலங்கை நாணயப் பெறுமதி மேலும் சரிந்து டொலருக்கு எதிரான மதிப்பு 128.30 ரூபா என்ற நிலையை அடைந்தது. இதனால் ரூபாயின் மதிப்பைக் குறைக்கும் இலங்கை அரசின் முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. (அ-2)

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

**யாழ்/ உரும்பிராய் வைவத்தமிழ் வித்தி யாலயம்**

லறினா கணேசலிங்கம்- 8ஏபி, பர்மிசா யோகராசா- 3ஏ2பி3சி, சிவதீசன் கஸ்மிகன் 2ஏ6பிசி

**கிளி / முருகானந்தா கல்லூரி**

வீ. டிசானி -6எ2பி, சு.கோபிகா- 5ஏ, பி2சிஎஸ் , ர. ரிதுசன்- 5ஏபி2சிஎஸ், க. சுஜிதா- 4ஏ3பிசி , யோ.பிரியங்கன்- 4ஏ, 3பிஎஸ் , ம.பிரவிந்- 3ஏ3பி2சிஎஸ்

**யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்**

தவராசா தர்மிகா- 5ஏபி3சி, உதயகுமார் செந்தூரி- 4ஏ3சி2எஸ் , உதயகுமார் கஸ்தூரி- 3ஏ3பிசி2எஸ்

**யாழ்/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்**

எம்.சேனுகா- 8ஏபி , வி.மதுஷா- 8ஏபி வி. சுதர்சன்- 4ஏ4சி , ரி. பிரிந்தன்- 2ஏ4பி 2சிஎஸ் , வை. துசானி- ஏ3பி2சி3எஸ்

# கார் ஏறியதால் குழந்தை பலி

உத்தரப்பிரதேச மாநில காசி யாபாத் மாவட்டத்தில் உள்ள பஞ்ச்சீல் காலனியில் வசிப்பவர் ரத்தன். இவர் ஒரு தினக்கூலி தொழிலாளி. இவரது இரண்டு வயது மகன் வீட்டின் வெளியே விளையாடி கொண்டிருந்தான். அப்போது மிக வேகமாக வந்த சொகுசு கார் ஒன்று விளையாடிக் கொண்டிருந்த குழந்தையின் மேல் ஏறிச்சென்றது.

இந்த துயர சம்பவத்தில் அந்த குழந்தை உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தது. குழந்தையின் உடல் பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது. மிக வேகமாக காரை செலுத்திய காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.அவரது காரும் பறி முதல் செய்யப்பட்டுள்ளது. (அ-2)

# கல்வியமைச்சரின் கருத்துக்கு அமைச்சர் செனவிரட்ன பதில்

(கொழும்பு)

ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவரின் கருத்துக்கு அதே கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு அமைச்சர் பதிலளித்துள்ளார்.

மூவர் அடங்கிய குடும்பம் ஒன்றுக்கு மாதம் 7 ஆயிரத்து 500 போதுமானது என அண்மையில் அமைச்சர் பந்துல குணவர்த்தன கருத்து வெளியிட்டிருந்தார்.

எனினும் இந்தப் பணத்தைக் கொண்டு ஒரு குடும்பம் சீவிக்க முடியாது என பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். மூவர் அடங்கிய குடும்பம் ஒன்றின் மாதாந்த செலவிற்காக குறைந்தபட்சம் 5 ஆயிரம் ரூபா அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உணவுச் செலவு, மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம், நீர்க் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய 7 ஆயிரத்து 500 ரூபா போதுமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(அ-2)

# பீரிசின் பதவியை அரசு தெளிவுபடுத்த வேண்டும்

## சபையில் தயாசிறி கோரிக்கை

(கொழும்பு)

ஜீ.எல்.பீரிஸ் என்ற மனிதர் யார்? அவருடைய பதவியின் கௌரவம் என்ன? என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி பா.உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிடும் கருத்துக்கள் அரசின் கருத்துக்கள் அல்ல என்று அமைச்சரவைப் பேச்சாள ரான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கூறுகின்றார்.

அப்படியானால் இந்த ஜீ.எல். பீரிஸ் என்ற மனிதர் யார்? அவருடைய பதவியின் கௌரவம் என்? என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என அவர் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தொடர்ந்து பேசும் போது மேலும் கூறியதாவது,

அமைச்சர் பீரிஸ் ஜெனீவா தீர்மானம் தொடர்பாக பல கருத்துக்களை வெளியிட்டுள்ளார். ஆனால், இது அரசின் கருத்துகள் இல்லை என்றால் இந்தப் பீரிஸ் என்பவருக்கு உரிய அமைச்சுப் பதவியின் கௌரவம் என்ன? யாருடைய கூற்றை அரசின் கூற்று என்று ஏற்றுக்கொள்வது.

இலங்கைக்கு எதிராக 24 நாடுகள் வாக்களித்தன. ஆதரவாக 15 நாடுகள் செயற்பட்டன. ஆனால், நடுநிலை வகித்த எட்டு நாடுகளும் நமக்கு ஆதரவானவை.

இதன்படி ஒரு வாக்கு வித்தியாசத்திலேயே பிரேரணை வெற்றி பெற்றது என்று பெருமையடிக்கின்றார் பீரிஸ்.

அதேவேளை, நடுநிலை வகித்த எட்டு நாடுகளும் எமக்கு ஆதரவானவை என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறினால் நமக்கு எதிராக 32 நாடுகள் உள்ளன என்று ஆகி விடாதா? வெறுமனே கணக்குக்காட்டி மக்களை ஏமாற்றக்கூடாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும் என்றார். (அ-2)


Study Abroad

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

UK (London) University of Glynder (London Campus)
அடிப்படைத் தகமை A/L or O/L
3 1/2 வருட வீசா
20 மணித்தியால பகுதி நேர வேலைவாய்ப்பு
IELTS அவசியம் இல்லை.
IELTS 4.0 உள்ளவர்களுக்கு விசேட வாய்ப்புகள் காணப்படுகின்றன்

Canada
Student Visa
கனடிய கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும்
June மாதத்திற்கான பாடநெறிகள் ஆரம்பம்
அடிப்படைத் தகமை O/L மட்டுமே

Cyprus (ஐரோப்பியக் கண்டம்)
June மாதத்திற்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன
அடிப்படைத் தகமை O/L or A/L மட்டுமே
கல்லூரிக் கட்டணமும் Visa விற்குப் பின்னரே செலுத்த வேண்டும்.
NO IELTS
NO INTERVIEW
NO SPONSOR

Singapore
Hotel முகாமைத்துவத் துறையில்.
6 மாதங்கள் சிங்கப்பூரில் கற்கைநெறி
பின்னர் - 6 மாதங்கள்
சம்பளத்துடன் கூடிய வேலைவாய்ப்பு.
அடிப்படைத் தகமை O/L or A/L மட்டுமே.

New Zealand Student Visa
அரசாங்க வியாபார பதிவிலக்கம் PV67191
விண்ணப்ப முடிவு திகதி 15.04.2012

Spot Admissions & Interview
27th - 29th March 2012
9am - 6pm
Jaffna Greenwich College
0777630708

Care Giver to Canada
முதியோர் பராமரிப்பாளர்கள் கனடா நாட்டிற்கு அதிகளவில் தேவைப்படுகின்றனர்.
அடிப்படைத் தகமை A/L 3 Pass

SCHOLARSHIPS
சிறந்த தகைமை உள்ளவர்களுக்கு புலமைப் பரிசிலும் வழங்கப்படும்.

City & Guilds Approved Centre

(சீ/6179)

வெளிநாடுகளுக்கு சென்ற மாணவர்களின் புகைப்படங்களை நேரில் வந்து பார்வையிடலாம்.

GREENWICH COLLEGE
39, 3rd Lane,
Power House Road,
(மின்சார நிலைய வீதி),
Jaffna.

Head Office
GREENWICH COLLEGE (PVT) LTD
34, Galle Road, Dehiwala.
Tel : (011) 2713214, 2726237
E: info@greenwich.lk,
w: www.greenwich.lk

மேலதி விபரங்களுக்கு Mob: 0777630708

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 87




மரண தண்டனை அளிக்கும் நாசி

1943 இலையுதிர் காலத்தில் பிரிட்டிஷ் துருப்புகள், ஏஜியன் கடலில் பல சிறு தீவுகளைக் கைப்பற்றின;. இதையடுத்து பால்கான் மீது தொடுக்கப்பட்ட அதிகப் பரவலான தாக்குதலுக்கு இது முன்னுரையாக அமைந்திருக்க வேண்டும். "இத்தாலியும் பால்கன் தீபகற்பமும் இராணுவ மற்றும் அரசியல் விடயங்களில் ஒரே முழுமையாக உள்ளன என்று நான் கருதுகிறேன். இப்பிரதேசத்தில், தான் நாம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்" என்று 1943 அக்டோபர் தொடக்கத்தில் சர்ச்சில் ரூஸ்வெல்டிற்கு எழுதினார். அமெரிக்க வரலாற்றாசிரியர் மேட்லஃப் குறிப்பிட்டபடி "ரோதோஸ் தீவைக் கைப்பற்றுவதை, மத்திய தரைக்கடலில் கிழக்குப் பகுதியிலும் பின் பால்கனிலும் தொடர் நடவடிக்கைகளின் தொடக்கத்திற்கான பூர்வாங்க அடியாகக் கருதலாம்."

நேபிள்சுக்குத்தெற்கே, பிரிட்டிஷ்-அமெரிக்கத் துருப்புகளை ஆதாரமாகக்கொண்டு மார்ஷல் படோல்யோவின் ஆட்சி இருந்தது. தன் புடைசூழ அரசனும் இத்தாலிய அரசாங்கத்தின் உறுப்பினர்களும் ரோமிலிருந்து இங்கு ஓடிவந்தனர். வடக்கு மற்றும் மத்திய இத்தாலி முழுவதும் பாசிச ஜேர்மனியத் துருப்புகளின் வசமிருந்தது. நவீன பாசிச கைப்பொம்மை ஆட்சி இங்கே தோற்றுவிக்கப்பட்டது. கிரான் சாஸ்ஸோ(அப்ருட்ஸோ) மலைகளில் சிறையிலிருந்த முசோலினி ஹிட்லரின் எஸ்.எஸ். படையைச் சேர்ந்த ஒத்தோஸ்கர்ட்ஸேனியின் பாரசூட் வீரர்களால் விடுவிக்கப்பட்டு முதலில் வியென்னாவிற்கும் பின் ஹிட்லரின் படைத் தலைமையகத்திற்கும் கொண்டு செல்லப்பட்டான். பின்னால் வடக்கு இத்தாலிக்கு (சாலோ நகருக்கு) அனுப்பப்பட்ட முசோலினி அங்கே நாஜிகளின் கட்டளைக்கேற்ப பாசிச **சமூகக் குடியரசின்** தோற்றத்தைப் பிரகடனப்படுத்தினான். புனரமைக்கப்பட்ட பாசிசக் கட்சியும் குடியரசுக்கட்சி என்றழைக்கப்பட்டது. இந்த வேசக் கூத்து முழுவதாலும், மீண்டும் பிரகடனப் படுத்தப்பட்ட பாசிச அரசானது (சாலோ குடியரசு) ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களின் துப்பாக்கிச் சனியன்களின் மீதுதான் நின்றுகொண்டிருந்தது எனும் தெள்ளத் தெளிவான உண்மையை நிச்சயமாக மூடி மறைக்க இயலவில்லை.

முசோலினியோ தனக்கு ஹிட்லர் ஆதரவு அளிப்பதை நியாயப்படுத்த முயன்றான். முசோலியின் தீவிர ஆதரிப்போடுகூட **சமூகக் குடியரசின்** எல்லா ஆட்பலமும் ஆயுத பலமும் பாசிஷ்டுகளின் கரங்களில் இருந்தன. ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவு தருவதற்காக எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் விரோத ஆட்சிக் கும்பலைப் பாதுகாக்கும் பொருட்டு கட்டுப்பாடற்ற பாசிசப் பிரச்சாரம் நடந்தது. இது யுத்தத்திற்குப் பின் அடிப்படை சமூக மாற்றங்களைச் செய்வதாயும் அரசியல் வாழ்வை ஜனநாயக மயமாக்குவதாயும் தம்பட்டம் அடித்தது. அதே நேரத்தில் இத்தாலிய நவீன பாசிஷ்டுகள் அதிருப்தி காட்டியவர்களை மிருகத்தனமாகப் பழி வாங்கினார்கள்; அசாதாரண கால டிரிப்யூனல் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டது. ஜூலை மாதம் பெரும் பாசிசக் கவுனிசிலின் தனக்கு எதிராகப் பேசிய பாசிசத் தலைவர்களையும் பழிவாங்க முசோலினி மறக்கவில்லை. வெரோனாவில் நடத்தப்பட்ட நீதி விசாரணை **துரோகி**களுக்கு தக்க தண்டனையை வழங்கியது. முன்னாள் வெளி விவகாரத் துறை அமைச்சர் சியானோ (முசோலியின்மருமகன்) உட்பட குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் ஐவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு, தண்டனை நிறைவேற்றப்பட்டது.





இத்தாலிய தேச பக்தர்கள் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராயும் முசோலியின் நவீன பாசிஷ்டுகளுக்கு எதிராயும் ஆயுதப் போராட்டம் நடத்தினர். எல்லாப் பாசிச எதிர்ப்பு எதிர் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் தேசிய விடுதலைக் கமிட்டி செப்ரம்பர் 9 ஆம் திகதி ரோமில் தோற்றுவிக்கப்பட்டது. இத்தாலியக் கம்யூனிஸ்டுக் கட்சி பாசிச எதிர்ப்பு இயக்கத்தை ஒழுங்கமைத்து, ஊக்கப் படுத்தும் முக்கிய சக்தியாக விளங்கியது. ஐக்கிய நாடுகளுடன் ஓரணியில் நின்று பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக பொது மக்களின் போராட்டத்தை நடத்துமாறு இது அறைகூவல் விடுத்தது. ஹிட்லர் துருப்புகளால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் ஸ்தல தேசிய விடுதலை கமிட்டிகளை பரவலாக அமைக்கவும் ஆயுதந்தரித்த கொரில்லாப்படை அணிகளைத் தோற்றுவிக்கவும் கம்யூனிஷ்டுக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டது.

வடக்கு மற்றும் மத்திய இத்தாலியில் கரிபால்டி கொரில்லாப்படை பிரிகேடுகள் தோற்றுவிக்கப்படலாயின. இத்தாலியக் கம்யூனிஷ்டுக்கட்சி தலைமையின் உறுப்பினர் லுயீஜிலோங்கோ இதன் தளபதியாக இருந்தார். கம்யூனிஷ்டு சேக்கியா கமிசாராக இருந்தார். **நியாயமும் விடுதலையும்** என்ற கொரில்லாப்படை அணிகளின் நடவடிக்கைகளைக் கட்சி வழிநடத்தியது, இவற்றிற்கு பார்ரி தலைமை தாங்கினார். எல்லா கெரில்லாப்படை அணிகளின் நடவடிக்கையும் வடக்கு இத்தாலி தேசிய விடுதலைக் கமிட்டியால் ஒருங்கிசைவிக்கப்பட்டது. இக் கமிட்டியில் ஐந்து பாசிச எதிர்ப்புக் கட்சிகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர்.



ரோமை நோக்கி வந்துகொண்டிருக்கும் படையினர்

நேபிள்சில் நடந்த செப்ரம்பர் எழுச்சி தென் இத்தாலியில் மிக முக்கியமான எதிர்ப்பு இயக்கமாக அமைந்தது. முன்னாள் இராணுவத்தினர், தொழிலாளிகள், அறிவுஜீவிகள் ஆகியோர் இதில் பங்கேற்றனர். **நான்கு நாள் கடும் சண்டைகளுக்குப்பின் இவர்கள்** ஜேர்மனியப் பாதுகாப்புச் சக்திகளை சரணடையவைத்து, நகரை விட்டு வெளியேறுமாறு செய்தனர்.

(தொடரும்)

## யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை





டாங்கிப்படைகள்

# யாழில் கூட்டமைப்பு தலைமையில் மேதினநிகழ்வு நடத்துவதே நியாயம்

## விக்கிரமபாகு தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர்களின் கோட்டைக்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலேயே மேதின கூட்டம் இடம்பெற வேண்டும். அது தான் நியாயமானது. அவர்களின் தலைமையின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் கூட்டத்திற்கு எமது முழுமையான பங்களிப்பை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்என பொது எதிரணிக் கட்சிகளில் அங்கம் வகிக்கும் நவசமசமாஜக் கட்சியின் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலேயே மேதினம் கூட்டம் இடம்பெறவேண்டும் என கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசு கட்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற அதன் யாழ்.மாவட்ட கிளைக் கூட்டத்தின் போது தீர்மானம் நிறைவேற்றியிருந்தது.

இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே விக்கிரமபாகு கருணாரத்ன மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும்கூறியவை வருமாறு,

யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை நடத்துவதற்கு பொது எதிரணிக்கட்சிகள் தீர்மானித்துள்ள நிலையில் அங்கு அரசியல் செல்வாக்கும் மக்கள் அதிகாரத்தையும் கொண்டுள்ள தமிழ்தேசியக் கூட்டமைப்பு இந்த மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து தனது உறுதியான நிலைப்பாட்டை இதுவரையில் அறிவிக்கவில்லை.

இருப்பினும் கூட்டமைப்பின் தலைமையிலேயே யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டம் நடைபெற வேண்டும் என இலங்கை தமிழரசு கட்சி ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இவர்களின் இந்தத் தீர்மானமானது வரவேற்கத் தக்கதும் நியாயபூர்வமானதுமாகும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற ஒன்றிணைந்த பொது எதிர்க்கட்சிகளின் மேதினக் கூட்டம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ஒருசில இனவாதிகள் தமது எதிர்ப்பை வெளியிடும் முகமாக கொழும்பில் மேதினக் கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். இது குறித்து நாம் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற பொது எதிரணிக்கட்சிகளின் மேதினக் கூட்டத்திற்கு எமது ஒத்துழைப்பு வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம் என்றார் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின.

(அ-2)

## நிர்வாகத் தெரிவு

(சாவகச்சேரி)

பூவேந்தன் பாலர் பகல்பராமரிப்பு நிலைய இவ்வாண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவு கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது. இதில் தலைவராக வை. இராசரத்தினம், உபதலைவரா்க கு. மகாலிங்கம், செயலாளராக த.நிரோத், உபசெயலாளராக சி.மதீஸ்வரன், பொருளாளராக திருமதி ம.கீர்திநாதன் ஆகியோரும் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் ஆலோசகராக அதிபர்திருமதி. முகுந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.(அ-3-29)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வடமராட்சிக்கிளை7 இன் நடப்பாண்டிற்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இத் தெரிவின்போது தலைவராக சி.இரத்தினகுமார், செயலாளராக அ.டொமினிக், உப தலைவராக சி.இராவிச்சந்திரன், உப செயலாள்ராக வ.குபேந்திரன், பொருளாளராக கி.வேணுகுமார், போசகர்களாக க.நாகராசா, சி.ஜெயக்குமார் ஆகியோர் தெரிவாகினர். அத்துடன் சாதாரண அங்கத்தவர்களும் தெரிவாகியுள்ளனர். (அ-2)

## பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த 11 உத்தியோகத்தர்களை தாக்கிய குற்றச்சாட்டில் ரங்கல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இரு ஜீப் வர்கனங்களில் பயணம் செய்தபோது இப்பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடையூறு விளைவித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இப்பொலிஸார் இரவுநேர ரோந்தில் ஈடுபட்டிருந்தனர். சிவில் உடையில் காணப்பட்ட, அப்பொலிஸார் மது போதை யில் இருந்தமை பின்னர் அறியப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர் பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

03.03.2012 சனிக்கிழமை இறைபதம் அடைந்த் எமது குடும்பத் தலைவர்

**அமரர் செவ்வந்திநாதக் குருக்கள் சுவாமிநாதன்**



(SLPS Special Grade)

அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை 02.04.2012 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

**இங்ஙனம்**

**குடும்பத்தினர்**

"திருவேரகம்"

கரணவாய் கிழக்கு,

கரவெட்டி.

(8064)


## புலிகள் மீதான தடையை நீக்கக்கோரிய வழக்கு

### 9 ஆம் திகதி சென்னையில்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கக்கோரி ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தொடர்ந்த வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது.

புலிகள் இயக்கத்தை தடை செய்து மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பை சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு தீர்ப்பாயம் உறுதி செய்து தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை இரத்து செய்யக் கோரி ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ ரிட் மனுத்தாக்கல் செய்தார்.

அந்த மனுவின் மீதான விசாரணை வருகிற 9 ஆம் திகதி சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எலிப்பி தர்மாராவ் மற்றும் கிருபாகரன் ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த வழக்கில் வைகோ ஆஜராகி வாதாடுகிறார்.

(அ-2)

## ஒலிம்பிக் போட்டியில் புலிகளின் ஆதரவு அமைப்புக்கள் பிரசாரத்திற்கு முயற்சி

### கொழும்பு ஊடகம் தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புக்கள் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை எதிர்ப்பு பிரசாரங்களை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 12 ஆம் திகதி வரையில் லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உள்ளிட்ட அமைப்புக்கள் முனைப்புக்காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2007 ஆம் ஆண்டு கரீபியன் தீவுகளில் நடைபெற்ற கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டிகளின் போது சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கைக்கு எதிராக பிரசாரம் செய்திருந்தது.

அரசாங்கம் எதிர்ப்பை வெளியிட்டதனைத் தொடர்ந்து இந்தப் பிரசாரங்கள் கைவிடப்பட்டன. இலங்கைக்கு எதிரான பிரசர்ரங்களை தீவிரப்படுத்த புலி ஆதரவு அமைப்புக்கள் முனைப்புக்காட்டி வருவதாக குறித்த கொழும்பு ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)



# சிறுவர் அரங்கம்

57

## அம்புலி மாமா கதைகள்

## முயற்சி திருவினையாக்கும்

பழுவூரை ஆண்டு வந்த மன்னர் கிருஷ்ணபூபதி தன் குடிமக்களின் நலனில் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தார். அவருடைய பட்டத்து ராணியான ஜோத்சனா சிறந்த அறிவாளியாக திகழ்ந்தாள். ஒரு முறை ராணி அவரிடம் மக்களின் நலனை மந்திரிகளின் வாயிலாக அறிவதை விட தானே நேரில் சென்று கண்டறிவது சிறப்பானது என்றும் அதற்காக இரவு நேரங்களில் மாறுவேடமணிந்து மக்களோடு கலந்து பழகி அவர்களுடைய குறைகளை அவர்கள் வாயிலாகவே கேட்டறிய வேண்டுமென அறிவுரை பகன்றாள். அது சரியென்று தோன்றவே மன்னர் அன்று முதல் மாறு வேடமணிந்து நகர்வலம் வரத் தொடங்கினார்:



ஒருநாள் இரவில் மன்னர் முனிவர் போல் வேடமணிந்து நகர்வலம் வருகையில் சத்திரத்தின் வாயிலில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்த ஒரு தம்பதியைப் பார்த்தார். உடனே தன் குதிரையை விட்டு இறங்கிய மன்னர் அவர்களுடைய உரையாடல் செவிகளில் விழும் தொலைவில் அமர்ந்து கொண்டார். நாம் தலைநகருக்கு வந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன. கையிலிருந்த பணமும் செலவாகி விட்டது. இன்னமும் உங்களால் மன்னரை சந்திக்கவே முடியவில்லை. அப்படியே சந்தித்தாலும் என்ன இலாபம் என்று எனக்கு தெரியவில்லை. உங்களுக்கு தெரிந்த ஒன்றேயொன்று கதை சொல்வது மட்டும்தான்! அந்த திறமைக்கு மன்னர் அள்ளிக் கொடுப்பார் என்று எப்படி நம்புகிறீர்கள்? என்று கேட்டாள் அந்த நபரின் மனைவி!

அதைக் கேட்ட அவர் புன்னகையுடன் வேறு யார் அதை பாராவிட்டாலும் மன்னர் கிருஷ்ணபூபதி கட்டாயம் இரசிப்பார்.! அவரை மட்டும் ஒருமுறை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால் போதும்! அதன் பின்பு என் கதை சொல்லும் திறமையினால் அவரை கட்டாயம் மகிழ வைத்து விடுவேன்! இப்படித்தான் ஒரு நாவிதன் ஒரு நாட்டு மன்னரை சந்திக்க முயன்று வெற்றி பெற்றான். அதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகளை கதையாக கூறுகிறேன் கேள்! என்று அவர் சொல்லிவிட்டு கதையை தொடங்கினார். பல ஆண்டுகளுக்கு முன் கங்கைபுரியில் சுந்தரம் என்ற ஒரு நாவிதன் வசித்து வந்தான். முடி திருத்துவதை வெறும் கடமையாக மட்டும் கருதாமல் அதை ஒரு கலையாக பாவித்தான். அந்தக் கிராமத்தில் அனைவரும் சுந்தரத்திடம் தான் முடி திருத்திக்கொள்வர்!

ஊரிலுள்ள அனைவரும் அவனை பாராட்டுவதை கண்டு நாளடைவில் அவனுக்கு ஓர் ஆசை துளிர்விட்டது. தனது ராஜ்யத்தின் மன்னருக்கே முடி திருத்தும் வாய்ப்பு கிடைத்தால் மன்னர் அகமகிழ்ந்து போய் தன்னை ஆஸ்தான நாவிதான ஆக்கிவிடுவார் என்ற எண்ணம் வலுப்பெற்றது அதனால் ஒருநாள் தன் மனைவியுடனும் பிள்ளையுடனும் தலைநகரை அடைந்தான்.


ஆனால் அவன் நினைத்தது போல் அவன் எண்ணம் அத்தனை எளிதாக கைகூடவில்லை. அரண்மனை வாயிலை அடைந்ததும் வாயில் காப்போரிடம் நான் முடிதிருத்தும் கலையில் மிக வல்லவன். மன்னரிடம் என் திறமையை காட்ட விரும்புகிறேன். தயவு செய்து மன்னரை சந்திக்க என்னை அனுமதியுங்கள் என்று கெஞ்சினான். அவனுடைய வேண்டுகோளை கேட்ட காவலர்கள் அவனை ஏளனம் செய்து திருப்பியனுப்பி விட்டனர். ஆனால் சுந்தரம் தன் முயற்சியை கைவிடவில்லை. தினமும் அரண்மனை வாயிலில் மணிக்கணக்காக நின்று பலமுறை காவலர்களை கெஞ்ச ஆரம்பித்தான்.

ஆனாலும் அவர்கள் மசியவில்லை. ஒருநாள் அவர்களில் ஒருவன் ஏன் தம்பி வீணாக இங்கு வந்து தினமும் என் நேரத்தை வீணாக்குகிறாய்? மன்னருக்கு ஏற்கனவே ஒரு ஆஸ்தான நாவிதன் இருக்கிறான்.

அவன் பெயர் மாதவன் அவனை தவிர மன்னர் யாரிடமும் முடிதிருத்திக் கொள்ளமாட்டார். அதனால் நீ இங்கு வந்து நின்று கொண்டு எங்களை கெஞ்சிப் பயனில்லை என்றான். தன் முயற்சியில் சற்றும் தளராத சுந்தரம் உடனே மாதவனின் முகவரியை கேட்டு தெரிந்து கொண்டதுடன் அவனை பற்றிய விபரங்களையும் சேகரித்தான். மாதவன் அறுபது வயதுக் கிழவன் என்றும் அவனுக்கு பிள்ளை குட்டிகள் கிடையாது என்றும் தெரிந்து கொண்டான். உடனே தன் மனைவியுடன் கூடிப் பேசி ஒரு திட்டம் தயாரித்தார். அதன்படி தன் மனைவியையும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு மறுநாளே மாதவனை தேடி சென்றான். அந்த சமயம் மாதவன் தன் வீட்டு வாயிலில் கொய்யா மரத்தினடியில் அமர்ந்திருக்க அவன் மனைவி சமையலுக்கு காய் நறுக்கிக் கொண்டிருந்தாள். எவ்வித தயக்கமுமின்றி உள்ளே நுழைந்த சுந்தரம் அப்பா! சௌக்கியமா? என்று குசலம் விசாரித்து கொண்டே மாதவனின் அருகில் அமர சுந்தரத்தின் மனைவி மாதவனின் மனைவியை அணுகி அத்தே! மருமகள் நானிருக்க நீங்கள் ஏன் காய் நறுக்க வேண்டும்? என்று அந்த வேலையை தான் செய்யத் தொடங்கினாள். சுந்தரத்தின் சிறுபிள்ளை அப்பா! எனக்கு இந்த மரத்திலிருந்து கொய்யாப் பழம் பறித்துத் தா! என்று அடம் பிடிக்க தொடங்கினான். இன்னொருத்தர் வீட்டில் வந்து இப்படியெல்லாம் கேட்டகக்கூடாது என்று கூற அந்தச் சுட்டிப் பையன் இது இன்னொருத்தர் வீடு இல்லை! என் தாத்தாவின் வீடு! என்று ஒரு போடு போட்டான். தன்னைத் தாத்தா என்று அந்த சிறு பிள்ளை சொந்தம் கொண்டாடியதும் மாதவன் அந்தச் சிறுவனை கட்டியணைத்துக் கொண்டான்.



பிள்ளை பாக்கியம் அற்ற மாதவன் தம்பதி சுந்தரத்தை தங்கள் மகனாகவும் அவன் மனைவியை தங்கள் சொந்த மருமகளாகவும் நடத்த ஆரம்பித்தனர். தவிர சுந்தரமும் முடிதிருத்தும் தொழில் செய்கிறான் என்று தெரிந்ததும் மாதவனுக்கு அவனிடம் நெருக்கம் அதிகரித்தது. சில நாட்களிலேயே மன்னருக்கு முடி திருத்தச் செல்லும் போது மாதவன் தன்னுடன் சுந்தரத்தையும் அழைத்துச் செல்ல ஆரம்பித்தான்.



ஒருநாள் தற்செயலாக மாதவனால் செல்ல முடியாமல் போக சுந்தரத்திற்கு தன் திறமையை காட்ட வாய்ப்பு கிடைத்து விட்டது. மாதவனுக்கு பின்பு அவனே ஆஸ்தான நாவிதனாக மாறினான். ஆனால், மாதவன் தம்பதியை தங்களுடனே வைத்துக் கொண்டு பராமரிக்கவும் செய்தான்.

இந்த இடத்தில் கதையை நிறுத்திய அவர் ஒருவனுக்கு திறமையும் தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்தால் அவன் எடுத்த காரியத்தில் நிச்சயம் வெற்றி பெறுவான். அந்த அரிய குணங்கள் என்னிடமும் உள்ளன. அதனால் நானும் என் திறமையை காட்டி மன்னரை மகிழ்விப்பேன் என்றும் உறுதியாக நம்புகிறேன் என்றார். பின்பு அவர் தனது உரையாடலை சற்றுதொலைவில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த மன்னரை சுட்டிக்காட்டி அதோ உட்கார்ந்து இருக்கிறாரே அவரும் நான் கூறியதை கேட்டிருப்பார்! யார் கண்டது? அவரே ஒருக்கால் மன்னரிடம் சிபாரிசு செய்யலாம்! என்றார்.

அதைக் கேட்ட மன்னர் தனது மாறு வேடத்தை கலைத்து விட்டு அந்த நபரிடம் விரைவிலேயே மன்னரை சந்திக்கும் வாய்ப்பு உங்களுக்கு கிட்டும் என்று கூறிப் புன்னகையுடன் வெளியேறினார்.

# மேஜர் ஜெனரல் பிரசன்னவுக்கு எதிராக லண்டனில் வழக்கு

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள இராஜதந்திர விலக்குரிமைக்கு எதிராக பிரித்தானிய நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவுக்கு வழங்கப்பட்டுள்ள இராஜதந்திர விலக்குரிமையைப் பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் நீக்க வேண்டும் என்றும் அதன்மூலம் அவருக்கு எதிராக லண்டனில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் உலகத் தமிழர் பேரவை சார்பில் நேற்று முன்தினம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இராஜதந்திர விலக்குரிமையை அனுப்பும் நாட்டினால் மட்டுமே நீக்க முடியும் என்றபோதும் இராஜதந்திர விலக்குரிமையை நீக்கும்படி பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகத்தினால் கோர முடியும் என்று உலகத் தமிழர் பேரவை சார்பில் முன்னிலையான சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கம் இராஜதந்திர விலக்குரிமையை நீக்க மறுத்தால் பிரித்தானிய வெளிவிவகார பணியகத்தினால் அவரை நீதிமன்ற உத்தரவுப்படி நாடு கடத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா நீதியின் முன் நிறுத்தப்பட்டு பொறுப்புக்கூற வேண்டும் என்று உலகத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

தான் செய்த மோசமான குற்றங்களுக்கு நீதி கிடைக்கும் வரை தமிழர்கள் ஓயமாட்டார்கள் என்று இலங்கையின் போர்க்குற்றவாளிகளுக்குத் தெரிய வேண்டும்.

அனைத்துலக அரங்கில்தாம்வரவேற்கப்படவில்லை என்ற செய்தியை ஆட்சியாளர்களுக்கு இந்த நீதிமன்ற நடவடிக்கை மூலம் உணர்த்த வேண்டும்.

அவுஸ்திரேலியாவிலும் நியூயோர்க்கிலும் உள்ள ஏனைய போர்க்குற்றவாளிகளுக்கு எதிராகவும் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளார் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் முகமாலைப் பகுதியில் இருந்து முல்லைத்தீவை நோக்கி கரையோரமாக முன்னேறிய இலங்கை இராணுவத்தின் 55 ஆவது பிரிவுக்கு மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவே தலைமை தாங்கியிருந்தார்.

மருத்துவமனைகள் மற்றும் பொது மக்கள் வாழ்விடங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தி படுகொலைகளை செய்ததன் மூலம் போர்க்குற்றங்களை இழைத்ததாக இவர் மீது அண்மையில் வெளியான சனல்-4 ஆவணப்படம் குற்றம்சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மேதினக்கூட்டத்தில் இணைவது குறித்து தீர்மானிக்கவில்லை

## சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)


ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து மேதினக் கூட்டம் நடத்துவது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரதான எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டி யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை நடத்த ஐக்கிய தேசியக்கட்சி முயற்சித்து வருகின்றது. கூட்டத்தில் பங்கேற்பது என்றே முதலில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் ஐக்கிய தேசியக்கட்சியில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக அந்தக் கட்சியுடன் இணைந்து மேதினக் கூட்டம் நடத்துவா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் மேதினக்கூட்டம் நடத்தப்படுவதனை சஜித் தரப்பினர் விரும்பவில்லை என ஐக்கிய தேசியக்கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)





அச்சுவேலி வடக்கு அருள்மிகு சரசாளி சித்திர வேலாயுதர் ஆலய ஆரம்பகாலப் பூசகரும் உரிமையாளருமாகிய வெள்ளையன் குழந்தைஐயா ஞாபகார்த்த மண்டப அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோர் அடிக்கல் நாட்டுவதைப் படங்களில் காணலாம்.

# மேர்வின் கூற்றுக்கு விளக்கம் தெரியாது

## அவரிடமே கேளுங்கள்-ஜனாதிபதி

(கொழும்பு)

மஹிந்த பரம்பரை ஆட்சியில் இருக்கும் வரை தன்னை எதுவும் செய்ய முடியாது என்ற சண்டியர் மேர்வினின் வீராப்பிற்கு ஜனாதிபதிக்கு விளக்கம் தெரியவில்லையாம். இதற்கான விளக்கத்தை அவரிடமே கேட்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள கருத்துத்தொடர்பில் அவரை நேரில் அழைத்து விசாரணை செய்து விளக்கத்தை பெறுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவரை விசாரணை செய்யுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இலங்கையில் ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் வரை டி.ஏ.ராஜபக்ஷ பரம்பரை ஆட்சியில் இருக்கும் வரை தன் மீது எவரும் கைவைக்க முடியாது என அமைச்சர் மேர்வின் சில்வா அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

ஜெனீவா தீர்மானத்தினையடுத்து இலங்கை ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்று தமது நாட்டை காட்டிக் கொடுக்கும் துரோகச் செயலை மேற்கொள்கின்றனர்.

இவர்கள் இலங்கைக்கு வரும் சந்தர்ப்பத்தில் அவர்களுடைய கைகால்கள் உடைக்கப்படும் என சண்டியர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

அதனை விட மஹிந்த பரம்பரை ஆட்சியில் இருக்கும் வரை தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்வும் வீராப்பு பேசியுள்ளார்.

இதனையடுத்து மஹிந்த ராஜபக்ஷவுக்கு சண்டியரின் கூற்றுக்கு விளக்கம் தெரியவில்லையாம்.

அதனால் மேர்வினிடமே இது குறித்த விளக்கத்தினை கேட்டறிந்து கொள்ள ஜனாதிபதி ஆர்வமாக உள்ளார்.

அதனால் அந்தப் பொறுப்பினை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேளனவிற்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# ஜெனீவா பிரேரணை குறித்து நாடாளுமன்றில் விவாதம்

ஜெனீவா பிரேரணை தொடர்பில் எதிர்வரும் 3, 4 ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படவுள்ளது.

ஜெனீவா பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டுமென கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விவாதத்தின் போது அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட உள்ளது.

தமிழ்,சிங்கள புத்தாண்டு விடுமுறையின் பின்னர் மே மாதம் 8 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கப்படவிருந்தது. எனினும், கட்சி தலைவர்களின் கோரிக்கைக்கு அமைய அடுத்த வாரம் விவாதம் நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க கோரியுள்ளார்.

(அ-2)

# ஜெனீவா தீர்மானம் பகிரங்க விவாதத்திற்கு வாருங்கள்

## அமைச்சர்களை அழைக்கிறார் கிரியெல்ல

(கொழும்பு)

ஜெனீவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து பகிரங்க விவாதத்திற்கு வருமாறு வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரீஸ், பெருந்தோட்டத்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோருக்கு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல சவால் விடுத்துள்ளார்.

மேற்படி தீர்மானம் அரசாங்கத்திற்கு எதிராகவே கொண்டு வரப்பட்டது எனவும் நாட்டிற்க்கு எதிராக அல்ல எனவும் அவர் கூறினார்.

இக்கருத்தை நான் நிரூபிக்க விரும்புகிறேன். இவ்விவகாரத்தை அரசாங்கம் பொறுப்பற்ற விதத்தில் கையாண்டமையால் அதற்கு எதிராக இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டது. எனது கருத்து சரியானது என நான் நிரூபிப்பேன். ஜெனீவாவுக்கு பிரசாரம் செய்யச் சென்ற மேற்படி இரு அமைச்சர்களும் எனது சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

(அ-2)

# தமிழினிக்கு விளக்கமறியல் தொடர்ந்து நீடிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளரான (தமிழினி) சிவகாமியை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்காததால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்ற பிரதம நீதவான் ரஸ்மி சிங்கப்புலி நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

தமிழினி தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையின் முழு ஆவணமும் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து சட்டமா அதிபர் இன்னும் ஆலோசனை வழங்கவில்லை எனவும் இரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு பிரதம நீதவான் தமிழினியை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-2)

## சர்வதேச சமூகம் காத்திரமான பங்களிப்பை செய்ய வேண்டும்

### ஆஸியை வலியுறுத்துகிறது நாடு கடந்த அரசு

(கொழும்பு)

தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை கவனத்தில் கொண்டு சர்வதேச சமூகம் தனது காத்திரமான பங்களிப்பை இலங்கைத்தீவில் செலுத்த வேண்டுமென நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் வெளிவிவகாரத்துறை அமைச்சகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பில் சுதந்திரமான சர்வதேச விசாரணைப் பொறிமுறை தமிழீழத்தில் ஐ.நாவின் அனைத்துலக பாதுகாப்பு பொறிமுறை அனைத்துலகத்தின் கண்காணிப்பில் தமிழீழத்தில் பொதுசன வாக்கெடுப்பு ஆகிய தமிழர்களின் நியாயமான கோரிக்கைளை கவனத்தில் கொண்டு சர்வதேச சமூகம் தனது காத்திரமான பங்களிப்பை இலங்கைத்தீவில் செலுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் பழங்குடி மக்களுக்கான அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பின் ஒன் கீன் வையற் சந்தித்து கலந்துரையாடிய போதே துணை அமைச்சர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தினை விளக்கிய அவர் ஐ.நா. மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் குறித்து தமிழர்களின் நிலைப்பாட்டினை தெரியப்படுத்தினார்.

தமிழீழ மக்களுக்கு நியாயமானதும் நிலையானதுமான அரசியல் தீர்வினைக் காண அவுஸ்திரேலியா தலைமைதாங்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இந்நிலைப்பாட்டினை கரிசனையோடு கவனத்தில் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பிற பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இது குறித்து கலந்துரையாடுவதாக உறுதியளித்துள்ளார். (அ-2)

## இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு தொடர வேண்டும்

### நோர்வே வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது என நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜொனாஸ் ஸ்டோரே தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரஜைகளை சர்வதேச குற்றவியில் நீதிமன்றில் ஆஜர் படுத்த முடியாது. போர்க்குற்றச் செயல் தொடர்பில் சுயாதீன விசாரணைக்குழு ஒன்றை நிறுவ வேண்டும் என்றாலும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடருமாறு நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் கிட்டார்க் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் கிட்டார்க் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த போதே அமைச்சர் ஜொனாஸ் ஸ்டோரே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நீதிமன்றம் தொடர்பான ரோம் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை. எனவே, இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையினால் மட்டுமே நடவடிக்கை எடுக்க முடியும்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆயுதம் ஏந்தியதன் காரணமாகவே 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முடியவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு இன்று முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்யலாம் என யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் யாழ். வர்த்தகர்களை கேட்டுள்ளது. (அ)

## ஒலிபெருக்கி பாவிக்க அனுமதிபெற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஒலிபெருக்கி பாவிப்பதாயின் உரிய அனுமதி பெற்று உரிய கட்டுப்பாட்டிற்கமைவாகவே பயன்படுத்த வேண்டும் என மேற்படி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.கிருஸ்ணராசன் அறிவித்துள்ளார்.

மேலும் பொலிஸார் விசேட கண்காணிப்பில் ஈடுபடுவார்கள் எனவும் இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கடந்த வியாழக்கிழமை மேற்படி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## 2012.04 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1793-ஜப்பானில் உன்சென் எரி மலை வெடித்ததை அடுத்த நிக ழ்ந்த நிலநடுக்கத்தில் 53 ஆயி ரம் பேர் வரை உயிரிழந்தனர்.

★ 1826-சாமுவேல் மோரி உள் எரி பொறி க்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1867-சிங்கப்பூர், பிரித்தானிய குடி யேற்ற நாடாகியது.

★ 1873-அட்லாண்டிக் என்ற பிரித்தா னியாவின் நீராவிக்கப்பல் கனடாவில் நோவா ஸ்கோ ஷேயில் மூழ்கியதில் 547 பேர் வரை உயிரிழந்தனர்.

★ 1891-சிக்காக்கோவில் றிக்லி நிறு னம் ஆரம்பிக்கப்பட்டது

★ 1924-அடொல்ஃப் ஹிட்லர் ஐந்தாண் டுகள் சிறைத்தண்டனை பெற்றார். ஆனாலும் அவர் 9 மாதங்க ளில் விடுதலை பெற்றார்.

★ 1935-இந்திய ரிசர்வ் வங்கி ஆரம் பிக்கப்பட்டது.

★ 1937-யேமனின் ஏடென் பிரித்தா னிய குடியேற்ற நாடாகியது.

★ 1939-எசுபானிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர் ஐக்கிய அமெரிக்காவின் படைகள் ஜப்பானின் ஒக்கி நாவா தீவுகளில் இறங்கினர்.

★ 1946-அலூஷன் தீவுகளில் நிகழ்ந்த 7.8 அளவு நிலநடுக்கம் கார ணமாக ஹவாய் தீவுகளில் ஆழிப்பேரலை ஏற்பட்டு 157 பேர் வரை உயிரிழந்தனர்.

★ 1946-மலாய் கூட்டமைப்பு உருவானது.

★ 1948-பரோ தீவுகள் டென்மார்க்கில் இருந்து தன்னாட்சி பெற்றது.

★ 1949-சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சீனத் தேசியக் கட்சியுடன் பெய்ஜிங்கில் நடத்திய பேச்சு க்கள் தோல்வியில் முடிந்தன.

★ 1957-இந்தியாவில் நயா பைசா நாணயம் அறிமுகப்படுத்தப் பட்டது.

★ 1973-புலிகளைக் காப்பதற்கான செயற்றிட்டம் இந்தியாவின் ஜிம் கார்பெட் தேசியப் பூங் காவில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1976-அப்பிள் கணனி ஸ்டீவ் ஜொப்ஸ் Steve Wozniak ஆகியோரால் ஆரம்பிக்கப்பட் டது.

★ 1979-ஈரான் 98% மக்கள் ஆதரவு டன் ஓர் இஸ்லாமியக் குடிய ரசாகியது.

★ 1981-சோவியத் ஒன்றியத்தில் பகலொளி சேமிப்பு நேரம் முதல் தடவையாக அறிமுகப் படுத்தப்பட்டது.

★ 1997-ஹேல் பொப் வால்வெள்ளி பூமியின் சுற்றுப்பாதை வீச் சைக் கடந்தது.

★ 2001-யூகொஸ்லாவியாவின் முன் னாள் ஜனாதிபதி சுலோப தான் மிலோசெவிச் போர்க் குற்றங்களுக்காக பொலிஸா ரிடம் சரணடைந்தார்.

★ 2001-நெதர்லாந்து சமப்பால் திரு மணத்தை சட்டபூர்வமாக்கிய முதலாவது நாடானது.

★ 2004-கூகுள் ஆயிரம் மெகாபைட் கொள்ளளவுள்ளதான ஜிமெ யில் என்ற இலவச மின்ன ஞ்சல் சேவையை அறிமுகப் படுத்தியது.

★ 2006-ஈரான் மேற்கில் லோரிஸ் டான் மாகாணத்தில் இடம் பெற்ற நிலநடுக்கத்தில் 66 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★ 1815-ஒட்டோ ஃபொன் பிஸ்மார்க், ஜேர்மனிய அரசியலாளர் (இ.1898)

★ 1865-ரிச்சார்ட் சிக்மோண்டி, நோபல் பரிசு பெற்றவர் (இ.1929)

★ 1875-எட்கார் வாலஸ், ஆங்கில எழுத்தாளர் (இ.1932)

★ 1878-சி.கணேசையர், ஈழத்துத் தமிழறிஞர் (இ.1958)

★ 1919-ஜோசப் மறி, நோபல் பரிசு பெற்றவர்

★ 1933-குளோட் கொஹென் டனூட்ஜி, நோபல் பரிசு பெற்றவர்

★ 1940-வங்காரி மாதாய், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்

### இறப்புக்கள்

★ 1960-துங்கு அப்துல் ரகுமான், மலேசியாவின் மன்னர் (பி.1895)

★ 1968-லேவ் லண்டாவு, நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி.1908)

★ 1976-மக்ஸ் ஏர்ண்ஸ்ட், ஜேர்மனிய ஓவியர் (பி.1891)

★ 2007-தி.வே.கோபாலையர், தமிழறிஞர் (பி.1926)

### சிறப்பு நாட்கள்


★ ஏப்ரல் முட்டாள்கள் தினம்.

★ மலேசிய தொலைக்காட்சி வானொலி நிலையம் ஆரம்பிக்கப்பட்ட தினம்

# அதிசய உலகம்...



## அட்லாண்டிக் பெருங்கடலை கடந்து சாதனை படைத்த ஹங்கேரி வீரர்



ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த கபோர் ரகான்சே என்ற வீரர் எடை குறைந்த லேசான துடுப்பு படகு மூலம் அட்லாண்டிக் பெருங்கடலை கடந்து சாதனை படைத்துள்ளார்.

கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி போர்த்துக்கல்லில் உள்ள லாகோஸ் நகரில் இருந்து ராகன்சே தனது பயணத்தை தொடங்கினார்.

செல்லும் வழியில் அவரது படகில் ஏற்பட்ட பிரச்சினைகள் அனைத்தையும் சமாளித்து தனது 76 நாள் பயணத்துக்கு பின்பு அட்லாண்டிக் கடலின் எல்லையான கரீபியன் பகுதியை அடைந்தார்.

வழியில் கானாரி தீவில் சில நாட்கள் தங்கி ஓய்வெடுத்ததாக ராகன்சே தெரிவித்துள்ளார். மேலும் சிறு துடுப்பு படகு மூலம் அட்லாண்டிக் கடலை கடந்த முதல் வீரர் என்ற பெருமையை ராகன்சே பெற்றுள்ளார்.

## விநோதமான முறையில் வளரும் நீர்யானைக்குட்டி



பொதுவாக மனிதர்கள் செல்லப்பிராணிகள் என்று ஒரு குறிப்பிட்ட விலங்கினத்தையே வளர்த்து பயிற்சியும் கொடுப்பதுண்டு. இங்கு அவற்றிற்கு மாறாக தென்னாபிரிக்காவில் பிறந்து 6 நாட்களே ஆன நீர்யானைக்குட்டி ஒன்றை அதன் தாய் நீர்யானை புறக்கணித்து விட்டதால் பெண் ஒருவர் எடுத்து வளர்க்கிறார்.

தனது சொந்தக் குழந்தையைப் போன்று கண்காணித்து வரும் குறித்த பெண் தினந்தோறும் குளிப்பாட்டுவது மட்டுமன்றி இக் குட்டிக்கு 3 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை 125 மில்லி லீற்றர் பாலையும் கொடுக்கின்றார்.

## போன் செய்து உயிர்பிழைத்த நாய் இங்கிலாந்தில் விநோதம்



இங்கிலாந்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த நாய் ஒன்று அவசர மையத்திற்கு தொலைபேசி அழைப்பு செய்து உயிர் பிழைத்த சம்பவம் அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


இங்கிலாந்தின் வெஸ்டியார்க்ஷயர் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் இருந்து அவரசர உதவி சேவை மையத்துக்கு ஒரு அழைப்பு வந்தது. போனை எடுத்து அங்கிருந்த ஊழியர் பேசினார். ஆனால், மறுமுனையில் இருந்து வெறும் மூச்சு சத்தம் மட்டுமே தொடர்ந்து கேட்டது.

பேச முடியாத அளவுக்கு யாரோ ஆபத்தில் இருக்கிறார் என்பதை உணர்ந்த ஊழியர் உடனடியாக காவல் துறை அதி காரிகளை அந்த வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு சென்ற அதிகாரிகள் வீடு பூட்டியிருந்ததை பார்த்து குழப்பம் அடைந்தனர். எனினும் வீட்டை உடைத்து உள்ளே செல்ல முயன்றனர். அதை பக்கத்து வீட்டுக்காரர் பால் வாக்கர் என்பவர் பார்த்துவிட்டு வீட்டு சாவியை எடுத்துக் கொண்டு ஓடினார். பின்னர் அனைவரும் வீட்டுக்குள் சென்றனர்.

அங்கு ஒரு அறையில் போன் வயர்கள் கழுத்தில் சிக்கி காயத்துடன் வளர்ப்பு நாய் ஜார்ஜ் உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது. உடனே வயர்களை பிரித்து எடுத்தார்பால் வாக்கர். பசட் ஹூண்ட் வகையை சேர்ந்த ஜார்ஜுக்கு வயது 2 தான். கழுத்தில் சிக்கலாக போன் வயர் சிக்கியதும் டயல் எண்களை தாறுமாறாக அழுத்தியுள்ளது. அதில் அதிர்ஷ்டவசமாக 999 என்ற அவசர உதவி மையத்துக்கு தொலைபேசி அழைப்பு சென்றுள்ளது தெரியவந்துள்ளது.

## கிளியை போன்ற விநோத பறவை



பல்வேறு பறவைகளையும் உயிரினங்களையும் கண்டுபிடித்து ஆராய்ச்சியில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் தற்போது விநோத கிளியைப் போன்ற பறவையும் கண்டுபிடித்துள்ளனர்.

பார்ப்பதற்கு கிளியைப் போன்ற சாயலில் இருக்கும் விநோத பறவை ஒன்று அதன் அசைவுகளிலும் கிளிகளைப் போன்று செயற்படுகின்றது.

எனினும் இப்பறவை எழுப்பும் ஒலியானது கிளிகள் எழுப்பும் ஒலியிலிருந்து முற்றாக வேறுபடுகின்றது.

இப்பறவையானது கிளிகளின் இனத்தைச் சார்ந்தவையாக இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கால்களுடனான பாம்பின் எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

கால்களுடன் வாழ்ந்த பாம்பின் எலும்புக்கூடு லெபனானில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பாம்புகள் ஊர்வன இனத்தை சேர்ந்தவை அவைகளுக்கு கால்கள் கிடையாது. இதற்கு முன்பு கால்களுடன் பாம்புகள் இருந்ததற்கான ஆதாரம் தற்போது கிடைத்துள்ளது. பழங்காலத்தில் வாழ்ந்த அரிய உயிரினங்கள் குறித்து ஆய்வு செய்யும் நிபுணர்கள் லெபானானில் ஒரு பாம்பின் எலும்பு கூட்டை கண்டெடுத்தனர்.

சுமார் 19 இஞ்ச் நீளமுள்ள அந்த பாம்பின் எலும்புக்கூட்டில் கால்கள் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. இவை சுமார் 9 1/2 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாக இருக்கலாம் என கருதப்படுகின்றது.

லெபனானில் கண்டெடுக்கப்பட்ட பாம்பின் எலும்புக்கூட்டில் சுமார் 1 இஞ்ச் அளவுக்கு கால் எலும்புகள் இருந்தன. அதே நேரத்தில் பாம்பின் வயிற்றுப் பகுதியில் கால்கள் வளர்ந்து வந்ததற்கான அறிகுறிகளும் இருந்தன.

அந்த எலும்புகள் 1/2 இஞ்ச்அளவில் வளர்ந்திருந்தன இந்த வகை பாம்புகள் கால்கள் மூலம் நடந்து திரிந்ததால் நிலத்திலும் நீரிலும் பொந்துகளிலும் வாழந்து இருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். பலகோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இந்த வகை பாம்புகளின் கால்கள் காலப்போக்கில் படிப்படியாக மறைந்து அவை ஊர்வன இனத்தை சேர்ந்தவையாக மாறியிருக்கலாம் என்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

## யானையின் புத்திசாலித்தனம்



சிகரத்தை தொடும் தொழில்நுட்ப வளர்ச்சி மனிதனுக்கு மட்டுமன்றி விலங்குகளையும் வெகுவாக கவர்ந்துள்ளதாக உள்ளது.

இன்றைய காலகட்டத்தில் மிகவும் விரைவாகவும் பலரின் அபிமானங்களை பெற்று வருவது கைத்தொலைபேசியின் வளர்ச்சியாகும். பல நிறுவனங்கள் போட்டி, தமது உற்பத்திகளை பெருக்க புது புது உக்திகளை பயன்படுத்தி வருகின்றன.

இங்கு ஒரு யானை ஒன்று மிகவும் அலாதியாக கைத்தொலைபேசியை இயக்குகின்றது பாருங்கள்.

Samsung Galaxy என்ற கைத்தொலைபேசியை எவ்வாறு இயக்குகின்றது. அந்த சம்பவத்தினை வீடியோவாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

# இவ்வுலகில் யாரையும் நம்பிவிட முடியாது குருத்தோலை ஞாயிறு கற்பிக்கும் பாடம்

“இறக்கும் வரை நம்பிக்கை யோடு இரு. அவ்வாறாயின் வாழ்வை உனக்கு முடியாகச் சூட்டுவேன்” (தி.வெ 2.20)

கத்தோலிக்க திருச்சபையின் முக்கியமான நிகழ்வுகளில் இன்று நாம் கொண்டாடுகின்ற குருத் தோலை ஞாயிறு வழிபாடு கட ந்த மாதம் 22 ஆம் திகதி தொடங்கிய திருப்பாடுகளின் தவக்கர்ல நிகழ்வுகளின் முக்கி யமான புதின வாரத்திற்குள் அழைக்கின்றது.

கத்தோலிக்க விசுவாசிகளின் கருத்துப்படி தவக்காலம் என்பது அவர்களின் விசுவாசத்தை சற்று இரை மீட்டுப் பரர்ப்பதும் இறை மகன் இயேசு மனித உருத்தாங்கி மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டதை நினைவு கூர்வ தோடு தங்களுடைய ஆன்ம காரியங்களில் இன்னும் ஆழமாக வேரூன்றி கத்தோலிக்க விசு வாசத்தில் மனிதநேயத்துடன் வாழவும் இந்தத் தவக்காலம் உதவுகின்றது.

“ஆண்டவரே நம்மீது ஒளி வீசினார். மரக்கிளைகளைக் கையில் ஏந்தி விழாபவனி நடத்துங்கள்” (தி.பா. 118:27). இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஜெருசலேம் மாநகர வீதிகளில் நடைபெறும் ஒரு பவனியை இன்றும் கத்தோலிக்க திருச்சபை நினைவு கூர்ந்து இன்று ஒருவருக்கு பலர் ஊர்வலம் போகும் நாட்டில் அன்று பலருக் காக ஒருவர் ஊர்வலம் போன நிகழ்வை, காரணத்தைச் சிந்திக்க அழைத்து நிற்கின்றது.

இந்த ஊர்வலமானது அதிகார வர்க்கத்தினால் பல உண்மைக ளையும் அசிங்கங்களையும் மறைப் பதற்காக நடத்தப்பட்ட ஊர்வலம் அல்ல. மாறாக மனித விடுதலைக் காக, ஆன்மீக விடுதலைக்காக இறைதந்தையின் சித்தத்தை நிறை வேற்றவும் அடிமைத்தனத்திலிருந்து மக்களை விடுவிக்க விருப்பம் கொண்ட ஓர் இறை அரசனின் ஊர்வலம்.

இந்த ஊர்வலம் ஆடம்பர வாகனத்திலோ குதிரையிலோ அல்ல சாதாரண கழுதைக் குட்டியின் மேல் பொய் வாக்கு றுதிச் சுலோகங்களுடனும் அல்ல. புதுமைக்கும் புதுவாழ்வுக்கும் அடையாளமான குருத்து ஓலை களையும் பச்சைக் கிளைகளையும் அசைத்து ஓசான்னா (எபிரேய மொழியில்-காப்பாற்றும்) என்ற கோசத்துடன் இயேசுவே நம்மைப் பார்வோனுடைய அடிமைத்தனத்தில் இருந்து மீட்க வரும் அரசன் என்ற தொனியில் இயேசுவை வாழ்த்தி ஊர்வலம் போகின்றனர்.

இன்றைய இந்த குருத்து ஞாயிறு திருவழிபாடு மக்களின் நிலையற்ற தன்மையையும் தெளிவுபடுத்துகின் றது. எந்த மக்கள் ஓசான்னா பாடி இயேசுவை ஜெருசலேம் நகருக்கு அழைத்துச் சென்றார்களோ அதே மக்கள் கூட்டம் இயேசு கைது செய்யப்பட்ட போது அவன் ஒழிக ஒழிக என கூச்சலிட்டது (மத் 15:13) இதை நாம் நன்றாக உணர வேண்டும்.

இவ்வுலகில் நாம் யாரையும் நம்பி விட முடியாது என்ற இயேசுவின் கணிப்பு சரியானதே. இன்று சில நாட்களுக்கு முன் எமது நாட்டில் நடைபெற்ற சில நிகழ்வுகளும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுக் களே. “தொழுத் கையுள்ளும் படை ஒடுங்கும்” (குறள்:828) என்கிறார் திருவள்ளுவர். அதாவது உன் பகைவன் உன்னைக் கைகூப்பி வணங்கினால் அவனை நம்பாதே. ஏனெனில் அவனுடைய கூப்பிய கைகளிலே கத்தியை வைத்திருப் பான்.

இதுதான் இறைமகன் இயேசு கிறிஸ்துவின் விடுதலையிலும் நடந்தது. யாருக்காக இறைமகன் சிலுவை சுமக்க தயாராக இருந் தாரோ யார் யார் எல்லாம் இன்று குருத்தோலை ஞாயிறு தினத்தில் இயேசுவை ஓசான்னா பாடி ஆர்ப்பரித்தார்களோ அவர்களே ஐந்தாம் நாள் பெரிய வெள்ளிய ன்று சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று பிலாத்து அரசனிடம் முறையிட் டார்கள். வாழ்க! வாழ்க! என்று கூறிய கூட்டம் ஒழிக! ஒழிக! என்று கூச்சல் போடுகின்றது. இதைத் தான் எலும்பில்லா நாக்கு எதையும் பேசும் என்று கூறு வதோ!

“என்ன மதிதநேயம்”

“என்ன பிறர் அன்பு”

“என்ன மனிதர்கள்”

இன்று நாம் நினைவுகூருகின்ற இந்தக் குருத்தோலைப் பவனி இயேசுவின் பாடுகளை மட்டும் எமக்கு நினைவுபடுத்துகிறதா? அல்லது நான் எனது உறவின் பாடுகளை நினைத்து அவர்களுக்கு என்ன செய்யப்போகின்றேன் என்பதை சிந்திக்கத் தூண்டுகி ன்றதா? எனது மனித நேயப்பணி கள் தொடரவும் என் நாட்டிற்கும் என் உறவுகளுக்கும் நான் செய்யப் போகும் கிறிஸ்துவின் பாஸ்கா நிகழ்வுகளில் இந்தப் புனித வாரம் என்னையும் புனித நிலைக்கு உயர்த்துமா...???

அருட்பணி ப.அலன் நிர்மலதாஸ்
பலாங்கொட

# இனப்பிரச்சினை தொடர்பில் சிந்திப்பது குறைந்துவிட்டது

*அமைச்சர் டியூ தெரிவிப்பு*

(கொழும்பு)

அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கப் படாவிட்டால் சமூகத்தின் கீழ் மட்டத்திற்கான அரசின் நலன்புரிகளைக் கொண்டு செல்ல முடியாத நிலையேற்படும். ஆனால் இது தொடர்பில் கலந்துரையாடல்கள் இல்லாமை கவலையளிக்கின்றது என்று அமைச்சர் டியூ. குணசேகர பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் தெரிவித்தார்.

பொருளாதாரப் பிரச்சினை தொடர்பாக மட்டுமல்ல இனப்பிரச்சினை தொடர்பாகவும் சிந்திப்பது குறைந்து விட்டதென்றும் அமைச் சர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றவரிகள்திருத்தச்சட்டமூல பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அரசாங்கத்தின் செலவு தொடர்பாக அதிகம் பேசப்படுகின்றது. ஆனால் வருமானம் தொட ர்பாக பேசுவதில்லை. தனிநபர் ஆதாயம் அதிகரித்துள்ளது. தேசிய உற்பத்திகள் அதிக ரித்துள்ளன. ஆனால் அரசின் வருமானம் அதி கரிக்கவில்லை இது சமூகத்தைப் பாதிக்கும்.

தனியார் துறை ஊழியர்களுக்கு சேம லாப நிதி ஓய்வூதியம் போன்ற வசதிகள் உண்டு. ஆனால் விவசாயிகள், தொழிலாளிகள் என பலர் நடுத்தெருவில் நலன்கள் இல்லை. எனவே, பொருளாதாரக் கொள்கை தொடர் பில் மாற்றம் தேவை.

கையடக்கத் தொலைபேசி இன்று அத்தி யாவசிய பொருளாகியுள்ளது. வருமானத்தை அதிகரிக்காமல் இருப்பது கீழ் மட்டத்திற்கு நலன்புரிகளைச் செய்ய முடியாது. எந்த வொரு ஊடகமும் தொழிற்சங்கமும் அரசின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிப்பதில்லை.

சிந்திக்கும் நிலை மாறியுள்ளது. இனப் பிரச்சினை தொடர்பிலும் பொருளாதார பிரச்சினையாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களில் புத்திஜீவிகள் பிரச் சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவ தில்லை.

சர்வதேச ரீதியில் தேசிய ரீதியில் நெருக்க டிகளை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறாமை கவலைக்குரிய விடயமாகும் என்றார். (அ-2)

# மேர்வினுக்கு எதிராக ஐந்து கோணங்களில் விசாரணை

(கொழும்பு)

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில் வாவிற்கு எதிராக ஐந்து கோணங்களில் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்ப ட்டுள்ளன.

மேர்வின் சில்வா அண்மையில் வெளி யிட்ட சில கருத்துக்கள் தொடர்பில் விசார ணைகள் நடத்தப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித் துள்ளார்.

விசாரணைகளின் போது குற்றச் செய ல்கள் நிரூபிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள் ளார். சிரேஷ்ட ஊடகவியல்ாளர் போதல ஜயந்தவை தாக்கி தாமே நாட்டை விட்டு வெளியேற்றிய தாக அண்மையில் அமை ச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்த கருத்துக்கு எதிராகவே பொலிஸ் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, நான் தப்பிச் சென்றதாக தகவல்களை பிரசாரம் செய்யும் நபர்கள் குரங்குக்ளாகவே கருதப்பட வேண்டும். மக்களுக்கு நேர்மையாக சேவையாற்றும் பிரதிநிதி என்ற ரீதியில் எவருக்கும் அஞ்சப் போவதி ல்லை எனவும் ஜப்பானுக்கு விஜ யம் செய்ததைத் தொடர்ந்து சிலர் பிழையான பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ள தாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# தங்கம் கடத்திய இந்தியர் சென்னையில் கைதானார்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை மிகவும் சூட்சுமமான முறையில் கடத்திய இந்தியர் ஒருவரை சென்னை விமான நிலைய சுங் கப்பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர்.

தமிழ்நாடு சென்னை மண்ணடியை சேர்ந்தவர் முகமது ரியாஸ். வயது 55 இவர் இலங்கையில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் நேற்று முன்தினம் அதிகாலை சென்னை வந் தார்.

சுங்கவரி செலுத்தக்கூடிய வகையில் தன்னிடம் எந்த பொருளும் இல்லை எனக்கூறி வெளியேற முயன்றார். அவரை தடுத்து நிறுத்திய சுங்கப்பிரிவு அதிகாரிகள் உடைமைகளை சோதனையிட்டனர்.

அப்போது அவரது சூட்கேசில் 10 இற் கும் மேற்பட்ட போட்டோ அல்பங்கள் இருந் தன. அவற்றில் பொருத்தப்பட்டிருந்த கம்பி வளையங்கள் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது., சோதனையில் அல்பத்தில் பொருத்தப்பட்டிருந்த கம்பி வளையங்கள் அனைத்தும் தங்கத்தால் செய்யப்பட்டு வெள்ளி முலாம் பூசப்பட் டவை எனத் தெரிந்தது.

தொடர்ந்து நடத்திய சோதனையில் சூட் கேசை தள்ளிச் செல்ல உதவும் கைப்பிடி பெல்ட் பக்கிள்ஸ் கரும்பலகையில் எண்ணிக்கையை குறிக்க வைக்கப்பட் டிருக்கும் மணிகளை பொருத்தும் கம்பி கள் என அனைத்தும் தங்கத்தால் செய் யப்பட்டு முலாம் பூப்பட்வை என கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்வாறாக மொத்தம் 890 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அதன் மதிப்பு 26 இலட்சம் ரூபாய் சுங்கப்பிரிவு அதிகாரிகள் முகமது ரியாஸ் என்பவரை கைது செய்தனர்.

(அ-2)

# பிரணாப் அறியாத இந்திய வரலாறு!



"இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும்" என்று, தெளிவாகப் புரியும்படி கோரிக்கைக் கடிதத்தை மன்மோகன்சிங்கிற்கு, கருணாநிதி அனுப்பினார். இதற்கு பிரதமர் அனுப்பிய பதில் கடிதத்தை நூறு தடவை படித்தாலும் புரியவில்லை! உங்களுக்காவது புரிகிறதா எனப்பாருங்கள்...

"ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் உள்ள தீர்மானத்தைப் பொறுத்த மட்டில் முன்னோக்கியதும், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே மோதலையும் அவநம்பிக்கையையும் ஆழப்படுத்துவதற்கு மாறாக, பொறுப்பு நிர்ணயித்தல் மற்றும் சமரசம் தொடர்பான பிரச்சினைகளில் முன்னெடுத்துச் செல்லும் வழியைக் காண்பதை உறுதிசெய்வதும் ஆன முடிவை அடைவதற்கான முயற்சியில் நாம் அனைத்துத் தரப்பினருடனும் தொடர்புகொண்டுள்ளோம்!" என்று முடித்திருக்கிறார் பிரதமர். ஆனால், தமிழக மக்கள் மத்தியிலும் தமிழகக் கட்சிகள் ஒன்றுபட்டு கொடுத்த குரலின் காரணமாக வேறு வழியில்லாமல் இறங்கிவரவேண்டிய நிலைக்கு மன்மோகன் தள்ளப்பட்டார். "இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கவே இந்தியா விரும்புகிறது" என்பது மன்மோகனின் இன்றைய நிலைப்பாடு. சொன்னது மாதிரியே ஆதிரித்து வாக்களித்துள்ளது இந்தியா. ஆனால், இத்தகைய முயற்சிகளை இந்தியாதான் செய்திருக்க வேண்டும். இதுவரை இந்தியா மௌனமாக இருந்ததே பெருந்தவறு. இப்போதும் இந்த முடிவையும் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஏற்கவேண்டும். என்பதுதான் இந்தக் கட்சிகளின் முழு முதல் கோரிக்கை. இதைத் தமிழ் நாடுக் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகனும் வழிமொழிந்து இருப்பது குறிப்பிடத்தக்கது. மக்களவை, மாநிலங்களவை இரண்டிலும் எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து கோரிக்கை வைத்தன. இதற்கு பதில்சொல்ல முன்வந்த நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு இந்தியாவின் வரலாறே தெரியவில்லை. குறிப்பாக, ஜவஹர்லால் நேரு என்று ஒருவர் இருந்தது அவருக்குத் தெரியுமா என்றே தெரியவில்லை. "குறிப்பிட்ட எந்த ஒரு நாட்டுக்கும் எதிராகக் கொண்டுவரப்படும் தீரமானத்தை ஆதரிப்பது இல்லை என்பதுதான் இந்தியாவின் பாரம்பரிய நிலைப்பாடு" என்று பிரணாப் சொல்லி இருக்கிறார்.

**யூனியர் விகடன்**

உலகில் எங்கெல்லாம் அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் நடந்திருக்கிறதோ, அங்கெல்லாம் இந்தியா தனது கண்டனத்தை பதிவுசெய்து வந்திருப்பதுதான் பாரம்பரிய நிலைப்பாடு!


"யூதர்களின் மீது இனப்படுகொலையை நடத்திய ஹிட்லரைக் கண்டிப்பதில் முதல் ஆளாக இருந்தவர் காந்தி". "மனித குலத்திற்காக ஒரு போர் நடத்தலாம் என்றால், ஓர் இனத்தை படுகொலை செய்கிற ஹிட்லரை எதிர்த்துப் போர் செய்வது முற்றிலும் நியாயமானதே என்றார் அவர். உலகம் இரண்டு முகாம்



களாகப் பிரிந்து இருக்கிறது. ஏகாதிபத்தியவாதிகளும் பாசிஸ்டுகளும் ஓர் அணியில் இருக்கிறார்கள். சோஷலிஸ்டுகளும் தேசவாதிகளும் எதிர் அணியில் இருக்கிறார்கள். பாசிசத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்க்கிற உலக முற்போக்கு


முயற்சித்தது. போர்க் கைதிகளின் பரிவர்த்தனைக்கு நடுநிலை நாடுகளின் கமிசன் நியமிக்கப்பட்டது. அதன் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த ஜெனரல் திம்மையா இருந்தார். அமெரிக்க, சோவியத், சீனா ஆகிய மூன்று நாடுகளையும் பகைத்துக் கொண்டு எடுத்தமுடிவு இது. இந்தோ சீனா- பிரெஞ்சு காலனிப்படைகளுக்கும் வியட்நாம் புரட்சிக்காரர்களுக்கும் நடந்த போரை முடிவுக்குக் கொண்டுவர நம்முடைய நாட்டைச் சேர்ந்த கிருஸ்ணமேனனின் ஆறு அம்சத்திட்டம் பயன்பட்டது.

சூயஸ் கால்வாயை எகிப்து, நாட்டுடமை ஆக்கியபோது, பிரிட்டனும் பிரான்சும் அந்த நாட்டின்மீது படையெடுத்தன. இது ஆக்கிரமிப்பு என்று



நேரு கண்டித்தார். பெல்ஜியத்தில் இருந்து சுதந்திரம் பெற்ற காங்கோ உள்நாட்டுப்போரை நிறுத்தியது, இந்திய இராணுவம் சீனாவை, ஜப்பான் ஆக்கிரமித்தபோது, இந்தியா கண்டித்தது. மக்கள் சீனக் குடியரசு அமைக்கப்பட்டபோது இந்தியர்தான் அதை முதலில் அங்கீகரித்தது. ஐ.நா. சபையில் மக்கள் சீனாவுக்கு இடம் அளிக்கவேண்டும் என்று வாதிட்ட நாடும் இந்தியாதான். அதே சீனா, திபெத் நாட்டை ஆக்கிரமித்தபோது இந்தியா கண்டித்தது. தலாய்லாமா ஆயிரக்கணக்கான கைதிகளுடன் இந்தியா வரஅனுமதித்தது. இப்படித் தொடர்ச்சியாக ஏகாதிபத்தியத் தன்மைகளுக்கு எதிராகப் போராடிய பாரம்பரியம் இந்தியாவுக்கு உண்டு.


கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியில் துணிச்சலான முடிவுகளை இந்திரா எடுத்தார். இராணுவ ஆட்சியில், வங்க மொழி பேசும் கிழக்கு பாகிஸ்தான் மக்கள் முழுமையாக பாதிக்கப்பட்டார்கள். பலரும் கொல்லப்பட்டார்கள். சுமார்



இராணுவத்துடன் போராடிக்கொண்டிருந்த போராளி அமைப்புக்களுக்கு நவீன ஆயுதங்களையும், உயர்தரப் பயிற்சிகளையும் கொடுத்தது. இந்திராதான். தமிழ்நாட்டின் பல்வேறு மலைப்பகுதிகளில் விடுதலைப்புலிகள் பயிற்சி எடுத்துக் கொண்டது, பகிரங்கமாக இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன்தான் என்பது இன்றைய இளைய தலைமுறை பலருக்கும்தெரியாது. யாழ்ப்பாணத்துக்குள் தடையை மீறி ஹெலிகாப்டரை அனுப்பி உணவுப் பொட்டலங்களைப் போட்டவர் ராஜீவ் காந்தி. தமிழர்களை உரிமையைக் காக்க ஜெயவர்த்தனாவுக்கு எதிரில் உட்கார்ந்து கையெழுத்துப் போட்டவர். "அணு ஆயுதங்களை 2010 ஆம் ஆண்டுக்குள் தடைசெய்ய வேண்டும்" என்று ஐ.நா. பொதுச் சபையில் பேசியவர். தென்ஆபிரிக்க நிறவெறியை எதிர்த்தவர். நிறவெறி கொண்ட அந்த நாட்டுடன் வர்த்தகம் கூடாது என்ற முடிவெடுத்த நாடும் இந்தியாதான். இப்படி வர்த்தகம் செய்யாத ஆபிரிக்க அரசுகளுக்கு உதவ ஆபிரிக்க நிதி திரட்ட வேண்டும் என்று அறிவித்தவரும் ராஜீவ்தான். தென்ஆபிரிக்காவில் இருந்து விடுதலைபெறப் போராடிய நமீபியாவின் ஸ்வாபோ இயக்கத்தை இந்தியா ஆதரித்தது. நமீபியா விடுதலை அடைந்தபோது, தான் பிரதமராக இல்லை என்றாலும், ராஜீவ் அந்த விழாவில் பங்கேற்றார். கம்போடியாவை வியட்நாம் ஆக்கிரமித்தபோது, இந்தியா எதிர்த்தது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் இதற்கான முயற்சி எடுத்தார். வியட்நாம் இராணுவம் இறுதியில் வெளியேறியது.

இப்படி நேருவும், இந்திராவும், ராஜீவும் தங்களுக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு, அதற்கு எதிரான நாடுகளைக்

## பாரம்பரிய விடயங்கள் அனைத்தையும் ஒரு நொடியில் பூசி மெழுகிய பிரணாப்!



வேறு வழியில்லாமல்தான் எடுத்துள்ளது காங்கிரஸ் அரசு. இப்படி ஒரு முடிவு எடுப்பதைத் தவிர்க்க எத்தனையோ சால்ஜாப்புக்களை காங்கிரஸ் அமைச்சர்கள் செய்தார்கள்.

தமிழக அரசியற் கட்சிகள் வரலாற்றின் முதல் முறையாக இலங்கை விவகாரத்தில் ஒன்று சேர்ந்து இருக்கிறார்கள். ஐ.நா. சபையின் மனித உரிமை கவுன்சில்

சக்திகளுடன் நாம் சேர்ந்திருக்கிறோம்" என்று லக்னோ காங்கிரஸில் பகிரங்கமாக அறிவித்தார் நேரு.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, அமெரிக்கா- சோவியத் என, உலகம் இரண்டு குழுகளாகப் பிரிந்தபோது, இந்தியா அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தது. அப்போதும் பிரதமர் நேரு, பாசிசம், காலனியம், இனவெறி, ஆக்கிரமிப்பு ஆகியவற்றை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்னார். இந்தோனேசியாவில் டச்சு அரசாங்கம் படைகளைக் கொண்டு குவித்தபோது, எதிர்த்தார் நேரு. அதற்குப்பிறகுதான் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலே தலையிட்டது. வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் மோதல் ஏற்பட்டபோது, போரை நிறுத்த இந்தியா கடுமையாக

ஒருகோடி மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்தார்கள். ஜெனரல் அரோரா தலைமையில் இந்திய இராணுவத்தை கிழக்கு பாகிஸ்தானுக்குள் விட்டார் இந்திரா. 93 ஆயிரம் வீரர்கள் இந்தியாவிடம் சரணடைந்தார்கள். வங்காளதேசம் என்ற நாடு உருவானது. அமெரிக்காவையும் சீனாவையும் எதிர்த்தே எடுக்கப்பட்ட நடவடிக்கை இது. இந்தப் பின்புலத்தில்தான், இலங்கையில் நடப்பது உள்நாட்டுப்பிரச்சினை அல்ல. அது இனப்படுகொலை என்று இந்திய நாடாளுமன்றத்திலேயே பிரதமர் இந்திராஅறிவித்தார்.

உள்ளூர்த் துப்பாக்கிகளையும், தங்களுக்குத் தெரிந்த தொழில்நுட்ப அறிவுடன் தயாரிக்கப்பட்ட வெடிகுண்டுகளையும் வைத்து இலங்கை

கண்டிக்கவும் தண்டிக்கவுமான முயற்சிகளில் தொடர்ந்து இயங்கி வந்திருக்கிறார்கள். எந்த ஒரு நாட்டுக்கு எதிரான தீர்மானத்தையும் இந்தியா ஆதரித்தது இல்லை என்று எஸ்.எம். கிருஸ்ணா சொன்னது நம்முடைய பாரம்பரிய குணாம்சத்துக்கே எதிரானது. அநியாயம் எங்கே நடக்கிறதோ அங்கெல்லாம் நான் தோன்றுவேன் என்ற கிருஸ்ணரின் கீதாஉபதேசமே நம்முடைய பாரம்பரியம். "சொந்தச் சகோதர்களே தவறு இழைத்தாலும் தண்டனை கொடு" என்று உபதேசித்தான் கிருஸ்ணன். மகாபாரதக் கதையில் மட்டுமல்ல... மாகவம்சக் கதையில் கூட நாம் பாடம் கற்கத் தயாராக இல்லை என்றால் பழியும் பாவமும் யாருக்கு?

# ஆப்கான் அமெ.வீரர்களை தாக்கினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்

## அமெரிக்கா எச்சரிக்கை

(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினால் மிக கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று பாகிஸ்தானை அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படைகள் மீது தாக்குதல் நடத்துவதை ஒருபோதும் ஏற்க முடியாது என்றும் இது நீடித்தால் மாற்று வழிகள் குறித்து அமெரிக்கா ஆராய வேண்டியிருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மண்ணிலிருந்து மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு பாகிஸ்தான் அரசுக்கு உள்ளது என்று அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

ஆப்கானில முகாமிட்டு அமெரிக்க படையினர் தங்களை தற்காத்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று பென்டகன் அதிகாரி ஜேம்ஸ் மில்லர் தெரிவித்தார். ஆப்கானில் உள்ள அமெரிக்க படையினர் மீது ஹக்கானி குழுவை சேர்ந்த பயங்கரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர்.

இதைத் தடுப்பதற்காக பாகிஸ்தான் இராணுவத்துடன் இணைந்து செயற்பட அமெரிக்கா முன்வந்துள்ளது. கடந்த சில மாதங்களில் பாகிஸ்தான் இராணுவம், ஆப்கான் இராணுவம்மற்றும்நேட்டோபடையுடன் முத்தரப்பு கூட்டத்தை நடத் தியது.

பயங்கரவாதிகள் தங்களுக்கு பாதுகாப்பான இடமாக பாகிஸ்தானை கருதுகின்றனர்.

இவர்கள்தான் அமெரிக்க படையினருக்கு மிகுந்த அச்சுறுத்தலாக உள்ளனர். இதனால் ஆப்கானில் நேட்டோ படை ஒத்துழைப்புடன் அமைதியை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சியில் அவ்வப்போது பின்னடைவு ஏற்படுகிறது. (அ-2)

# 7 இன்ச் அளவில் கணனியை தயாரிக்க கூகுள் முனைப்பு

(நியூயோர்க்)

அமேசான்.கொம் மற்றும் அப்பிள் நிறுவனங்கள்மிகச்சிறிய கணனியைச் சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளன. இத்தயாரிப்புகளுக்கு சவால்விடும் விதமாக ஆசிய நிறுவனங்களுடன் கூட்டுச்சேர்ந்து கூகுள் நிறுவனமும் மிகச்சிறிய கணனியை தயாரிக்கவிருக்கிறது.

ஏழு இன்ச் அளவில் இந்த கணனி வடிவமைக்கப்பட இருக்கிறது. இதனை ஆசியாவைச் சேர்ந்த கணனியை உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து மிகச்சிறிய கணனியை உருவாக்க இருப்பதாக இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

டிஜிட்டிமஸ் மற்றும் வோல்ஸ் ஸ்ரீட் பத்திரிகையில் தெரிவித்துள்ள தகவலின்படி ஆன்ட்ராய்ட் மென்பொருள் நிறுவனம் சாம்சங் மற்றும் ஆசுச்டேக் நிறுவனங்களுடன் இணைந்து ஐபாட் மற்றும் கிண்ட்லே சாதனங்களுக்கு போட்டியாக இச்சிறிய கணனி உருவாக்கப்படவிருக்கிறது.

இக்கணனி 199 அமெரிக்க டொலர் விலையில் வரும் மேமாதத்திற்குள் அறிமுகப்படுத்தப்படும்என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ரஷ்யாவில் இந்து கோவிலை இடிக்க நீதிமன்றம் உத்தரவு

(மொஸ்கோ)

ரஷ்யாவின் செயின் பீட்டர்ஸ் பார்க்கில் இந்து மத அடையாளமாக உள்ள இந்துக்கோவில் ஒன்றை இடிக்க அந்நாட்டுநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது குறித்து கோவிலை நிர்வகித்து வரும் சுரேன் காராபெட்யான் என்பவர் கூறுகையில், கடந்த 1992 ஆம் ஆண்டு பெடரல் ஆராய்ச்சி மையத்தின் உதவியுடன் இப்பகுதியில் கோவிலை கட்டுவதற்கு நில உரிமையாளரிடம் 49 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளே முடிவடைந்த நிலையில் கோவிலை இடிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தகோவிலில்சமஸ்கிருதம், யோகா உட்பட இந்தியாவின் கலா சாரத்தை பிரதிபலிக்கும் கலாசார மையமாகவும் செயற்பட்டு வருகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்துக்களின் புனித நூலான பகவத்கீதை தடை விதிக்க கோரிக்கை விடுக்கப்பட்டது.

இருப்பினும் அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட் நிலையில் தற்போது கோவிலை இடிக்க முற்பட்டுள்ளனர். இப்பிரச்சினையில் தீர்வு காண வலியுறுத்தி இந்திய ஜனாதிபதி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி ஆகியோருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (அ-2)

# செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தவுள்ள வங்கதேசம்

அமெரிக்க நிறுவனத்தின் துணையுடன் வங்கதேசம் தனது முதல் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்த உள்ளது. வங்கதேச டெலிகொம் யூனிகேசன் ஒழுங்குமுறை ஆணையம் முதற்கட்டமாக 10 மில்லியன் டொலர் மதிப்பில் சர்வதேச ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள உள்ளது.

இது குறித்து ஸ்பேஸ் பாட்னர் ஷிப் இன்டர்நேஷனல் நிறுவனத் தின் இயக்குநர் புருஸ் டி.கர்லெஸ்கி கூறுகையில், அமெரிக்காவின் மேரிலேண்ட் நிறுவனத்துடன் இணைந்து செயற்கைக்கோள் தயாரிக்கப்படவுள்ளது.

இதன் மொத்த மதிப்பு சுமார் 150 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக் காள் வங்க தேசத்தின் தொலைத் தொடர்புத் துறையை மேம்படுத்தும் வகையிலும் பேரிடர் முன்னெச்சரிக்கையை அறிவதற்கும் பயன்படுத்தப்படும் என தெரிவித்துள்ளது.

மேற்கண்ட வசதிகளுக்காக வங்க தேசம் வெளிநாட்டு செயற்கைக் கோளுக்காக ஆண்டுதோறும் சுமார் 11 மில்லியன் டொலர் வரை வாடகையாக செலுத்தி வருகிறது. (அ-2)

# இங்கிலாந்தின் வடக்கில் தேர்தல்; தொழிலாளர் கட்சி தோல்வி

இங்கிலாந்து நாட்டின் வடக்கு பகுதியில் இருக்கும் பிரட்போர்டு (மேற்கு) பாராளுமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இதன் வாக்கு எண்ணிக்கை முடிந்து நேற்று முன்தினம் முடிவு வெளியானது.

இதில் ஆளுங்கட்சியான கன்சர் வேட்டிவ், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி ஆகியவை சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர் படுதோல்வி அடைந்தனர். இந்த இடைத் தேர்தலில் சிறிய கட்சியான இடதுசாரி மதி கட்சி வேட்பாளர் ஜார்ஜ் கால்லோவே 18ஆயிரத்து 341 வாக்குகள் பெற்று வென்றார்.

இவர் போருக்கு எதிராக பிரசாரம் செய்து வருபவர். 2 முறை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த அவர் தற்போது முதல் தடவையாக வெற்றி பெற்றுள்ளார்.

ஹசைன் தொழிலாளர் கட்சி 8ஆயிரத்து 201 வாக்குகளும் ஜாக்கி வெயிட்லி (கன்சர் வேட்டிவ் கட்சி)2ஆயிரத்து 746 வாக்குகளும் பெற்று தோல்வியை தழுவினர். இந்த தொகுதி தொழிலாளர் கட்சியின் செல்வாக்கு மிகுந்தது.

கடந்த 1974 ஆம் ஆண்டு தேர்தல் முதல் தொழிலாளர் கட்சியே வெற்றி பெற்று வந்திருக்கிறது. தற்போது முதல் தடவையாக தோல்வி அடைந்திருப்பது அந்தக் கட்சி தலைவர்களை கவலை அடைய வைத்துள்ளது. (அ-2)

# உலக தரிசனம்

# பி.எம்.டபிள்யூ நிறுவனம் கார்களை மீளப் பெறுகிறது

(சிட்னி)

உலகின் முன்னணி கார் தயாரிக்கும் நிறுவனமான பி.எம்.டபிள்யூ உலகம் முழுவதும் இருந்து இலட்சக்கணக்கான கார்களைத் திரும்பப் பெறுகிறது.

ஜேர்மனியை தலைமையிடமாகக் கொண்டு விலையுயர்ந்த கார்களை தயாரித்துவரும் இந்த நிறுவனம் தனது தயாரிப்பான 2003-2010 வரையிலான 5 சீரீஸ் மற்றும் 6 சீரீஸ் ரக கார்களை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளது. இந்த மொடல் கார்களில் உள்ள பற்றரி கேபிள் தவறான முறையில் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இந்தத் தவறால் சில சமயம் கார் ஸ்டார்ட் செய்ய இயலாது என்றும் மேலும் அது எளிதில் தீப்பிடிக்க வாய்ப்புள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை எந்தக்குறைபாடும் வாடிக்கையாளர்களிடமிருந்து தெரிவிக்கப்படவில்லை எனவும் இருந்தபோதிலும் இந்த மொடல் கார்கள் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இது குறித்த தகவல் அனுப்பப்படும் என்றும் அவர்களது கார்களில் உள்ள இந்தக் குறைபாடு சரி செய்யப்பட்டு மீண்டும் திரும்பக் கொடுக்கப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ-2)

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி ஊனமுற்ற இராணுவவீரர்கள் உலக சாதனை

எவரெஸ்ட் சிகரத்தில் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் ஏறுகின்றனர். உலகின் உயரமான எவரெஸ்ட் சிகரம் இமயமலையில் உள்ளது. கடந்த 1953 ஆம் ஆண்டில் எட்மண்ட் ஹிலாரி, டெனசிங் நாகே, ஷெர்பா ஆகியோர் முதன்முதலாக ஏறி உலக சாதனை படைத்தனர்.

அவர்களை தொடர்ந்து தற்போது பனி படர்ந்த எவரெஸ்ட் சிகரத்தில் பலர் ஏறி முத்திரை பதிக்கின்றனர். இந்த நிலையில் இங்கிலாந்து வீரர்கள் 3 பேர் எவரெஸ்ட சிகரத்தில் ஏற இமயமலையில் முகாமிட்டுள்ளனர். அவர்களில் 5 பேர் போரின் போது உடல் ஊனமுற்ற இராணுவ வீரர்கள்.

இவர்களில் ஒருவர் ஒரு கை இழந்தவர். சுமார் 8 ஆயிரத்து 850 மீற்றர் அதாவது 29 ஆயிரத்து 35 அடி உயரம் உள்ள மலையில் ஏற முடிவுசெய்துள்ளனர். அவர்கள் தங்கள் பயணத்தை இன்று தொடங்கினர். இவர்களின் இந்த முயற்சி வெற்றி பெற ஏராளமானவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். (அ-2)



மியன்மார் தலைநகர் யாங்கூனில் அந்நாட்டு எதிர்க்கட்சி தலைவர் ஆங்சாங் சூகியை அமெரிக்க செயலர் ஹிலாரி கிளின்டன் சந்தித்ததை படத்தில் காணலாம்.

# சவுதி இளவரசர் மீது கற்பழிப்பு வழக்கு

(சவுதி அரேபியா)

சவுதி அரேபியா இளவரசர் அல் வால்ட் பின்தலால் உலக கோடீஸ்வரர்களில் இவரும் ஒருவர். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு அவர் ஸ்பெயினில் உள்ள யாசிட் நகரில் உள்ள இபிஷா என்ற இடத்தில் சிறிது காலம் தங்கியிருந்தார். அப்போது 20 வயது மொடல் அழகியை கற்பழித்ததாக இவர் மீது புகார் கூறப்பட்டது. இதை அவர் மறுத்தார்.

இது குறித்து ஸ்பெயின் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி இளவரசர் தலால் மீது கற்பழிப்பு வழக்குத் தொடரலாம் எனத் தீர்ப்புக்கூறியது. அதைத்தொடர்ந்து அவர் மீது கற்பழிப்பு வழக்குத் தொடரப்பட்டுள் ளது.

அவரிடம் விரைவில் விசா ரணை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# கவிதைக் கலசம்
## சங்குநாதம்

### ஓட்டம்

சுவட்டு ஒழுங்கில் ஓடும் ஓட்டப்
போட்டியாளன் கண்டு கைகள் தட்டும்
கனிசமான பார்வையாளர்போல்..
குண்டு வருகுது செல்லு வருகுது என்று
பதுங்குகுழிக்குள் ஓட தாறு மாறு ஓடி
பாதி உயிர் பாதியிலே பிரிந்தபோது
ஐ.நா. தொட்டு அயல் நாடுவரை
கைகட்டி நின்றார்கள்
காரணம் என்னவென்று தெரியவில்லை
கதறும்" உயிர்களை
கவனத்தில் கொள்ளவில்லை
கண்மூடிப் போன தமிழன்
ஆடி ஓடி ஓய்ந்து விழும் பம்பரமாய்
ஆறுதலுமின்றி வீழ்ந்துவிட்டான்
அடைக்கலமில்லா மீதித்தமிழன்
அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கின்றான்
ஆண்டவா! இரத்தஆற்றிலும் தமிழனின்
ஓட்டமா? சுவட்டிலே வீரனின் ஓட்டம்
வன்னியிலே இரத்தத்தின் ஓட்டம்
வாழ்க்கையே இப்படித்தான்
தமிழனுக்கு வாட்டமாய்
கால்கள் மட்டும் ஓட்டமாய்

ஜெயம்ஜெகன்
புதுக்குடியிருப்பு

### அவரவர் பார்வையில்

### விரக்தி...

வாள் விழியாளென
வரையறுத்தேன்... என்
ஆழ்மனதை
அறுக்கப்போவதை
சற்றேனும் அறியாமல்...
உன்பெயரை உச்சரிக்கும்
என் இதயத்தின்
வடுக்களைப் பார்!
வீணாய் போர் தொடுத்து
வேலைமினக்கட்ட
வீரனைப் போல் ....

நெடுந்தீவு
ஜெலான்

### கல்வி

கற்றிடும் வயதில்
கல்வியை கற்று
கல்வி என்ற ஏணியில்
பெருமையுடன் ஏறு

பா.மதனபாரதி
அல்வாய்

### வரவேற்கிறேன்

அன்புக்கு இலக்கணம் பண்புக்கு இலக்கியம்
கவிதைக்கு கரு கல்வியிலே எழுந்து வரும்
சூரியபானு ஆறுதல் தருவதிலே
சந்திரிகை மதி கால் பதித்து முன்னேறி
வருகிறாய் என்மனதில்
பசுங்கம்பளம் என் மனதில்
செங் கம்பளம் என் நரம்புகளில் மத்தளம்
தாளம் பூவை ஆய்ந்து பார்த்தோரும் உண்டு
மாது உளத்தின் சிறப்பை கண்டேன்
சில சொல் விண்டு

ஆ.முல்லைதிவ்யன்
பொலிகையூர்

### உன் நட்பு

என் உயிரின் உருவம் உன் நட்பு
உன் உணர்வின் கீதம் உன் நட்பு
என் மனதின் விருப்பம் உன் நட்பு
என் வாழ்வின் வரம் உன் நட்பு
என் இரத்தத்தின் இரத்தம் உன் நட்பு
என்றும் இனியது உன் நட்பு

செ.ரவிசாந்
குப்பிளான்

### இமயம் தொட...

உன் உணர்வுகள்
உண்மையானதும்
நேர்மையானதுமாயின்
அவை நிச்சயம் வெற்றி பெறும்
வெற்றி என்பது
இன்னொருவன் தோற்றதால்
உனக்கு கிடைத்தது
தோற்றவன் முன் சிரிப்பதைவிட
அவன் உணர்வை மதி
அது தான் வெற்றி


மாவை நா.கஜேந்திரன்

### நினைவுகளை சிறைபிடித்து

என் காதலைப் பலமுறை
உன்னிடம் வெளிப்படுத்தினேன்
ஏனோ ஏற்க மறுத்துவிட்டாய்
உன்னை எனக்குக் கொடு யாசித்தேன்
உன் உறவுகளிடம்
மௌனித்தனர்
முடிவாக யாருடைய அனுமதிக்கும்
காத்திராமல் உன்
நினைவுகளைச் சிறைபிடித்தேன்
இதயத்தில்
என் ஆயுள் முழுவதற்கும்...

வேந்தன்
மானிப்பாய்

## மௌனத்தின் தேடல் - 115



### சாதனை படைத்திடு

ஆதரவு அற்றவனுக்கு
ஊனம் பெரும் சுமைதான்
அன்புடன் அரவணைக்கும்
பண்பு இருப்பின்
ஊனம் ஒரு தடையல்ல
சாதிக்க மனம் தூண்டிடும்
தூண்டு கோலாகும்
தூண்டும் கோல் துணை கொண்டு
நீ சாதனை படைத்திடு

கமலா இளங்கோவன்
யாழ்ப்பாணம்

### ஊன்றுகோல்

வலுவிழந்த வாழ்க்கை துணைக்கு
வலுச்சேர்க்கும் ஊன்றுகோலாய்
உயர்ந்து நிற்கும் துணையாளின்
துணைகொண்டு உயர்ந்திடும் இவன் வாழ்வு

அ.சிவாகினி
சுன்னாகம்

### துணை

வாழ்வில் மட்டுமல்ல
தன்வாழ்விலும் தோள் கொடுக்கும்
தன் உறவோடு ஊனம் தனை மறந்து
புதுப் பொலிவோடும்
புன்னகையோடும்
பவனி வருகின்றான் தமிழன் இவன்

க.சிவவடிவேல்
இணுவில் மேற்கு

### தேடுகின்றோம்

தெருத் தெருவாய் தேடுகின்றோம்
தொலைந்து போன சொந்தங்களை
இன்பமாய் நாம் வாழ்ந்த காலம்
என்று தான் இனி வருமோ
ஒன்றல்ல இரண்டல்ல உம்மை
எண்ணி நினைவதற்கு

திருமதி.சந்திரன் தேவி
மானிப்பாய்

### பாசமலர்

தாய்மரம் சாய்ந்தாலும் – அந்த
மரத்தின் விதையில்...
முளைவிட்டு வளர்ந்த..
பாசமலர்கள்- இவர்கள்
அண்ணனின் பரிதாபம்
தங்கையின்...
அன்பான பாசத்தில்– இவன்
எழுந்து நடப்பானா?

வி.அருள்ராஜா
கொம்மாந்தறை

### நடக்கும்

உருட்டினார் கயவன்
உருண்டது மனிதம்
உருட்டுறார் வண்டில்
உருளுறது வாழ்க்கை
வேதம் சொல்கிறது
பலனை எதிர்பாராமல்
பணியைச் செய்
எதை நினைக்கிறாயோ
அதை அடைவாய்

ராசாவி
அல்வாய்

### தளராத இளநெஞ்சே

ஈரமில்லா வன்சமரில்-உன்
கால்கள் தனை நீ இழந்து
கால்கடுக்க உன் உறவு
உனை நகர்த்திச் செல்கின்றாள்
காலமெலாம் அவள் உன்னைக்
காத்திடுவாள் என்றவள்
புன்முறுவல் சொல்கிறதே

இ.தர்மா
பருத்தித்துறை

### நம்பிக்கை

நண்பனே நீ இழந்தது
உன் கால்களைத்தான்
உன் உறவுகள் இழந்தது
எம் சுதந்திரத்தை
நீயும் நம்பிக்கை கொள்
மீண்டெழுவோம்

அ.வசந்தன்
அல்வாய்

### கலங்காதே உறவே

கால்களை நீ இழந்தாலும்
காயப்பட்ட உன் உள்ளத்திற்கு
ஆதரவாய் உன்உறவு
உயிருள்ளவரை உனக்காக
வாழ்ந்திடுவாள் -ஆதலினால்
கலங்காதே நம் உறவே!

வி.வாகீஸ்
உடுப்பிட்டி

### சுகமான சுமை

காலிழந்த சோகம் முகத்தில்
கடுகளவும் இல்லையே
துணையாக இருகால்கள்
உண்டு என்று மகிழ்வுதான்
வஞ்சித்த கொடியோரைத்
தெய்வம் தண்டிக்கும்

செ.உத்திரன்

### புதுமைப் பெண்

தன்னைச் சுமப்பவனை
தானே சுமக்கின்றாள்
அச்சம் என்பதை அறியாத
புதுமைப் பெண் இவள்

சி.நிகேதன்
இணுவில் மேற்கு

### நிஜமாக

வீதியெல்லாம் வெடிவெடித்து
யுத்தம் வந்ததே
நாளெல்லாம் துடி துடித்து
இதயம் நின்றதே
ஊன் இன்றி உறக்கம் இன்றி
நாளும் போனதே

க.செல்வமலர்
சிறுவர்இல்லம் திருநெல்வேலி

### தாய்க்கு பின் தாரம்

கால் இழந்தாலும் நான் இருக்கேனென
சொல்லுக்கு உயிர்கொடுக்கும் மாதரசே
தாய்க்குப் பின் தாரமென்ற...
தரணியின் வேதத்திற்கு
புன்னகையால் புதுவடிவம்
கொடுப்பவளே நீ வாழி

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

### துணையாக

புழுதிகள் படர்ந்த
நீண்ட வீதி வழியே
பயணிக்கும் தோழனே!
மாண்ட உம் மண்ணின் சோக
வடுக்களைச் சுமந்த உன்
ஆத்ம மூச்சுக்குத் துணையாக
நானிருப்பேன் கலங்காதே


ரா.வாசனா
நல்லூர்

### இழப்பு

தாயை இழந்தேன்- அன்பு;
தங்கையையும் இழந்தேன்
தம்பியை இழந்தேன் அருமை
அண்ணனையும் இழந்தேன்- இப்போ
உணர்வுகளும் இழந்துவிட்டேன்

ஆதிரை
ஆவரங்கால்

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் -116



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 06.04.2012 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -




பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டு வரும் படங்கள் பொதுவாகவே படுத்து விடுவது வழக்கம். காரணம், அந்த எதிர்பார்ப்பின் சுமையைத் தாங்க முடியாது. பெரிய இயக்குநர்கள், நாயகர்கள் படங்களுக்கே அந்தக்கதி என்றாலும், முதல் பட இயக்குநர் ஐஸ்வர்யாவின் 3 என்னவாகப் போகிறதோ... என்பதுதான் 3 ரிலீசுக்கு முன்பு வரை இருந்த பேச்சு.

ஆனால் ஐஸ்வர்யா தப்பித்து விட்டார் என்று தான் சொல்ல வேண்டும். துள்ளுவதோ இளமை, மயக்கம் என்ன படங்களில் சாயல் லேசாகத் தெரிந்திருந்தாலும் (செல்வராகவன் உதவியாளர் அல்லவா... இருக்கத்தானே செய்யும்) இடைவேளைக்குப்பிறகு கொஞ்சம் சோதித்தாலும் படத்தைப் பார்க்க முடிகிறது!

இன்னொன்று, அறிமுக இயக்குநர்களின் படங்களுக்கே உரிய அமெச்சூர்த்தனம், பெண் இயக்குநர்கள் வழக்கமாக செய்யும் தவறுகள் எதுவும் இல்லாமல், ஒரு பக்குவமான காட்சிப்படுத்தலை 3இல் பார்க்க முடிகிறது. அந்த வகையில் இயக்குநர் ஐஸ்வர்யாவுக்கு ஒரு பூச்செண்டு கொடுத்து வரவேற்கலாம்!

ஒரு இளைஞனின் மூன்று கட்ட வாழ்க்கை நிலைகளின் சம்பவங்களின் தொகுப்பு இந்தப்படம். ப்ளஸ்டூ படிக்கும் தனுஷ்க்கும் ஸ்ருதிக்கும் காதல் (இரண்டு பேருமே மாணவ வேடம் அத்தனை கச்சிதம்) ரொம்ப அழகான காதல். கல்லூரி படிப்பு முடிந்த பிறகு திருமணம் நடக்கிறது. திருமணத் துக்குப் பிறகு தான் தனுஷ்க்கு சோதனை ஆரம்பமாகிறது. ஒரு ஆள் பல பரிமாணமெடுக்கும் மனநோய். இதனால் பல பிரச்சினைகள். அதிலிருந்து அவர் மீண்டாரா என்பது மீதிக் கதை. எல்லோருக்கும் ஏகத்துக்கும் ஏற்றிவிட்ட கொலவெறி பாடலைத் தாண்டி இந்தப் படம் மனதில் நிற்பதற்குக் காரணம் இளமை துள்ளும் அந்த முதல் பாதி.

ட்யூஷன் சென்ரரில் ஸ்ருதியைக்கவர தனுஷ் செய்யும் முயற்சிகள் செம். தனுஷ்-ஸ்ருதி திரும்ணம் நடக்கும் இடம், அந்தத் திருமணத்தை எதிர்க்கும் பெற்றோரிடம் தனுஷ் பேசும் வசனங்கள், அதற்கு ஸ்ருதியின் அம்மா ரோகிணியின் அடுத்த ரியாக்ஷன் போன்றவை சற்றும் எதிர்பாராத திருப்பக் காட்சிகள். அதென்னமோ தொடர்ந்து தனுஷ்க்கும் சைக்கோ கரக்டர்களாக அமைகின்றன. இது எதேச்சையானதா திட்டமிட்டதா தெரியவில்லை. ஆனால் இந்தப்படத்தில் நடிப்பில் தனுஷ் மிரட்டியிருக்கிறார். இதுவரை பார்க்காத வேறுமுகம் அது. அதிலும் மனைவிக்குத் தெரியாமல் தன் நோயை மறைக்க அவர் படும் பாடு....




நடிப்பா இயக்கமா... யார் பெஸ்ட் பார்ப்போம் என கணவனுக்கும் மனைவிக்கும் பெரிய போட்டியே நடந்திருக்கும் போல!

ஏழாம் அறிவில் எல்கேஜி லெவலுக்கு இருந்த ஸ்ருதி ஹாஸன் நடிப்பு இந்தப் படத்தில் டிகிரி வாங்கிவிட்டது. இந்தப் பொண்ணு இந்த அளவு நடிக்குமா என கேட்க வைக்கிறது. இயக்குபவர் மனைவி என்பதையெல்லாம் கண்டுகொள்ளாமல் அநியாயத்துக்கு ஸ்ருதியுடன் நெருக்கம் காட்டியுள்ளார் தனுஷ்.

சந்தானத்துக்கு போட்டியாக வந்துவிடுவார் போலிருக்கிறது சிவகார்த்திகேயன். சுந்தர் ராமு, பிரபு, பானுப்ரியா, ரோகிணி என எல்லோருமே படத்துக்கு பலம் சேர்த்துள்ளனர்.

இடைவேளை வரை அழகாகப் பயணிக்கும் படம், தனுஷ் மனநோயா ளியாக மாறி யதும் பார்வையாளர்களைப் பொறுமையிழ க்க வைக்கிறது. தனுஷின் இந்த மனநோய் அவருக்கு மட்டும் தெரிந்து ஏனைய யாருக்குமே தெரியாமல் போவது எப்படி என்று புரியவில்லை (நண்பன் ஒருவனைத் தவிர)


அடுத்தடுத்த படங்களில் மனநோயாளியாகவே தனுஷை பார்க்க நமக்கே ஒரு மாதிரியாகத்தான் இருக்கிறது. அனிருத்தின் இசையில் எல்லாப் பாடல்களுமே கேட்கும்படி உள்ளது. உலகமகா கொலைவெறிப் பாட்டை இப்படி சுமாராகத்தான் எடுத்திருப்பார்கள் என நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது. ரஜினியின் பொண்ணு என்ற சிறப்புப் பட்டம் இனி ஐஸ்வர்யாவுக்கு தேவையில்லை. கம்பீரமாக நான் இயக்குநர் ஐஸ்வர்யா என்று சொல்லிக் கொள்ளலாம். வெற்றியின் உச்சத்தைத் தொடுமா 3? பார்க்கலாம்.

# சினிமா உலகம்...

சங்குநாதம்



## காதைக் கிழிக்குமா உருமி?



தயாரிப்பு, விநியோகம் எதைச் செய்தாலும் பிரமாண்டாமாகச் செய்யும் கலைப்புலி எஸ். தாணு, கமராமான் சந்தோஷ் சிவன் இயக்கியுள்ள உருமி படத்தை முப்பது கோடி ரூபாய் கொடுத்து உலக உரிமையை வாங்கி இருக்கிறார். இன்னும் கூடுதல் மெருகேற்ற மேலும் கோடிகளை செலவு செய்துள்ளார்.

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சேர மன்னனின் வீரதீரப் பெருமைகளையும் அவ னது கடல் ஆதிக்கத்தையும் கூறும் விதமாக உருமி முழங்குகிறது.

15 ஆம் நூற்றாண்டையும் 21 ஆம் நூற்றாண்டையும் கண்முன்னே நிறுத்தும் நிஜ வரலாறு உருமி.



மதராசப் பட்டினம் படத்தில் தன் நடிப்பால் அந்த காலகட்டத்தை நமது மனதில் பதியவைத்த ஆர்யா இந்தப் படத்தில் 15 ஆம் நூற்றாண்டு வாழ்க்கையைப் பதிவு செய்திருக்கிறார். கூடவே பிரபுதேவா, ப்ருதிவிராஜ், ஜெனிலியா, வித்யா பாலன், தபு, நித்யா மேனன் உட்பட பலர் இந்தப் படத்தில் நடித்ததைப் பெருமையாகக் கருதுகிறார்கள்.

விஜய் நடிக்கும் துப்பாக்கி படத்துக்கு முன் இந்தப் படத்தை ரிலீஸ் செய்ய இருக்கிறேன். இது உலகம் முழுக்க வெற்றியையும் பாராட்டுக்களையும் நிச்சயம் பெற்றுத் தரும் என்கிறார் கலைப்புலி எஸ் தாணு. தொழிலில் எல்லாம் ஒண்ணாதான் இருக்கீங்க. முல்லைப் பெரியாறு தண்ணி விடயத்தில் தமிழகத்தில் தமிழகத்தைத் தவிக்கவிடுறீங்களே! உருமி சத்தமாவது உங்க செலக்டிவ் அமீனிஷியா நோயை மாத்தட்டும்!

## தேசிய விருது நடிகர்கள் ஒரே வீட்டில்!




தேனி என் சின்னமாயன் பிலிம்ஸ் தயாரித்து வரும் படம் கிழக்கு பார்த்த வீடு. 30 வருடங்களுக்கு முன்பு தேனி மாவட்டத்தில் நடந்த இரத்தம் சிந்திய உணர்ச்சிகரமான காதல் கதையை யதார்த்தமாக உருவாக்கி வருகிறார் இயக்குநர் பாலகுருசாமி.

இதில் அம்மாசியாக வத்தலகுண்டைச் சேர்ந்த புதுமுக நாயகன் பிரபா. ராசாத்தியாக பெரியகுளத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண் தமலி. ஊர்த்தலைவர் மகனாக கூடலூரைச் சேர்ந்த திலக். ஊருக்குள் வந்த டீச்சராக மீரா கிருஷ்ணன். இவரது கணவராக தேசிய விருது 2010 புகழ் தம்பி ராமையா. அம்மாசியின் நண்பனாக தேசிய விருது 2011 புகழ் அப்புக்குட்டி ஆகியோரை கதாபாத்திரங்களாகவே சிறப்பாக நடிக்க வைத்திருக்கிறார்கள். ஊர்த் திருவிழாவில் ரிஷா ஆடும் குத்துப்பாடல் பிரமாண்டமாகப் படமாக்கப்பட்டுள்ளது.

எடுத்தவரை படத்தைப் பார்த்த கவிப்பேரரசு வைரமுத்து இந்தப் படத்தில் பணியாற்றிய அனைவரையும் பாராட்டினார். ஒரு நல்ல படத்தில் பணியாற்றிய திருப்தி உங்கள் அனைவருக்கும் கிடைக்கும்! எனக் கூறி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

## ஆயிரம் முத்தங்களுடன் தேன்மொழி!



சேரனின் உதவியாளர் சண்முகராஜ் எழுதி இயக்கியுள்ள **ஆயிரம் முத்தங்களுடன் தேன்மொழி** படத்தில் 71 புதுமுகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 372 நாட்கள் நடிப்பு பயிற்சி கொடுக்கப்பட்டது.

காதலில் ஜெயிக்க என்ன பண்ணனும்னு தெரியுமா?

அஞ்சே அஞ்சு டி-யை பாலோ பண்ணா போதும். எல்லார் காதலும் சக்ஸஸ்தான் என்ற வசனம் இந்தப் படத்தின் ட்ரெய்லரில் இடம்பெற்றிருந்தது.

காதல் ஜோடிகளை உற்சாகப்படுத்தும் விதமாக தமிழ்நாடு முழுவதுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50 காதல் ஜோடிகளுக்கு பிரசாத் லேப் தியேட்டரில் ஆயிரம் முத்தங்களுடன் தேன்மொழி திரைப்படம் சிறப்புக் காட்சியாகத் திரையிடப்பட்டது. படத்தைப் பார்த்த காதல் ஜோடிகள் அஞ்சே அஞ்சு டி-யை பாலோ பண்ணா எல்லார் காதலும் சக்ஸஸ் தான் எனக்கூறி இயக்குநரைப் பாராட்டினார்.

# உடன் அமுலுக்கு வரும் வகையில் வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன

## நிதியமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

கார், வான், முச்சக்கர வாகனங்கள் மோட்டார் சைக்கிள் உட்பட மோட்டார் வாகனங்களின் வரியும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில்அதிகரிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்கான இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்குடன் இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது. இது எரிபொருள் பாவனையை குறைக்கவும் உதவும் என் அவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

பெற்றோலில் இயங்கும் 2000 சிசி இற்குட்பட்ட வாகனங்களுக்கான உற்பத்தி வரி 85 சதவீதத்தாலும் 2000 சிசி இற்கு மேற்பட்ட வாகனங்களுக்கான வரி 114 சதவீதத்தாலும் 3000 சிசி இயந்திர கொள்ளளவுக்கு மேற்பட்ட வாகனங்களின் வரி 129 சதவீதத்தாலும்அதிகரிக்கப்பட்டுள்ளது.

டீசல் வாகனங்களை பொறுத்தவரை 1600 சிசி இற்கு உட்பட்டவற்றுக்கு உற்பத்தி 114 சதவீதத்தாலும் 1600-2000 சிசி வாகனங்களுக்கு 129 சதவீதத்தாலும் 2000-2500 சிசி வாகனங்களுக்கு 143 சதவீதத்தாலும் 2500 சிசி இற்கு மேற்பட்டவற்றுக்கு 173 சதவீதத்தாலும் உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

பல் எரிபொருள் மூலங்களில் இயங்கும் ஹைபிறைட் வாகனங்களில் 1000 சிசி இற்கு உட்பட்ட இயந்திர கொள்ளளவுடைய வாகனங்களுக்கான வரி 40 சதவீதத்தாலும் 3000 சிசி இற்கு மேற்பட்ட வாகனங்களுக்கான உற்பத்தி வரி 57 சதவீதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள்களுக்கான வரி உற்பத்தி 51 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும டிரக்டர்கள், பஸ்கள், லொறிகளுக்கான வரிகளில் மாற்றம் ஏற்படவில்லை. அத்தோடு சிகரெட் விலைகள் பியர் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் வரிகள் என்பன உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு நேற்றைய தினம் அறிவித்துள்ளது.

அனைத்து சிகரெட்டுகளின் விலைகளும் ஒரு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் பியர் லீற்றா ஒன்றுக்கான வரி 5 ரூபாவினாலும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பியர் வரி 5 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சாராயத்தின் வரி 60 ரூபாவினால அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிகரெட் மற்றும் மதுபான வரி மூலம் மேலும் சுமார் 300 கோடி ரூபா வருமானம் கிடைக்கும் என நிதியமைச்சு மதிப்பிட்டுள்ளது. (அ-2)

# குஞ்சுப் பரந்தன் கண்ணகி அம்மன் வேள்வி திருவிழா

குஞ்சுப் பரந்தன், பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயத் தின் இவ் வாண்டுக்கான பங்குனித் திங்கள் வேள்வி விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது என ஆலய அறங்காவலர் அவை அறிவித் துள்ளது.

இவ்விழா பகல்- இரவாகப் பலநிகழ்வுகளுடன் இடம்பெறும் எனவும் வெளியூர்களில் இருந்து ஆலயத்திற்கு வரும் அடியார்களின் நலன் கருதி போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறங் காவலர் அவையினர் மேலும் அறிவித்துள்ளனர். (அ)

# நெல்சிப் வேலைத்திட்டத்திற்கு 55 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



(சிவநகர்)

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சிச் சேவைகள் மேம்பாட்டுத் திட்ட (நெல்சிப்) வேலைகளுக்கான இவ்வருட நிதியாக ஐம்பத்தைந்து மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி, கண்டாவளை பிரதேச சபைகளிலுள்ள வீதிகளது புனரமைப்புக்கு இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது. இதன்படி உருத்திரபுரம் கூழாவடியிலிருந்து சிவநகர் பாடசாலை வரையிலான வீதி புனரமைப்பிற்கான நில அளவை வேலைகள் மேற்கொள்ளப்படுவதைப் படத்தில் காணலாம். (அ-254)

# புதிய ஊடக அபிவிருத்தி மத்திய நிலையம் நேற்று திறந்து வைப்பு

(கொழும்பு)

தகவல் ஊடகத்துறைக்கு நவீன வசதிகள் வழங்கும் முகமாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஊடக அபிவிருத்தி மத்திய நிலையம் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் தகவல் ஊடகத்துறை பதில் அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோரின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

374 மில்லியன் ரூபா செலவில் ஐந்து மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தில் நவீன வசதிகள் கொண்ட கேட்போர் கூடம் ஊடக ஆய்வுக்கான நூலகம், இரு கணனி பிரிவுகள், அரசாங்க திரைப்பட பிரிவின் நூதனசாலை என்பன ஊடகவியலாளர் நன்மை கருதி அமைக்கப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர்களின் திறமைகள் மேலும் விருத்தி செய்யும் நோக்கிலும் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதற்காகவும் 370 ஆசனங்களைக் கொண்ட கேட்போர் கூடமும் நவீன இயந்திர வசதிகளும் இந்த ஊடக அபிவிருத்தி மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளன. (அ-2)

# வடக்குக்கிழக்கில் இறால் உற்பத்தி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இறால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் 4 ஆயிரம் ஹெக்டேயர் காணியில் இறால் வளர்ப்பை முன்னெடுக்கவுள்ளதாக மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சின் செயலாளர் தம்மிக டி சில்வா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 900 ஹெக்டேயர் காணியில் இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்படும். இதற்கென பாரிய முதலீடுகளை செய்ய முன்வரும் முதலீட்டாளர்களுக்கு இறால் பண்ணைகளை ஆரம்பிப்பதற்காக குத்தகை அடிப்படையில் காணிகளை மீன்பிடித்துறை அமைச்சு வழங்கும்.

புத்தளம் மாவட்டத்தில் பாரியளவில் இறால் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அங்கு பரவிய வெள்ளைப் புள்ளி நோய் காரணமாக இறால் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியேற்பட்டுள்ளது.

இங்கு வருடாந்தம் 4 ஆயிரத்து 360 மெற்றிக்தொன் இறால் உற்பத்தி செய்யப்பட்டது. அது தற்போது ஆயிரத்து 570 மெற்றிக் தொன்னாக குறைவடைந்துள்ளது.

எனவே, புத்தளத்தில் பாதிக்கப்பட்ட இறால் பண்ணையாளர்கள் கிழக்கு மாகாணத்தில் முதலீடு செய்ய விரும்பினால் அதற்கான வசதிகள் வழங்கப்படுமெனவும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, வாகரை, பொத்துவில் ஆகிய பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ-2)


**மனோதத்துவ வைத்தியம்**

*(General Psychotheraphy)*

**பிரபல மனோதத்துவ நிபுணர்**

**Dr.P. ஆறுமுகம்**

**T.P.: 0719315664, 0777569205, 0214922403**

**மீண்டும் யாழில்**

04.04.2012 முதல் 09.04.2012 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற் கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை...ளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியி... ...ல் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் ...ம் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகள... ...மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை ... பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

**நாதன் இன்** (பழைய கமால் லொஜ்)

392/A மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.

சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்

(C-6222)

நெஞ்சில் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர்வாழ்தல், அறியாமை.
- பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பேச்சுவார்த்தை என்பது இனி அவசியமற்றது

இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை என்ற விடயப் பொருள் பற்றி இனி யாருமே அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

ஜெனிவாக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான் தீர்மானம் நிறைவேறியதன் பின்னர், இனப்பிரச்சினையை சர்வதேச சமூகம் தத்தெடுத்து விட்டது என்ற முடிபிலேயே தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிபுற்ற போருக்குப் பின்னர், 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி ஐ.நா.மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேறியுள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பில் நிறைவேறியிருப்பதால் அதற்கு சரியான பதிலை – செயற்றிட்டத்தை இலங்கை அரசு வழங்கியாக வேண்டும்.

ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறியதற்குப் பின்னர் இலங்கை அரசும் அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச, பேராசிரியர் பீரிஸ் ஆகியோரும் கூறிவரும் கருத்துக்கள் குறித்து யாருமே கவலை கொள்ள வேண்டியதில்லை.

ஏனெனில் அவர்கள் விளங்கியும் விளக்கமில்லாமல் கதைக்கின்றார்கள்.

ஜெனிவாத் தீர்மானம் என்பது சாதாரணமானதல்ல. அந்தத் தீர்மானத்தை சாதாரண நாடு கொண்டுவந்ததுமல்ல.

அதேநேரம் ஜெனிவாத் தீர்மானத்தை தோற்கடிப்பதில், இந்தியா தமக்கு உதவும் என்று, இலங்கை முழுமையாக நம்பியிருந்தது.

ஆனால் அந்தத் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவாக வாக்களித்தமையானது, இப்படித்தான் சர்வதேச சமூகம் மாறிக் கொள்ளும் என்பதை இலங்கை அரசுக்குப் புரிய வைத்துள்ளது.

எனவே ஜெனிவாத் தீர்மானம் எங்களை எதுவும் செய்ய முடியாது.

நாங்கள் அஞ்சமாட்டோம் என்று யார் வீராப்பு பேசினாலும் அது உள்ளார்ந்தமானதல்ல.

மாறாக அது விழுந்தாலும் மீசையில் மண் முட்டவில்லை என்ற வழுவமைதலின் பண்பட்டதாகும்.

எனவே இலங்கை அரசு – அதன் ஆட்சியாளர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது ஜெனிவாத் தீர்மானத்திற்கு ஏற்ப உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் அதற்கான அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கை இன்னொரு வாக்கெடுப்பாக இருக்கமாட்டாது.

அதேசமயம் யுத்தத்தின் போதெல்லாம் மறைகரமாக நின்று உதவிய இந்தியா, வெளிப்படையாக இலங்கையை எதிர்த்துள்ளது.

இலங்கை அரசையும் இந்தியாவையும் பகைக்கவைக்க முடியாது என்ற நிறுத்திட்டமான நிலையில்,

ஜெனிவாத் தீர்மானம் மிக எளிதாக – எக் காலத்திலும் மறக்க முடியாத வகையில், இலங்கை – இந்திய உறவை கசக்கி விட்டது.

ஆக, இலங்கை அரசு தொடர்ந்தும் வீராப்புப் பேசுகின்றபோது, அது அமெரிக்காவோடு சேர்த்து இந்தியாவையும் அவமரியாதைப்படுத்துவதாக இருக்கும். இத்தகைய நிலைமை இலங்கைக்கு ஆரோக்கியமானதல்ல.

எதுவாயினும் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை என்ற பேச்சை, தமிழ்த் தரப்புகள் மறந்தேனும் உச்சரிக்கலாகாது.


எல்லாம் வெற்றிகரமாக நடக்கும்.

பொறுத்திருந்தால் போதும்.

# பிரி.வெளிவிவகார செயலருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## உலகத் தமிழர் பேரவை முயற்சி

(லண்டன்)



இலங்கையின் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் இலங்கையின் சிரேஷ்ட இராணுவ அதிகாரியான ராஜதந்திரி ஒருவரை வரவேற்கப்படாத நபராக பிரகடனப்படுத்தத் தவறியமைக்கு எதிராக பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹேக் மீது உலகத் தமிழர் பேரவை சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தற்போது இலண்டனில் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு விவகார அதிகாரியாக பணியாற்றும் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவை வரவேற்கப்படாத நபராக பிரகடனப் படுத்தத் தவறியதால் வில்லியம் ஹேக்கிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை பிரின்பேர்க், பெய்ர்ஸ் மற்றும் பார்ட்னர்ஸ் எனும் சட்ட நிறுவனத்திடம் உலகத் தமிழர் பேரவை ஒப்படைத்துள்ளது.

2009 ஜனவரி மற்றும் மே மாதங்களுக்கிடையில் தமிழ் பொது மக்களை திட்டமிட்ட ரீதியில் தாக்கியதில் சம்பந்தப்பட்டதாக மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா மீது உலகத் தமிழர் பேரவை குற்றம் சுமத்தியுள்ளது. இவர் 2010 ஆண்டிலிருந்து பிரிட்டனில் வசிக்கிறார்.

இந்த அறிவுறுத்தல் தனக்கு கிடைத்ததை உலகத் தமிழர் பேரவைக்கு எழுதிய கடிதம் ஒன்றில் மேற்படி சட்ட நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

தனி நபர்களின் இராஜதந்திர பாதுகாப்பை நீக்கும்படி வெளிநாட்டு அரசாங்கங்களை கோருவதற்கான அதிகாரத்தை பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவலகம் கொண்டுள்ளது எனவும் இதன்மூலம் இந்நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட முடியும் எனவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## நிர்வாகக்கூட்டம்

வலி.தென்மேற்கு இளைஞர் கழக சம்மேளனத்தின் நிர்வாக சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வலி. தென்மேற்கு இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)


## அலங்கார உற்சவம்

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் அரசடி ஞானவைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெற்று பத்தாவது நாளன்று காலை சங்காபிஷேக பூஜையும் பதினொராவது நாள் மகேஸ்வர பூஜையும் அதனைத் தொடர்ந்து மாலை கிராம ஊர்வலமும் இடம்பெறவுள்ளது.

பூஜைகள் யாவும் மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ-3)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### இன்பம் முப்பது



வேத சாத்திரங் கற்றிடல் இன்பமே
வீணர் நட்பினை விட்டிடல் இன்பமே
மாதம் மும்மழை பெய்திடல் இன்பமே
மாத ராசையை நீக்கிடல் இன்பமே
நாதன் நாமத்தை ஓதுதல் இன்பமே
நாம்சி வமென நாடுதல் இன்பமே
பேதம் யாவையும் நீங்கு பெரியவ!
பெருமை சேர்குரு புங்கவ சிங்கமே!

# பாவத்துக்காய் மரித்து வாழ்வுக்காய் பிறப்போம்

## பரமபிதா காட்டிய பாதை

இன்று நாம் வாழும் சமூகத்தில் இறப்புக்கள் பலவாறு பேசப்படுகின்றன. உடல் ரீதியான இறப்பை மட்டுமே இறப்பு என கருதிவந்த சமூகம் அதற்கும் அப்பால் சென்று இறப்பின் நிலைகளை புரிந்து அவற்றில் இருந்து உயிர்பெற துடிப்பது இன்றைய யதார்த்தம். வாழ்வில் நிம்மதியில்லாத சூழ்நிலையில் உணர்வு ரீதியாக அடக்குமுறைகளுக்குள் ஒடுக்கப்பட்டதனால் உரிமை ரீதியாக உண்மையைத் தொலைத்து பொய்மையில் வாழ்வதனால் ஆன்மீக ரீதியாக மனிதர்கள் நாளும் இறந்து வெறும் ஆட்களாக மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒளிமயமான எதிர்காலம் ஒருநாள் விடியும் என்னும் எதிர்பார்ப்பு மனிதருக்கு என்றுமே இருந்து வந்துள்ளது. ஒருவர் வாழ்வில் முழுமையாக உயிர் பெற்று புதுவாழ்வுக்குள் நுழைவதே அந்த எதிர்பார்ப்பு.

இறைவனால் விசேட அழைப்புப் பெற்ற மக்களாகவிருந்தாலும் காலத்துக்குக் காலம் தங்களின் மனித நாட்டங்களை முதன்மைப்படுத்தி இறைவனை பிரிந்து வாழ்வை முன் நடத்தினார்கள் இஸ்ராயேல் மக்கள்.

இத னால் வாழ்வின் உண்மையை உணரத் தவறினார்கள், பாவம் செய்தார்கள், பல உயிர்களைப் பறிகொடுத்தார்கள், நாட்டைப் பறிகொடுத்தார்கள், ஈற்றில் அடிமைகளாக்கப்பட்டார்கள். விரக்தியின் விளிம்பில் துன்பங்களை அனுபவித்தபோது தான் வாழ்வின் உண்மையைப் புரிந்து கொண்டார்கள். வாழவைப்பவர் இறைவன் ஒருவரே என அறிந்து கொண்டார்கள். இந்த நிலையில்தான் இறைவாக்கினர் எசேக்கியேல் மூலமாக இறைவன் நம்பிக்கை ஒளியை அவர்களுக்கு கொடுக்கிறார்.


உலகின் தொடக்கத்தில் கடவுளின் ஆவி மனிதருக்கு உயிர் வழங்கியது போல (தொநூ 2:7), இப்போது தளர்ந்து போயிருந்த மக்களுக்கு கடவுளின் ஆவியானவர் புத்துயிர் அளித்து வாழ்வில் ஒரு நம்பிக்கையை கொடுத்து உண்மையை புரிய வைக்கிறார்.

இன்று சமூக அடிமைத்தனமும் சீர்கெட்ட மனிதவாழ்வால் பாவ அடிமைத்தனமும் உலகில் தலைவிரித்தாடுவது கண்கூடு. இதன் விளைவாக மனிதர்கள் இனரீதியாக, வர்க்கரீதியாக, மொழி ரீதியாக, கலாசார ரீதியாக, தொழில்ரீதியாக, மதரீதியாக பல்வேறுபட்ட முரண்பாடுகளூடாக பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இயேசுவின் உயிர்ப்பு நிகழ்ந்து விட்டது. ஆனால் இருள் இன்னும் அகலவில்லை. இவ்வுலகில் போரும் பசிப் பட்டினியும் இன்னும் நிலவுகின்றன. ஏழைகளும் அகதிகளும் ஒடுக்கப்பட்டோரும் மனிதமாண்பு இழந்து நிற்கின்றனர். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடு காட்டப்படுகிறது. ஆண்டவர் ஏற்பாடு செய்த நாள் இதுவே. ஆனால் நாம் இன்னும் மகிழ்ந்து அக்களிக்கமுடியவில்லை.

ஏனென்றால் உயிர்ப்பின் மாட்சியை நாம் இன்னும் முழுமையாக தமதாக்கவில்லை. இந்த உலகுக்கு உரியதாக்கவில்லை.

இந்நிலையில் இறைவார்த்தையில் நம்பிக்கைகொண்டு கிறிஸ்தவ விசுவாசத்தில் வாழும் எமது பொறுப்பு என்ன? அநியாயங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் அடிமைத்தனங்களுக்கும் எதிராகக் குரல் கொடுப்பதும் அதனால் ஏற்படும் சிலுவைகளை புன்முறுவலுடன் சுமந்து சுமுகமான உறவில் சுமைகளை மறந்து பிறரை நல்வாழ்வுக்கு அழைத்துச் செல்வதுமே எமது வாழ்வாக அமைய வேண்டும்.



இறைவனிடம் இருந்து நாம் பெற்ற வாழ்வை ஏனையவர்களோடு பகிர்ந்து அவர்களும் அதே வாழ்வைப் பெற்றுக் கொள்ள எம்மைக்கொடுப்பதே உண்மையான கிறிஸ்தவ வாழ்வாகும்.

எனவே வாழ்வின் விரக்தி அனுபவங்களினூடாக கல்லறை வாழ்வே நியதி எனக்கண்டு ஏழ்மை, தோல்வி என்னும் சிறைக்கூடங்களில் நடைப்பிணங்களாக அல்லற்படும் மக்களுக்கு வாழ்வு என்னும் நம்பிக்கையை கொடுக்கின்ற மக்களாகவிருந்து இறைவன் அளிக்கும் நிலைவாழ்வை நோக்கிப் பயணிப்போம்.

அருட்சகோதரர் ரமேஸ் அ.ம.தி

# கருணாநிதியை எதிர்த்துப் போட்டியிட்ட ராஜேந்திரன் அ.தி.மு.கவிலிருந்து நீக்கம்

(சென்னை)

திருவாரூர் தொகுதியில் தி.மு.க தலைவர் கருணாநிதியை எதிர்த்துப் போட்டியிட்ட குடவாசல் ராஜேந்திரன் உள்ளிட்ட ஏழுபேரை அ.தி.மு.கவிலிருந்து நீக்கி முதல்வர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார். கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை கட்சிக்கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு அவப்பெயரையும் களங்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட காரணத்தினால் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த குடவால் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், குடவாசல் எம்.ராஜேந்திரன், மாவட்ட மாணவர் அணி துணைச் செயலர் வழக்கறிஞர் ஏ.ஆனந்தராஜ், குடவாசல் பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் எம்.ஆர். அரசன்கோவன், குடவாசல் சண்முகம்(எ) தென்கோவன், பைங்காடு கிளைச் செயலர் சி.மகேந்திரன், மன்னார் குடி நகர மன்ற முன்னாள் உறுப்பினர் மற்றும் அனைத்துக் பொறுப்புகளிலிருந்தும் நீக்கப்படுகின்றனர்.

கட்சித் தொண்டர்கள் யாரும் இவர்களுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. இவ்வாறு அறிக்கையில் ஜெயலலிதா கூறியுள்ளார். சிறையில் இருக்கும் சசிகலா, கணவர் நடராஜன், தம்பி திவாகரன் ஆகியோரை சந்தித்து, தொடர்பில் இருப்பதாக இவர்கள் மீது புகார்கள் வந்ததால் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு உள்ளனர் என அ.தி.மு.க வட்டாரத்தில் கூறப்படுகிறது. (அ-2)

# தமிழகத்தில் 5 ஆண்டுகளுக்கு பின் சட்டத்தின் ஆட்சி நடக்கின்றது

## முதல்வர் ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

ஐந்து ஆண்டுகளுக்கு பின் இப்போது தான் தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி நடக்கிறது என முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

சட்டசபையில் தி.மு.க உறுப்பினர் திராவிடமணி பேசும் போது அவர் தெரிவித்த கருத்துக்கள் ஆளுங்கட்சித் தரப்பில் சர்ச்சையை ஏற்படுத்தியது. இவர் பேசும் போது முதல்வர் ஜெயலலிதா குறுக்கிட்டு கூறியதாவது, உறுப்பினர் கன்னிப் பேச்சு பேசுகிறாரோ என அமைச்சர்கள் குறுக்கிட்டு பதிலளிக்க வேண்டாம் என நான் கூறினேன்.

ஆனால் உறுப்பினர் விசமத்தனமாக பேசுகிறார். சட்டத்தின் ஆட்சியே நடக்கவில்லைஎன்றும் நில அபகரிப்பு சட்டத்தின் கீழ் தி.மு.கவினரை பழிவாங்குவதாகவும் கூறுகிறார். இது உண்மைக்குப் புறம்பானது ஐந்து ஆண்டுகளுக்குப் பின் இப்போது தான் சட்டத்தின் ஆட்சி நடக்கிறது. நில அபகரிப்பு வழக்குகளில் அரசு தலையிடுவதில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் அவர்களாகவே முன்வந்து பொலிஸில் புகார் அளிக்கிறார்கள். இதில் அரசு தலையீடு சுத்தமாக இல்லை என முதல்வர் கூறினார். (அ-2)




# ஏ.கே.அந்தோனி பதவி விலகவேண்டும்; பாரதீய ஜனதா கட்சி வலியுறுத்து

(புதுடில்லி)

இராணுவத்துக்கு தத்ரா நிறுவனத்திடமிருந்து லொறிகள் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது தொடர்பாக டில்லி மேல் சபையில் நேற்று முன்தினம் பாரதீய ஜனதா மூத்த தலைவர் பிரகாஷ் ஜாவத்கர் ஒரு பிரச்சினையை எழுப்பினார்.

அப்போது அவர் பேசும் போதும் தத்ரா நிறுவனத்திடமிருந்து இராணுவத்துக்கு லொறி வாங்கியது தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டு குறித்து 2009 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகளாக விசாரணை முடியவில்லை.

அப்படியென்றால் ஊழலை மூடி மறைக்க அரசும் இராணுவ மந்திரியும் முயற்சிக்கிறார்களா? ஊழலுக்கு ஆதரவு தருகிறபோது பதவியில் தொடர உரிமை இல்லை. இராணுவ மந்திரி பதவி விலக வேண்டும் என ஆவேசமாக கூறினார்.

இந்தப் பிரச்சினையில் 2 ஆண்டுகளுக்கு முன்பே விசாரணை நடத்துமாறு கூறி இராணுவ மந்திரி ஏ.கே. அந்தோனிக்கு மத்திய சுகாதாரத்துறை மந்திரி குலாம் நபி ஆசாத் கடிதம் எழுதியதையும் பிரகாஷ் ஜவாத்கர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# வேலை வழங்கக்கோரி உண்ணாவிரதம் இருந்த 400 பேர் பொலிஸாரால் கைது

(சேலம்)

மீண்டும் வேலைவழங்கக்கோரி சேலத்தில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு முயன்ற மக்கள் நலப்பணியாளர்கள் 400 பேரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

தமிழக அரசால் பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப்பணியாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்க வேண்டும் என்று சுப்ரீம் நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளதை ஏற்று மீண்டும் வேலை வழங்க வேண்டும் என்று மக்கள் நலப்பணியாளர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் சேலம், நாமக்கல்,தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய 5 மாவட்டங்களை சேர்ந்த மக்கள் நலப்பணியாளர்கள் நேற்று முன்தினம் சேலம் பழைய நாட்டாமை கழக கட்டடம் முன்பு சாகும்வரை உண்ணா விரதம் இருக்கப்போவதாக அறிவித்தனர். இந்த போராட்டத்துக்கு பொலிஸார் அனுமதி அளிக்கவில்லை.

மக்கள் நலப்பணியாளர்கள் சங்க சேலம் மாவட்ட தலைவர் மணி தலைமையில் நேற்று முன்தினம் காலை 8.30 மணிக்கு பழைய நாட்டாமை கழக கட்டடம் முன்பு மக்கள் நலப்பணியாளர்கள் திரண்டனர்.

சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அனுமதியில்லை. மீறிப் போராட்டம் நடத்த சென்றால் கைது செய்யப்படுவீர்கள் என்று எச்சரித்தனர். ஆனால், அதனை அவர்கள் ஏற்கவில்லை. போராட்டம் நடத்துவதில் உறுதியாக இருந்தனர்.

அதை தொடர்ந்து அவர்களை பொலிஸார் கைது செய்தனர். தொடர்ந்து போராட்டத்தில் பங்கேற்பதற்காக வந்த மக்கள் நலப்பணியாளர்கள் சங்க மாநிலதலைவர் மதிவாணன் உட்பட ஏராளமானவர்கள் அணி அணியாக கைது செய்யப்பட்டனர்.

இந்த போராட்டம் காரணமாக 164 பெண்கள் உட்பட 400 மக்கள் நலப்பணியாளர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் பொலிஸ்வானில் ஏற்றப்பட்டு சேலம் கோட்டைப் பகுதியில் உள்ள ஒரு திருமண மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த போராட்டம் காரணமாக சேலம் பழைய நாட்டாமை கழக கட்டடம் முன்பு நேற்று முன்தினம் காலை பெரும் பரபரப்பு நிலவியது. பலத்த பொலிஸ் பாதுகாவலும் போடப்பட்டிருந்தது.

போராட்டம் குறித்து சங்க மாநிலத்தலைவர் மதிவாணன் நிருபர்களிடம் கூறியதாவது,

சுப்ரீம்கோட் எங்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்று தீர்ப்பு கூறிய பின்னரும் மாநில அரசு எங்களுக்கு வேலை வழங்க மறுக் கிறது. இதை கண்டித்துச்சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்த வந்த எங்களை சேலம் பொலிஸார் கைது செய்துள்ளனர். சிறையிலும் எங்களுடைய போராட்டம் தொடரும் இன்யை தினம் தமிழகம் முழுவதும் 13 ஆயிரம் மக்கள் நலப்பணியாளர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர் என அவர் கூறினார். (அ-2)



இந்துசமய அறநிலை ஆட்சித்துறையில் பணிபுரியும் கூடுதல் ஆணையாளர்கள், இணை ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள், செயல் அலுவலர்கள், களப்பணியாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோருக்கு சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர்ஜெயலலிதா மடிக்கணனி வழங்குவதை படத்தில் காணலாம்.

# மரண தண்டனையை இரத்து செய்யுங்கள்

## ராஜ்யசபாவில் குரலொலித்தது

(புதுடில்லி)

மரண தண்டனையை இரத்துச் செய்யும் வகையில் சட்டம் கொண்டு வர வேண்டும் என பா.ஜ. மற்றும் சிரோன்மணி அகாலி தளம் கட்சி எம்.பி.க்கள் நேற்று முன்தினம் ராஜ்யசபாவில் வலியுறுத்தினர்.

ராஜ்யசபாவில் சிரோன்மணி அகாலி தளம் கட்சி எம்.பி, நரேஷ் குஜ்ரால் இந்த பிரச்சினையை எழுப்பினார். அவர் கூறுகையில், நாகரிக உலகில் அதிகபட்ச தண்டனையான மரணதண்டனை ஒவ்வொரு நாடுகளிலும் படிப்படியாக இரத்து செய்யப்பட்டு வருகிறது.

சீனா, வடகொரியா, ஏமன், சவதி அரேபியா உள்ளிட்ட சில நாடுகளில் தான் இந்தத்தண்டனை உள்ளது. இந்தியாவிலும் இந்த தண்டனையை இரத்து செய்ய வேண்டும். அதற்காக சட்டம் கொண்டு வரவேண்டும். அன்பை நேசிக்கும் எந்த நாடும் மரணதண்டனையை ஆதரிக்காது என்றார்.

பா.ஜ. உறுப்பினர் எஸ்.எஸ் அலுவாலியா கூறுகையில், மரணதண்டனை இரத்து செய்வதற்கு சட்டம் கொண்டு வரவேண்டும். சமுதாயத்துக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நெறிமுறைகளை போதிக்கும் இந்தியா இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

பஞ்சாப் முன்னாள் முதல்வர் பியாந்த் சிங் கொலை வழக்கில் பஞ்சாப்பைச் சேர்ந்த பல்வந்த் சிங்கிற்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தண்டனையை இரத்து செய்ய வலியுறுத்தி பஞ்சாபில் போராட்டங்கள் நடந்து வரும் சூழ்நிலையில் ராஜ்யசபாவில் நேற்று முன்தினம் இது குறித்து உறுப்பினர்கள் வலியுறுத்தினர். (அ-2)

## பஞ்சாப் அமைச்சருக்கு 5 ஆண்டுகள் சிறை

மகள் இறப்பு வழக்கில் பஞ்சாப் மாநில அமைச்சர் ஒருவருக்கு சண்டிகார் நீதிமன்றம் ஐந்தாண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. பஞ்சாப் மாநில அமைச்சரவையில் சுகாதரத்துறை அமைச்சராக ஜாகிர் கவுர் என்பவர் பதவி வகித்து வருகிறார். தன்னுடைய மகள் ஹார்ப்ரீத் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்த கமல் ஜித்சிங் என்பவரை காதலித்த குற்றத்திற்காக மகளைக் கொலை செய்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஸ்டாலினுக்கு அனுமதி மறுப்பு; தி.மு.க.எம்.எல்.ஏக்கள் வெளிநடப்பு

(சென்னை)

சட்டசபையில் கேள்வி நேரம் முடிந்ததும் சட்டசபை தி.மு.க. குழுத் தலைவர் ஸ்டாலின் எழுந்து பேசுவதற்கு அனுமதி கேட்டார். அதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்தார். இதைத் தொடர்ந்து தி.மு.க. எம்.எல். ஏக்கள் வெளிநடப்புச் செய்தனர். சபைக்கு வெளியே பேசிய ஸ்டாலின் முன்னாள் அமைச்சர் நேருவின் தம்பி ராமஜெயத்தின் கொலையில் அரசியல் பின்னணி இருப்பது போல் பத்திரிகைகளில் பரவலாக செய்திகள் வருகின்றன.

இந்த கொலை குறித்து சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்று அரசை வலியுறுத்துவதற்காக எழுந்து பேச முயன்றோம். சபாநாயகர் அனுமதிக்காததால் வெளிநடப்புச் செய்தோம் என்றார். (அ-2)

# 2-வது இருபது -20 போட்டியில்


# ஆஸியை வீழ்த்தியது மே.தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான இரண்டாவது இருபது-20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பார்படோஸில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் விக்கெட்டுக்காக 6.3 ஓவர்களில் 72 ஓட்டங்களைக் குவித்தது. எனினும் அதன் பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 19.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக டுவைன் சிமித் 34 பந்துகளில் 63 ஓட்டங்களையும், ஜோன்ஸன் சார்ள்ஸ் 37 ஓட்டங்களையும் டுவைன் பிராவோ 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக பிரட் லீ 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், டானியல் கிறிஸ்ரியன் மற்றும் ஷேவியர் டொகேர்ட்டி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



161 ஓட்டங்களை வெற்றி இலக்காக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது விக்கெட்டை முதலாவது ஓவரிலேயே இழந்தது. எனினும் அதன் பின்னர் சுதாகரித்து ஆடிய போதிலும், சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த டேவிட் வோணர் நான்காவது விக்கெட்டாக ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி தடுமாறியது. இறுதியில் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோணர் 43 பந்துகளில் 58 ஓட்டங்களையும், அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பிடல் எட்வேர்ட்ஸ், மார்லன் சாமுவேல்ஸ் இருவரும் தலா 4 ஓவர்களில் 23 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். டுவைன் பிராவோ 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் டுவைன் சிமித்தும், போட்டித் தொடரின் நாயகனாக அவுஸ்திரேலியாவின் ஷேன் வோற்சனும் தெரிவாகினர்.

நேற்றுமுன்தினப் போட்டி முடிவை அடுத்து 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிபடைந்துள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரும் 2:2 என்ற கணக்கில் சமநிலையில் முடிபடைந்திருந்தது. அத்துடன் ஒரு போட்டி சமநிலையில் முடிபடைந்தது.

இதேவேளை இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் டெஸ்போட்டி எதிர்வரும் 7-ம் பிரிஜ்ரவுனில் ஆரம்பமாகவுள்ளது.

## ஐ.பி.எல். போட்டி; மைக்கல் கிளார்க்குக்கு 6 ஆட்டத்துக்கு ரூ.12 கோடி



5ஆவது ஐ.பி.எல். இருபது -20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகின்றது. மே 27-ம் திகதிவரை இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன. இப் போட்டியில் 9 அணிகள் பங்கேற்கின்றன.

விதிமுறைகளை மீறி செயல்பட்டதால் கொச்சி டஸ்கர்ஸ் அணி நீக்கம் செய்யப்பட்டது.

ஐ.பி.எல்.அணிகளில் அதிக தொகைக்கு புனே வாரியர்ஸ் அணி எடுக்கப்பட்டது. சகாரா நிறுவனம் ரூ.300 கோடிக்கு புனே அணியை எடுத்தது.

ஆனால் அறிமுக ஐ.பி.எல்.போட்டியில் புனே அணி எதிர்பார்த்த அளவு வெற்றியை பெறவில்லை. 14 போட்டியில் விளையாடி 4 ஆட்டத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. 9-வது இடத்தைப் பிடித்தது.

இதனால் இந்த ஐ.பி.எல்.போட்டியில் புனே அணியை நல்ல நிலைக்கு கொண்டு வர அந்த அணி நிர்வாகம் முடிபு செய்தது.

அதன்படி அவுஸ்திரேலிய டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி அணித் தலைவரான மைக்கல் கிளார்க்கை கடைசி நேரத்தில் ஒப்பந்தம் செய்தது.

கிளார்க் இதுவரை ஐ.பி.எல். போட்டியில் விளையாடவில்லை. தற்போது முதல் முறையாக ஆடவருகிறார்.

அவுஸ்திரேலிய அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகளில் விளையாடி வருகின்றது.

இந்தத் தொடர் முடிபடைந்த பின்னர்தான் தன்னால் ஐ.பி.எல்.போட்டியில் பங்கேற்க முடியும் என்று கிளார்க், புனே அணி நிர்வாகத்திடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இதை ஏற்றுக் கொண்டதால் அவர் சமீபத்தில் ஒப்பந்தம் செய்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் தொடர் ஏப்ரல் 27-ம் திகதி முடிகிறது.

எனவே அதன் பிறகுதான் கிளார்க் ஐ.பி.எல்.போட்டியில் ஆடுவார்.

அதன்படி பார்த்தால், கிளார்க் 6 லீக் ஆட்டத்தில் மட்டுமே விளையாட முடியும்.

இந்த 6 ஆட்டத்துக்கு அவர் ரூ.12 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

ஐ.பி.எல். போட்டியை விட நாட்டுக்காக விளையாடுவதில் தான் முன்னுரிமை கொடுப்பேன் என்று கிளார்க் கூறியுள்ளார்.

இதேவேளை, மேற்கிந்தியத் தீவுகளில் விளையாடும் மற்றைய அவுஸ்திரேலிய வீரர்களான மைக் ஹசி, ஹில்பென்ஹாஸ் (சென்னை சுப்பர் கிங்ஸ்), வோர்னர் (டில்லி டேர்டேவில்ஸ்), வோட்சன் (ராஜஸ்தான்), ஹாரிஸ் (பஞ்சாப்), பட்டின்சன்(கொல்கத்தா) ஆகியோர் ஐ.பி.எல். போட்டியில் தாமதமாக வந்து பங்கேற்பார்கள்.

### அனைத்துப் போட்டிகளிலும் சச்சின் விளையாடுவார்

ஐ.பி.எல். 5 சீசனில் அனைத்துப் போட்டிகளிலும் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் சச்சின் டெண்டுல்கர் விளையாடுவார் என அந்த அணியின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

டெண்டுல்கர் கால் விரல் சிகிச்சைக்காக லண்டன் சென்றிருந்தார். ஆனால் அவர் சிகிச்சை முடித்து தற்போது நாடு திரும்பியுள்ளார்.

அவர் திட்டமிட்டபடி நாளை மறுதினம் சென்னையில் நடைபெறும் ஐ.பி.எல். 5-ன் ஆரம்ப விழாவில் கலந்து கொள்வார். அதற்கு மறுநாள் நடைபெற இருக்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் மும்பை இந்தியன்ஸ் அணி மோதும் போட்டியில் விளையாடுவார். இவ்வாறு அவர் கூறினார்.

# இறுதிப் போட்டியில் ஜோக்கோவிச் -முரே



மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின் அரையிறுதியில் டேவிட் பெரரின் பந்தை திருப்பி அனுப்பும் செர்பியாவின் ஜோகோவிச்.

ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்றுவரும் மியாமி மாஸ்டர்ஸ் டெனிஸ் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீரர் நொவாக் ஜோக்கோவிச் மற்றும் நான்காம் நிலை வீரரான பிரித்தானியாவின் அன்டி முர்ரே ஆகியோர் மோதவுள்ளனர்.

உலகின் 21ஆம் நிலை வீரர் ஜுவான் மொனாக்கோ மற்றும் நொவாக் ஜோக்கோவிச் ஆகியோரிடையே இடம்பெற்ற அரையிறுதி போட்டியில் நொவாக் ஜோக்கோவிச் 6-0, 7-6 என்ற கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

முன்னதாக அன்டி முரே மற்றும் ஸ்பெயினின் ரபேல் நடால் ஆகியோரிடையே இடம்பெறவிருந்த அரையிறுதிப் போட்டியில் ரபேல் நடால் விலகிக்கொள்ள அன்டி முரே இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

தனக்கு ஏற்பட்டிருந்த முழங்கால் உபாதை தொடர்ந்தும் மோசமடைந்ததன் காரணமாகவே ரபேல் நடால் மியாமி மாஸ்டர்ஸிலிருந்து விலகினார்.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் தரவரிசைப் பட்டியலில் இரண்டாமிடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும் 5-ம் நிலை வீராங்கனையான போலந்தின் அக்னியெஸ்கா ரட்வான்ஸ்காவும் மோதவுள்ளனர்.

# 2-வது டெஸ்டில் அஞ்சலோ மத்யூஸ்

இங்கிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இலங்கை அணியின் உபதலைவர் அஞ்சலோ மத்யூஸ் இடம் பெற்றுள்ளார்.

தவிர இலங்கை அணியின் ஆரம்ப பந்து வீச்சாளர் சானக வெலகெதர காயம் காரணமாக அணியில் இருந்து விலக - அவருக்குப் பதிலாக சமிந்த எரங்க அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இணைக்கப்பட்டிருந்த அஞ்சலோ மத்யூஸ் போதிய உடற்தகுதியின்மை காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட வேண்டி ஏற்பட்டது.

அஞ்சலோ மத்யூஸ் நீக்கப்பட்டதன் காரணமாக மாற்று வீரராக அணியில் சேர்க்கப்பட்டிருந்த சாமர சில்வா அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

எனினும் டெஸ்ட் அணி அறிவிக்கப்படும்போது அணியில் சேர்க்கப்பட்டிராத சாமர சில்வா, அஞ்சலோ மத்யூசிற்கு மாற்று வீராக அணியில் பின்னர் சேர்க்கப்பட்டார்.

இலங்கை -இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ள நிலையில் 2-வது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் கொழும்பில் ஆரம்பிக்கவுள்ளது.



வெனிசுலாவில் நடந்த கோபா கால்பந்து போட்டியில், பிரேசில் புளுமின்சே; வெனிசுலா ஜமோரா அணிகள் மோதின. பந்தை தட்டிச் செல்ல ஆக்ரோஷமாக போராடிய இரு அணி வீரர்கள்.

# நாட்டுத்தலைவரை... எதிர்த்து...

ஏகாதிபத்தியவாதிகள் பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னிருந்தே எமது நாட்டை கைப்பற்ற முயற்சித்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என பலர் பலமுறை முயற்சி செய்த போதும் அவர்களால் எம் மத்தியில் ஒற்றுமை இருக்கும் வரைக்கும் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

ஆனாலும் நாட்டின் சில பிரதானிகள் அன்றைய அரசருக்கு எதிராக ஆங்கிலேயரிடம் நாட்டைக் காட்டிக் கொடுத்ததன் காரணமாகவே ஆங்கிலேயரால் எம்மை ஆளமுடிந்தது.

ஏகாதிபத்தியத்திற்கும், பிரிவினைவாதத்திற்கும் எதிராகவே இன்று இங்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்று கூடியுள்ளீர்கள்.

ஒரு சில அரச சார்பற்ற நிறுவனம் என்று கூறிக்கொள்ளும் அமைப்புக்களும் கனவு காணும் சில அரசியல் கட்சிகளும் நாட்டுக்கு எதிராகச் செயற்படுகின்றன.

அவர்களுக்குநான் கூறவிரும்புவது, நாட்டின் அதிகாரத்தை கைப்பற்ற முன் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றுங்கள். அதற்கு பின் நாட்டைப் பற்றி சிந்திக்கலாம் என்பதாகும். இவர்களது பொய் பிரசாரங்களுக்கு ஏமாறாமல் நாட்டின் பாதுகாப்புக்கு அனைவரும் ஒன்று சேர வேண்டும்.

இந்த நாட்டு மக்களுக்கு தேவையான வளமான வாழ்வையும் பொருளாதார ஸ்திர நிலையையும் ஏற்படுத்த அனைவரும் ஒன்று சேருமாறு வேண்டுகின்றேன் என்றார். (எ-11)

துள்ளது. அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, நோர்வே, ஸ்பெயின், இந்தியா, ஹங்கேரி, செக் குடியரசு, போலாந்து, மோல்டோவா, ருமேனியா, பெல்ஜியம், இத்தாலி, ஆஸ்திரியா, மெக்ஸிக்கோ, பெரு, உருகுவே, கொஸ்டரிக்கா, குவாத்தமாலா, சிலி, நைஜீரியா, பெனின், லிபியா, மொரிசியஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தூதுவர்களே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கைத் தூதரகங்கள் இல்லாத நாடுகளிலும் தூதுவர்களாக பணியாற்றி வருகின்றனர். (எ-11)

# இடைத்தங்...

பலரைத் தாக்கியிருக்கின்றன. வீடுகள் சரிந்ததனாலும் பலர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பொலிஸாரும் முகாம் பொறுப்பதிகாரியும் வந்து பார்த்து பாதிப்படைந்தவர்களைப் பதிவு செய்யுமாறு அறிவித்துச் சென்றதாகவும் இரவு உணவுக்கோ வேறு உதவிகளுக்கோ எவ்விதஏற்பாடுகளையும் செய்யவில்லை என்றும் அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

கூரைத் தகரங்கள் பறந்து சென்றதால் பலரது உடைமைகள் மழையினால் பாதிக்கப்பட்டன. சிலர் மாற்றுத் துணி இன்றியும் அவலப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# அரசுடன் கூட்டமைப்பு...

திற்கு மேலாக அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி விட்டோம். ஆனால் இவ்விவகாரம் தொடர்பில் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இடம்பெற மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒன்று தேவை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

இந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர் எவராக இருக்க வேண்டும் என்பதில் எனக்கு குறிப்பான முடிபுகள் எதுவுமில்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் சார் அமைப்பு அல்லது வேறுநாடுகளின் அமைப்புகள் இதற்கு பொருத்தமாக இருக்கலாம்.

எமது கடந்தகால அனுபவத்தின்படி இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான பேச்சுவார்த்தையை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இத்தகைய மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அவசியமானது எனக் கருதுகிறேன் என்றார்.

அதேவேளை வெளியாரின் தலையீடுகள் எதுவுமின்றி இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்ற அரசாங்கத்தின் கருத்தை அவர் நிராகரித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கம் முன்னரும் பல குழுக்களை நியமித்திருந்தது. சர்வ கட்சி பிரதிநிதிகள் குழு, நிபுணர் குழு போன்றவை இதில் அடங்கும். இந் நிலையில் அரசாங்கம் தற்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு குறித்து பேசுகிறது. அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோது அரசாங்கம் நாடாளுமன்ற மேல்சபை, இந்திய பஞ்சாயத்து முறைமை என்பவை பற்றிக் கூறியது.

மத்தியில் அதிகாரப்பகிர்விற்கான ஏற்பாட்டில் ஒன்று என்ற வகையில் நாம் அதை ஆதரித்தோம். ஆயினும் மாகாண மட்டத்தில் அதிகாரப் பகிர்விற்கான ஒரு ஏற்பாடு தேவை. ஐக்கிய இலங்கையினுள் அதியுயர் அதிகாரப் பகிர்விற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூட கூறியுள்ளார் என சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பது தொடர்பில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வகிப்பதை இலங்கையின் அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க நிராகரித்துள்ளார். (எ-11)

# 300 கோடி ரூபாய் வரு...

கார், வான், முச்சக்கரவண்டி வாகனங்கள், மோட்டார் சைக்கிள் உட்பட மோட்டார் வாகனங்களின் வரியும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்குடன் இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

இது எரிபொருள் பாவனையை குறைக்க உதவும் என அவ் அமைச்சு தெரிவித்துள்ளது. பெற்றோலில் இயங்கும் 2 ஆயிரம் சிசி க்கு உட்பட்ட வாகனங்களுக்கான உற்பத்தி வரி 85 சத வீதத்தாலும், 2 ஆயிரம் சிசி க்கு மேற்பட்ட வாகனங்களுக்கான வரி 114 சதவீதத்தாலும், 3 ஆயிரம் சிசி இயந்திரக் கொள்ளளவுக்கு மேற்பட்ட வாகனங்களின் வரி 129 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

டீசல் வாகனங்களைப் பொறுத்தவரை 1600 சிசிக்கு உட்பட்டவற்றுக்கு உற்பத்தி வரி 114 சதவீதத்தாலும் 1600-2000 சிசி வாகனங்களுக்கு 129 சதவீதத்தாலும், 2 ஆயிரம் - 2ஆயிரத்து 500 சிசி வாகனங்களுக்கு 143 சதவீதத்தாலும் 2500 சிசிக்கு மேற்பட்டவற்றுக்கு 173 சதவீதத்தினாலும் உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

பல் எரிபொருள் மூலங்களில் இயங்கும் (ஹைபிறைட்) வாகனங்களில் 1000 சிசிக்கு உட்பட்ட இயந்திர கொள்ளவுடைய வாகனங்களுக்கான உற்பத்தி வரி 14 சதவீதத்தாலும் 2000 சிசிக்கு மேற்பட்ட வாகனங்களுக்கான வரி 40 சதவீதத்தாலும், 3000 சிசிக்கு மேற்பட்ட வாகனங்களுக்கான உற்பத்திவரி 57 சதவீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள்களுக்கான வரி உற்பத்தி 51 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் ட்ரக்டர்கள், பஸ்கள், லொறிகளுக்கான வரிகளில் மாற்றம் ஏற்படவில்லை.

### சிகரெட், மதுபானம்

சிகரெட் விலைகள் பியர் மற்றும் மதுபானம் ஆகியவற்றின் வரிகள் என்பன உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

அனைத்து வகை சிகரெட்டுக்களின் விலைகளும் ஒரு ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்படும் பியர் லீற்றர் ஒன்றுக்கான வரி 5 ரூபாயினாலும் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பியர் வரி 5 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சாராயத்தின் வரி 60 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சிகரெட் மற்றும் மதுபான வரி அதிகரிப்பு மூலம் மேலும் சுமார் 300 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என நிதியமைச்சு மதிப்பிட்டுள்ளது. (எ-11)


## விற்பனைக்கு

விரிவுரைக் கதிரைகள், புதிய வகை (குஷன்) Epson புறொஜெக்டர் (புதியது) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0786722209 (8070)

A/L கலை, வர்த்தக மாணவர்களுக்கென யாழ்ப்பாணத்தில் சேவையாற்றி சிறந்த பெறுபேறுகளுக்கு உதவிய ஆசிரியர்களின் வழிகாட்டலில்

## CAC

College of Arts & Commerce

கந்தர்மடம் சந்தி, பலாலி வீதி, யாழ்.

ஆரம்பம்: 07.04.2012

இன்று முதல் அனுமதிகளை பெறலாம்.
ஆசிரியர்கள் பற்றிய விபரம் விரைவில் பத்திரிகைகளில் (8068)

## மின் உபகரணங்கள் பழுது பார்த்தல்

Washing Machine (Full Auto, Semi Auto), T.V, Radio, Hi Fi Set up, Fan, Rice Cooker, Blender, Fridge மற்றும் வீட்டு மின் உப கரணங்கள் அனைத்தும் உங்கள் வீட்டுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டு வயரிங் திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: 0778000748 (8066)

## சதாபொன்ஸ் கல்வி நிலையம்

அல்வாய்

O/L Day Class

ஆரம்பம்: 04.04.2012
புதன் காலை 7.00 மணி (C-6221)

## வாடகைக்கு

வெள்ளவத்தையில் A/C, Non A/C அறைகள் Hot Water, Kitchen, Washing Machine போன்ற வசதிகளுடன் நாள், வார, மாத வாடகைக்கு அறைகள் உண்டு.

தொடர்பு: 0756438583 (8070)

## பணியாளர் தேவை

தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு

1. விற்பனையாளர்
2. சிட்டை எழுதுனர்
3. மேற்பார்வையாளர்
4. கணனி இயக்குனர் (பெண்)

இருபாலாரும் நேரில் தொடர்பு கொள்ளவும்.
அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

யாழ் போன் சொப்

இல. 10, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
TP:- 0773611282 (8071)

## O/L Day Classes

பிரிவு I

ஆரம்பம்: 03.04.2012 மு.ப. 9.00 மணி

- (8.30 - 1.30 வரை வகுப்புக்கள் நடைபெறும்)
- அனுமதியை முன்கூட்டியே பதிவு செய்யவும்.
- ஒவ்வொரு மாதமும் பரீட்சை நடைபெறும்.
- 7 நாட்களும் கணிதம் நடைபெறும். (அடிப்படையிலிருந்து)

(A/L 2014, கணிதம், உயிரியல், கலை, வர்த்தக பிரிவுகள் ஆரம்பம்) (C-6203)

கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி (கொமர்ஷல் வங்கி அருகில்)
திக்கம் (சந்தை அருகில்)

## வின்றிச்

10 வரப்பிரசாதங்களுடன் ஐஸ்கிறீம் இயந்திரம்

50,000/- மேல் மாத வருமானம்




- சோயா. வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

விலை ரூ 99,000/- இல் இருந்து
புத்தம் புதியது

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902

## அவுஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
## லண்டன், சுவிஸ், பிரான்ஸ் விசா

இலவச சட்ட ஆலோசனைகளுக்கு.....

வாரத்தில் எல்லா நாட்களும்
(சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை நாட்களும் திறந்திருக்கும்)



திசைகாட்டி
(பிறைவேற்) லிமிடெட் (PV82703)
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

தலைமைக் காரியாலயம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 221 9016, 0756574136

- 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. ☎ 0212285544
- 231/3, மகேஸ்வரி வீதி, கொழும்பு 06. ☎ 0112366925
- மெல்போன், அவுஸ்திரேலியா. ☎ 0061390437100

(8069)

## திருமணம் செய்து UK செல்வதற்கான A1 Exam

Sponsor/Settlement Visa

DMI COMPUTER EDUCATION

# British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City & Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்
# City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீளளிக்கப்படும்.

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel.: 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, Tel.: 021-227 0243


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.